நண்ணூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில்

# விறலி விடுதூது


பதிப்பாசிரியர் :

**வித்துவான் வி. சொக்கலிங்கம்,**

தமிழ்த்துறை,

சரசுவதிமகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.



தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலைய நிர்வாகக் குழுவுக்காகக்

கௌரவக் காரியதரிசி

**திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களால்**

வெளியிடப்பட்டது.

ஸ்ரீ வாணீ விலாச அச்சகம்

ஸ்ரீரங்கம்

[விலை ரூ. 1-50

நண்ணூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில்

# விறலி விடுதூது

பதிப்பாசிரியர் :

**வித்துவான் வீ. சொக்கலிங்கம்,**

தமிழ்த்துறை,

சரசுவதிமகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலைய நிர்வாகக் குழுவுக்காகக்

கௌரவக் காரியதரிசி

**திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களால்**

வெளியிடப்பட்டது.

ஸ்ரீ வாணீ விலாச அச்சகம்

ஸ்ரீரங்கம்

கி. பி. 1969] [விலை ரூ. 1–50

உ

தமிழ் வாழ்க

# முன்னுரை

கொழுமணி யேர்நகை யார்கொங்கை
குன்றிடைச் சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண்
டாய்மெய்ம் முழுதுங் கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத்
தாட்கொண் டருளியென் னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண்
டாய்நின் புலன்கழலே !

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடியிலே பிறந்த தமிழ் மக்கள், அகப்பொருள் என்றும், புறப்பொருள் என்றும் பொருளை இரண்டாகப் பகுத்தனர். வேற்று நாட்டாரும் இவ்வாறு காணாத இவ் விரண்டனுக்கும் இலக்கணமும் வகுத்தனர் நமது பண்டைத் தமிழர்கள். ஒத்த தலைவனும், தலைவியும் தம்முள் ஒத்த காதலராய் ஒன்றுபட்டுக் கூடி மகிழ்ந்த இன்பத்தினை இத்தகையது எனப் பிறருக்குக்கூற இயலாததாய், அகத்தாலேயே உணர்ந்து இன்புறத் தக்கதனை 'அகம்' அல்லது 'அகப்பொருள்' என்றும், வாழ்வில் பலரும் அறியுமாறு வெளிப்படையாக நிகழும் புற நிகழ்ச்சிகளாகிய வீரம் கொண்டு போர் புரிதல், வெற்றி பெறல், வறியவர்க்கு வழங்கல், முதலானவற்றைப் 'புறம்' அல்லது 'புறப்பொருள்' என்றும் கண்டனர். இலக்கியம் கண்டதற் கிலக்கியம் கண்ட தமிழ் மக்கள் எழுத்தும், சொல்லும், யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டே எனத் துணிந்தனர். இதனை இறையனார் களவியலுரை வெளிப்படுத்தா நிற்கும்.

புணர்ச்சியின்பம் பெற விரும்பிய தலைவன், தனக்கேற்ற தலைவியினைத் தனியிடத்தே கண்டு, களவொழுக்கம் கொண்டு, கொடுப்பாரும் ஏற்பாரும் இன்றி, அவளைத் தனது வாழ்க்கைத் துணைவியாய் ஏற்று இல்லறத்தினை மேற்கொள்வது களவியல் என்றும், இருமுது குரவர்களும் தங்கள் மக்களுக் கேற்றவர்களைத் தெரிந் தெடுத்து, கொடுப்பக்கொண்டு திருமணம் செய்வித்து மனையறம்படுத்தல் கற்பியல் என்றும் பிரித்தனர்.

களவொழுக்கத்தே காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் நிகழ்ந்த பின்னர் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டம், ஆகியவற்றால் புணர்ச்சி நிகழ்வுறும். இவற்றுள்ளும் முதலாவதாகச் சொல்லப்

பட்ட காட்சி எனப்படும் எதிர்நோக்கலே, பின்னர் நிகழ இருக்கும் எல்லா நெறிகட்கும் காரணமாகும். அக்காட்சி, தலைவன் தலைவியிடையே எதிர்பாராது ஏற்படுதல், உலா வருங்கால் ஏற்படுதல் முதலானவைகளால் நிகழ்வுறும். உலா வினை, அழகும் ஆண்மையும், வீரமும், காளைப்பருவமும் நிரம்பப் பெற்ற தலைமகன் உலா வருங்கால் அவனது குலம், குடி, பிறப்பு, மங்கலம், முன்னோர்கள், முதலானவற்றைக் கூறி, அவன் உலாவரும் வீதியில் உள்ள பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுவகைப் பருவ மங்கையர்களும் அவனைக் கண்டு காமுறுவதாகப் பாடுவர். கடவுளரையும், மன்னர்களையும் பற்றிய உலாக்களும் உண்டு. நம்பியாரூரரின் தோழரான சேரமான் பெருமாள் நாயனார் இயற்றியருளிய "திருக்கைலாய ஞான உலா" மிகச் சிறந்த நூலாகும். உலா வருங்கால் நிகழ்ந்த காதல் சிறப்புரைக்கும் காவியங்கள் பல. அவற்றுள்ளும் 'உலா' எனும் பெயரால் இதுகாறும் தெரிய வந்துள்ள பெயர்களும் ஆசிரியர்களும் கொண்டவை சுமார் எழுபதுக்கும் மேற்பட்டவை எனலாம்.

உலா வருங்கால் காதல் கொள்ளுதலேயன்றி, தலைமகன் வேட்டைக்கு வர, அணித்துள்ள பூங்காவிலே பூக்கொய்ய வந்த தலைமகள், அத்தலைமகனைக் கண்டு காதல் கொண்டு, அதனால் ஏற்பட்ட துன்பத்தினைத் தோழியரிடம் கூறுவதாக அமைந்தது "காதல்" காவியம் ஆகும். வான்கலந்த மாணிக்கவாசகரின் தேன்கலந்த திருவாசகத்தே "அன்னைப்பத்து" என்ற தலைப்பினைக் கொண்ட செய்யுட்களைக் கொண்டு, பின்னர் எழுந்தனவே 'காதல்' நூல்களாம். ஆகவே எல்லாக் காதல் நூல்களுக்கும் முதல் நூல், மணிவாசகரின் அன்னைப் பத்தாம். அண்மையில் "முருகர் கதம்பம்" என்ற எமது மகால் வெளியீட்டில் உள்ள "கந்தர் காதல்" என்ற நூலும் சிறப்புடையதொரு நூலாம். அவ்வாறு எழுந்த "காதல்" நூல்கள் சுமார் அறுபதுக்கும் மேற்பட்டவை எனலாம.

காதல் கொண்ட பிற்றை காதலர்களிடையே பல்லாற்றுன் பிரிவு நிகழ்தல் உண்டு. பிரிவினால் துயருற்ற காதலர்களிடையே 'தூது' நிகழ்தல ஒரு சிறப்புச் செயலாகும். தங்கள் தஙகள் எண்ணம் நிறைவேறுமபொருட்டுத் தக்கார் ஒருவரையோ தக்கதொன்றனையோ தூதுவிடுதல மரபு. பாங்கன், பாங்கி, பாணன், விறலி, முதலான உயர்திணையரையும, கிளி, வண்டு, குயில், அன்னம, மயில், நாகணவாய்ப்புள், நெஞ்சு, தென்றல், மேகம, மான், துகில், நெல், புகையிலை, பணம் முதலான அஃறிணைப பொருளகளையும தூதாக விடுவர். அவைகளைத் தூதுவிட்ட இலக்கியஙகள் சுவையூட்டுவன. தூது நூலில், தூது செல்வோரின் சிறப்பும், மற்றையதின இழிவும, தூதனுப்புவோர செயலும், தூது ஏற்போர் சிறப்பும், தூதனுப்புவோர் வேண்டுகோளும, தூது செல்வோர அடையும பயனும் கூறப்படும. அவ்வாறு தூதுச சுவைமிகுந்த நூலகளில இதுவரை தெரியவந்த நூலகளின அகரவரிசைப பட்டியல வருமாறு :—

# இதுவரை தெரியவந்துள்ள
# தூது நூல்களின் அகர வரிசைப் பட்டியல்

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| | அ | |
| 1. | அலைவாய்ப் பெருமானிடம் ஆற்றொணாத் தூது | இரா. சு. சுப்பிரமணிய பிள்ளை |
| 2. | அழகர் கிள்ளைவிடு தூது | பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் |
| 3. | அன்னம்விடு தூது | நகரம் முத்துசாமிக்கவிராயர் |
| 4. | அன்னம்விடு தூது | மீ அல்லி மரைக்காயர் |
| | இ | |
| 5. | இராமநாதன் செட்டியார் மீது நெஞ்சுவிடு தூது | கோ. முத்தையாப் புலவர் |
| | க | |
| 6. | கச்சி ஆனந்த ருத்ரேசர் வண்டுவிடு தூது | கச்சியப்பமுனிவர் |
| 7. | கண்டியரசன் கிள்ளைவிடு தூது | சிற்றம்பலப் புலவர் |
| 8. | கமலவிடு தூது | வேங்கட கிருட்டின பாரதி |
| 9. | கமலினியார் தூது | ? |
| | கா | |
| 10. | காதர்கான் கிள்ளைவிடு தூது | சடாட்சரக் கவிராயர் |
| 11. | காதல்விடு தூது | வேங்கடரமண ஐயங்கார் |
| | கி | |
| 12. | கிருட்டின சுவாமி தூது | வில்லிபுத்தூரார் |
| 13. | கிளிவிடு தூது | அழகிய திருச்சிற்றம்பல அடிகள் |
| 14. | கிள்ளைவிடு தூது | வரத அடிகள் |
| | கு | |
| 15. | குமாரதேவர் நெஞ்சுவிடு தூது | திருப்பேரூர் சிதம்பர சுவாமிகள் |
| 16. | குயில்விடு தூது | ? |
| 17. | கொற்றங்குடியார் நெஞ்சுவிடு தூது | உமாபதி சிவாசாரியார் |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| | **ச** | |
| 18. | சங்கரமூர்த்தி விறலிவிடு தூது | சுப்பையர் |
| 19. | சண்பக நல்லூர்ச் சிவபெருமான் வண்டுவிடு தூது | சொக்கநாதப்புலவர் |
| 20. | சவ்வாதுவிடு தூது | ? |
| | **சி** | |
| 21. | சிதம்பரேசர் விறலிவிடு தூது | தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை |
| 22. | சிவஞானபாலைய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது | சிவப்பிரகாசர் |
| 23. | சின்னணைஞ்சுத்துரை விறலிவிடு தூது | தென்காசிக் கவிராசபண்டாரம் |
| 24. | சின்னத்தாதிவிடு தூது | ? |
| | **சு** | |
| 25. | சுப்பிரமணியதேசிகர் நெஞ்சுவிடு தூது (திருவாவடுதுறை) | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| | **செ** | |
| 26. | செங்குந்தர் துகில்விடு தூது | பரமானந்த நாவலர் |
| 27. | செண்டலங்காரன் விறலிவிடு தூது | ? |
| 28. | செருப்புவிடு தூது | பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் |
| | **சே** | |
| 29. | சேதுபதி விறலிவிடு தூது | ? |
| | **சொ** | |
| 30. | சொருபானந்தர் நெஞ்சுவிடு தூது | தத்துவராய அடிகள் |
| | **த** | |
| 31. | தத்தைவிடு தூது | டி. சரவணமுத்துப்பிள்ளை |
| 32. | தமிழ்விடு தூது | திருச்சி அமிர்தம்பிள்ளை |
| | **தா** | |
| 33. | தாதிவிடு தூது | ? |
| 34. | தானப்பாசாரியார் தசவிடு தூது? | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| | **தி** | |
| 35. | திருநறையூர் நம்பி மேகவிடு தூது | கிருட்டினமாச்சாரியர் |
| 36. | திருநறையூர் நம்பி மேகவிடு தூது | மணவாளதாசர் |
| 37. | திருப்பணி நயினார் மயில்விடு தூது | திருமலைசாமி ஐயங்கார் |
| 38. | திருப்போரூர் கிள்ளைவிடு தூது | பேரறிஞர் கந்தசாமி முதலியார் |
| | **து** | |
| 39. | துகில்விடு தூது | வெண்ணந்தூர் பத்தரய்யர் |
| | **தெ** | |
| 40. | தெய்வச்சிலையார் விறலிவிடு தூது | குமாரசாமி யவதானியார் |
| 41. | தென்றல் விடு தூது | பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் |
| | **ந** | |
| 42. | நங்கைவிடு தூது | இரா. மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 43. | நண்ணாவூர் சங்கமேசுவரி விறலிவிடு தூது | ( பாரதி முத்தையர் ) |
| 44. | நல்லூர் கந்தசாமி கிள்ளைவிடு தூது | சந்திரசேகர பண்டிதர் |
| 45. | நவனீத கிருட்டினதேவர் வன்சவிடு தூது | கன்றுப்பூர்க்கவிராயர் |
| 46. | நவனீத கிருட்டினர் தூது | கந்தசாமிப்புலவர் |
| 47. | நவீன மாது தூது | குமாரபண்டிதர் |
| | **நா** | |
| 48. | நாச்சியார் பிரபந்தத் தூது | ? |
| 49. | நாதையன் விறலிவிடு தூது | ? |
| | **நெ** | |
| 50. | நெஞ்சுவிடு தூது | அவிநாசிநாத சுவாமிகள் |
| 51. | நெஞ்சுவிடு தூது | உமாபதிசிவாசாரியார் |
| 52. | நெஞ்சுவிடு தூது | சட்டையப்ப அடிகள் |
| 53. | நெஞ்சுவிடு தூது | சிதம்பர அடிகள் |
| 54. | நெஞ்சுவிடு தூது | தத்துவராய சுவாமிகள் |
| 55. | நெஞ்சுவிடு தூது | தி. செ. முருகதாசப் பிள்ளை |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 56. நெஞ்சுவிடு தூது | மா. சிங்காரவேலு முதலியார் |
| 57. நெல்விடு தூது | ? |
| **ப** | |
| 58. பஞ்சவர்ணத் தூது | சின்னத்தம்பிப் புலவர் |
| 59. படுக்கைவிடு தூது | முத்துக்கிருஷ்ணப் புலவர் |
| 60. பணவிடு தூது | அட்டாவதானம் சரவணக் கவிராயர் |
| 61. பணவிடு தூது | மாதைத் திருவேங்கடநாதர் |
| 62. பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது | பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை |
| 63. பழனியாண்டவர் விறலிவிடு தூது | வே. முத்தனுச்சாரியர் |
| 64 பழையதுவிடு தூது | பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் |
| 65. பள்ளியறைத் தூது | பரமசிவன் பிள்ளை |
| **பா** | |
| 66. பாக்குவிடு தூது | ? |
| 67. பாவைவிடு தூது | ? |
| **பி** | |
| 68 பிள்ளைவிடு தூது | சாமிநாதபிள்ளை |
| **பு** | |
| 69. புகையிலைவிடு தூது | சீனிச்சர்க்கரைப் புலவர் |
| 70. புலந்திரன் தூது | ? |
| **பூ** | |
| 71. பூங்குழலாள் கிள்ளைவிடு தூது | அம்பலவாணப் பண்டாரம் |
| 72. பூவைவிடு தூது | ? |
| **பெ** | |
| 73. பெரியதம்பிப் பிள்ளை மான்விடு தூது | மங்கைபாகக் கவிராயர் |
| **பொ** | |
| 74. பொன்விடு தூது | அமிர்தம் சுந்தரநாதப் பிள்ளை |
| 75. பொன்னிவிடு தூது | பஞ்சநதம்பிள்ளை |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| **ம** | |
| 76. மணவைத் திருவேங்கடமுடையான் மேகவிடு தூது | |
| 77. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது | பெயர்தெரியாப் புலவர் |
| 78. மயில்விடு தூது | முத்துவேலுக் கவிராசர் |
| 79. மலர்விடு தூது | மகாராசபண்டாரம் |
| **மா** | |
| 80. மாதுவிடு தூது | வேங்கடரமண ஐயங்கார் |
| 81. மான்விடு தூது | நமச்சிவாயப் புலவர் |
| 82. மான்வேட்டான் மயில்விடு தூது | பொன்னம்பலம் பிள்ளை |
| **மு** | |
| 83. முத்துத்தாண்டவர் மேகவிடு தூது | மார்க்கசகாயர் |
| 84. முத்துவீரப்பபிள்ளை பேரில் மான்விடு தூது | மங்கைபாகக் கவிராயர் (?) |
| 85. முல்லையூர் தாண்டவராய பிள்ளை மீது மான்விடு தூது | குழந்தைக் கவிராயர் |
| **மூ** | |
| 86. மூத்தபிள்ளையார் தென்றல்விடு தூது | மோகன சுந்தரம்பிள்ளை |
| **மே** | |
| 87. மேகவிடு தூது | ? |
| **மை** | |
| 88. மைவண்ணன் மேகவிடு தூது | ? |
| **மோ** | |
| 89. மோகன வல்லித் தூது | வயிரவன் சேர்வை |
| **வ** | |
| 90. வண்டுவிடு தூது | அல்லிமரைக்காயர் |
| 91. வண்டுவிடு தூது | பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 92. வண்டுவிடு தூது | முசலூர் மீனுட்சி சுந்தரக்கவிராயர் |
| வா | |
| 93. வானவன் விடு தூது | ஞானப்பிரகாச முதலியார் |
| வி | |
| 94. விட்டலராயன் வண்டுவிடு தூது | ? |
| 95. விறலிவிடு தூது | அட்டாவதானியார் |
| வெ | |
| 96. வெள்ளையராசேந்திரன் துகில்விடு தூது | மங்கைபாகக் கவிராயர் |
| 97. வெற்றிலைவிடு தூது | ? |
| 98. வெற்றிவேற்கடவுள் மயில் விடு தூது | கந்தப்பக்கவிராசன் |
| வே | |
| 99. வேலாயுதன் மேகவிடு தூது | ? |
| வை | |
| 100. வையாபுரிப்பிள்ளை விறலிவிடு தூது | சிவப்பிரகாசப்புலவர். |

இவைகளையன்றி மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் முதலான நாயன்மார்களும், ஆண்டாள் நாச்சியார் முதலான ஆழ்வாராதியர்களும் தூதுவிட்ட செய்தியினை அவரவர்தம் நூல்களில் காணலாம்.

தேரூரும் திருவாரூரில் சுந்தரமூர்த்தி நாயனாரின் பொருட்டு எம்பெருமான் பரவைநாச்சியாரிடம் தூது சென்றதனை இந்நூலின் 929-ம் கண்ணியில் எடுத்துக் கூறியிருக்கின்றார். குறவஞ்சி முதலானவைகளில் "தூது" தனியிடம் பெறுகின்றது. கலம்பகத்தில் விரவிவரும். இதிகாசங்களான மாபாரதத்தில் கண்ணன் தூது சிறப்புடையது; இராமகாதையில் வீடணன் தூது குறிப்பிடத்தக்கது. அதியமான் நெடுமான அஞ்சிக்காக ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்றதைக் கூறுவது புறநானூறறுப் பாடல். மேற்சொன்ன மூன்று தூதும் போர் நிறுத்தம் காரணமாக எழுந்தவைகள். எனவே தூது செல்லுதல் காதலுக்கேயன்றிப் போருக்கும் பயனபட்டது என்பது புலனாகின்றது. காதலுக்கும், வீரத்திற்கும் கருவியான தூது தனது முழுவனப்பினைக் கொண்டு மிளிர்வது காதல்—தூது இலக்கியங்களிலேயேயாம.

மேற்கூறிய தூதுப்பட்டியலில் நமது நண்ணூர் சங்கமேசுவரி 'விறலி விடுதூது'ம் ஒன்றாகும் இது எமது மகால் தமிழ் M. No. 799 என்ற எண்ணுடையது. 64 ஏடுகளைக்கொண்டது. பக்கத்திற்கு 7 முதல் 10 வரிகளை யுடைய இச்சுவடி, செல்லரித்தும் ஏடுகள் முறிந்தும் தோற்றமளிக்கின்றது. முற்றுப்பெறாத இச்சுவடியில் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. தவறுகள் அதிகமாக இருப்பினும் ஆற்றொழுக்கான நடையினையுடையது. 'முஷ்த்தேதி' என்ற சொல் மூன்று இடங்களில் வந்துள்ளது.

" கற்றதனு லாய பயனென் கொல் வாலறிவன்
நற்று டொழாஅ ரெனின் "

என்ற குறட்பா 177-ம் கண்ணியில அமைந்துள்ளது.

மற்றும்,

" ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில் "

என்ற திருக்குறளும் 945ம் கண்ணியில் அமைந்துள்ளது.

" யானை யெருத்தம்போல் " எனத்தொடங்கும் நாலடியார் 3ம் பாடலை 910–911ம் கண்ணிகளிலும் " எறி என்று எதிர்நிற்பாள் " எனத்துவங்கும் நாலடியார் 363ம் பாடலை 935, 936ம் கண்ணிகளிலும் பொருத்தமுடன் அமைத்திருப்பது சுவைத்தின்புறத்தக்கது. 'ஐத்தெரி பாட்சா' என்ற சொல் 384ம் கண்ணியிலும், 'சாவண்டைக்காசு' எனும் காசுக்கடைச்சொல் 484ம் கண்ணியிலும் காணப்படுகின்றன. காவிரியும் பவானியும் கலக்குமிடம் சங்கமுகத்தீர்த்தம் என்று 691ம் கண்ணியில் குறிப்பிடுகின்றார். தொடக்கத்தில் இராமபிரான் கதையினைக்கூறி நிலமடந்தையினைச் சிறப்பித்தவர், கர்னாடக சங்கீதத்தினை ஒப்புமைப்படுத்தி விறலியினை (20–37) வருணிப்பது சுவை மிக்குடையது. பின்னர் (512–526) தாள வகைகளைக் கூறி நாட்டியச்சிறப்பினைப் புகழ்வது நயமாயுளது. விசித்திரமாகத் தோழிகட்குப் பெயரிட்டிருக்கிறார் நூலாசிரியர். இவர் சித்த மருத்துவத்தில் சிறந்தவர் என்பது (647–676) " வசிய மருந்து " செய்வதைக் குறிப்பிடுவதாலும் " ஆள் மயக்கிப் பொட்டு " செய்வதனைக் குறிப்பதாலும் பெறப்படுகின்றது. நண்ணூர் பட்டணத்துச் சிங்கார வரிசையில் (701–716) எல்லாத்தேசங்களையும் குறித்து வருணிக்கின்றார்.

பழமொழி நயங்கள் இந்நூலில் மிகுந்து காணப்படுகின்றன. 'வெந்நீர் கொதித்து மனை வெந்திடுமோ?', 'சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தது போல்', 'சாத்திரங்கள் சொன்னபல்லி தான் கழுநீர்ப் பானையில் வேத்து நழுவி விழுந்தது போல்' என்பன சான்றாகும்.

வேசிமனை சென்று பொருள் கொடுத்தவன், மேலும் கொடுக்கப் பணமில்லாதபோது, அவனை வேசையர் அவமதிக்கத் தாய்க்கிழவி, தன் மகளை அவன் கெடுத்துவிட்டதாக வைவதனை,

..............................................................." சின்னமச்சுக்
குள்ளே இருபொழுதும் ஓயாம லேயிடித்து
வெள்ளை கொடுத்து விட்டான் வீணனெந்தன் — பிள்ளைதனை
கட்டிக் கிடப்பான் முக்காலும் பிரியவொட்டான்
பட்டுக் கிடப்பான் பழிகாரன் — துட்டதெய்வம்
மாரியம்மன் கோவிலுக்கு மாவிடிச்சாப் போலிடிப்பான்
வீரியத்தைச் சற்றே விடானய்யா "

என்று அலறுவதனால் அறியலாம். வேசைமனை சென்று மீண்டுவந்து உணருகின்ற தன்மையினை

'மாலை கொடுத்தேன்; சூலை வாங்கினேன்' என்றும்,
" பட்டு கொடுத்தேன்; (சந்து சந்தாய்க்) கட்டு வாங்கினேன் " என்றும்,
" மோகம் கொடுத்தேன், மோகம் பெற்றேன் "

என்றும், மற்றும், 'எல்லா நோய்களும் வந்தன' என்றும், உருக்கமாய்க் கூறுவது அறியத்தக்கது.

" வேசிக்குக் காசுவிச்சி வேதினெனு தீசுகோனி
மோசமுறு னேனுபோத்தி முந்தானே — ஆசையினுத்
தொத்துலஞ்சா நாக்கிட்ட சூலைசே சேயெனவே
மெத்த வடுகர் மெலிவோரும் " (481-482) என்று

தெலுங்குச் சொற்களை அங்ஙனமே கையாண்டுள்ளார்.

" சிற்றறிவில் சின்னஞ் சிறியவர்கள் — நற்றிவந்தால்
வாருமென்று உள்ளறையில் பஞ்சணையின் மீதிருத்திக்
காரியத்தைப் பார்த்துக் கசக்காமல்—வீரியத்தைப்
போக்கியந்தச் சேதி பிறத்திக்குச் சொல்லாமல் " (368-370)

என்றும்

" ஊர்சச் சடங்கவிட்டு ஊமைபோ லேவருவார்
வாய்ச்சத்தம் பேசாம லேயழைத்து — பூச்சுக்
களபமுலை யோடிறுக்கிக் கட்டினால் போதும்
சளசளென வீரியத்தைத் தானே — ஒழுகவிட்டு
நிற்பார் கழுந்ததுபோல் " (428-430) என்றும்,
" நித்திரையில் கண்டதொரு
சொற்பனத்தில் காரியத்தைச் சோரவிட்டு — நிற்போரும் " (465)

என்றும் காமச்சுவை மிக்குக் கூறியுள்ளார்.

வேசையரின் முற்சுகமும் பின் விளைவும் கூறி மக்களை நல்வழிப்படுத்தும் நோக்குடன் இந்நூலை யாத்த இவர் மதுரைக்கரசி மனோன்மணி சொக்கலிங்கப் பெருமானுடைய திருவிளையாடல்களைச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கின்றார். நண்ணூரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சங்கமேசுவரனார் சங்கமேசுவரி மீது பெருமபற்றுடையார் என்பது, நண்ணூர் வருணனை, இழந்த செல்வத்தினை சங்கமேசுவரரிடம் வேண்டிப்பெறுதல், இந்நூலுக்குப் பெயரிட்டிருப்பது முதலான வற்றால தெரிகின்றது. இதன் இறுதி ஏடுகள் இல்லையாதலான் முடிவு தெரிந்திலது.

இற்றைய விறலிவிடுதூது இலக்கியங்களில் சுப்பிரதீபக்கவிராயர் இயற்றிய "கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது" யாவரும் அறிந்ததே. அந்நூலில், அட்டாவதானி எனும் தலைவன் பரத்தையர் வசப்பட்டுப் பொருளிழந்து, வறுமை யுற்று, கூளப்பநாயக்கனை அடைந்து, அவனிடம் பரிசில் பெற்றுத் திரும்பவும் இல்லடைந்து மனைவியின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு விறலியினைத் தூது விட்டதாகக் கூறப்படுகிறது.

அதேபோல 'சோடச அவதானி' எனும் தலைவன், 'காமரசக்குளிகை கண்ணாடி' எனும் பரத்தைபாற் சிக்குண்டு வான்பொருளிழந்து, நொந்து வருந்தி, நண்ணூர் சங்கமேசுவரர், வேதநாயகியாள் கோயிலடைந்து அவ்விறைவர் அருளால் பொருள் பெற்றுத் திரும்பவும் மனையடைந்தபோது மனையாள். கதவந்தாளிட அவ்வூடலைத் தீர்க்குமாறு விறலியினைத் தூதுவிட்டதாகக் கூறுவது இந்நூல்.

இத்துணைச் சிறப்பியல்புகளைக்கொண்ட இந்நூலாசிரியர் "வரத பாரதீ முத்தையர்" (போலும்) என்பது 132, 469-ம் கண்ணிகளால் தெரிகின்றது. இவரைப்பற்றிய முழு வரலாறும் தெரியவில்லை.

இவரது காலமும் இன்னதெனத்தெரியவில்லை. ஆயினும் இவர் தம் நூலில் (309-311) இரத்தாட்சி ஆண்டு சித்திரைத்திங்கள், செவ்வாய்க்கிழமை, சித்திரா பௌர்ணமி அன்று 'காமரசக்குளிகை கண்ணாடி' எனும் ஆடல்மாது அரங்கேற்றம் நிகழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றார். அதுகொண்டு ஆராயுங்கால் கி. பி 1804-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 24-ம் தேதிக்குச் சரியான இரத்தாட்சி ஆண்டு சித்திரைத்திங்கள் 14-ம் நாள் செவ்வாய்க்கிழமையும் பௌர்ணமியும் நிரம்பப் பெற்றுள்ளது. அதற்கு முன்னோ பின்னோ எனில் பன்னூருண்டுகள் ஆகக் கூடும். எனவே கி. பி. 1804-ம் ஆண்டில், தஞ்சையை இரண்டாம் சரபோசி மன்னர் (1798-1833) ஆண்டுவந்த காலத்தில் இந்நூல் எழுதப்பட்டிருக்கலாம், ஆகவே இந்நூலாசிரியர் காலம் கி. பி. 1804-ம் ஆண்டினுக்கு முன்னும் பின்னு மாக இருக்கலாம்.

இதன் ஆசிரியர் நூல் தொடக்கத்தில் இராமபிரானைச் சிறப்பித்து 1–14 கண்ணிகளில் கூறுதலாலும், தான் எடுத்துக்கொண்ட நூலுக்குரிய தலைவன் ஊர் திருப்பதி என உரைத்தலானும், காப்புச் செய்யுளில் 'நேமகரம் ஐந்துளபத் தானைமுன்' எனும் தொடரில் 'துளபம்' என்ற சொல் காணப்படுவதாலும் இவர் வைணவராக இருக்கலாம் எனக்கொள்ள இடம் இருக்கிறது. ஆயினும் "பாரதி முத்தையர்" என்பதால் இவர் சைவ அந்தணர் (ஸ்மார்த்தர்) எனத் தோன்றுகிறது. மதுரைத் திருவிளையாடல்களையும், சங்கமேசுரனூர் சிறப்பியல்பு களையும் மிகைபடக் கூறுதலான் இவர் சைவர் எனவே கொள்ளத்துணிவுண்டு. சைவம், வைணவம் இரண்டனையுமே இவர் மிகவும் சிறப்பித்துக்கூறுகின்ற காரணத்தால் சமய அடிப்படையில் இந்நூலாசிரியர் பொது நோக்குடையவர் எனத் தோன்றுகிறது.

இந்நூலாசிரியர் நுண்ணறிவும், புலமையுணர்வும் கொண்டவரெனத் தெரிகின்றது. இவர் பவானி முக்கூடலில வாழ்ந்தவராக இருக்கலாம். இவர் இயற்றிய மூலச்சுவடி கிடைக்குமாயின் இந்நூல் தனது முழு அழகோடு மிளிரும். இச்சுவடியில் சுவடிப்படியெடுத்தோரின் பிழைகள் மலிந்துகிடக்கின்றன. அத்துடன் இந்நூல் சரியான உருவம்பெற்றிலது இப்பிழைகளோடு, அடியேன் பிழைகள், அச்சுப்பிழைகள் முதலிய மற்ற எல்லாப் பிழைகளையும் பொறுத்தருள வேண்டுமென்று, இதனைக்கண்டு பயிலும் கண்டனைய கற்றோர்களைப் பணிவோடு வேண்டிக்கொள்ளுகின்றேன். அதனுல் இதன் வேறு சுவடிகள் கிடைக்குமாயின், அவற்றை எமது மகாலுக்கு அனுப்பித்தந்தால், இதன் மறுபிரதி பிழையின்றி வெளிவரப் பயன்படும். தமிழகம் இதனால நன்மை யெய்தும். இந்நூல் நன்முறையில் வெளிவர அனுமதிதந்த எமது மகால் கௌரவக் காரியதரிசி திருமிகு. நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கட்கு எனது மனமுவந்த நன்றி உரித்தாகுக. வாழ்க தமிழ்! வளர்க நற்றமிழர்!!

இங்ஙனம்

தஞ்சாவூர்
30—4—69

**புலவர். வி. சொக்கலிங்கம்,**
தமிழாசிரியன், சரசுவதிமால்.

**நண்ணூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில்**

# விறலிவிடு தூது

## கதைச் சுருக்கம்

திருமகளைத் துணைவியாகக்கொண்டு எலலா உயிர்களையும் காத்தருளுகின்ற இராமபிரானது கருணை நிறைந்த உலகத்தினில நாரதனைப்போல வீணை இசைத்து, இனிய பாடல்களைப்பாடி, மையல் கொண்டவர்களுக்கு தெப்பு சொல்லுகின்ற விறலியே ! (1-19)

கல்யாணி, சுருட்டி, மாஞ்சி, ஆரபி, குரிஞ்சி, ஆகிரி, காம்போதி, மணிரங்கு, அடாணா, நாகவராளி, வர்ணம், நாட்டை, வயிரவி (பைரவி), மோகனம், தோடி, கனடா, சுரமண்டலி (இராகமாலிகை), சாரங்கி முதலான இராகங்களில் சிறந்தவளே ! (20-37)

பண்ணூர்ந்த உனது பாட்டைக் கேட்டு மகிழ்ந்தேன். என் கதையினையும் சற்று கேட்பாயாக! (38-40)

என் மனைவியுடன் கோபித்துக்கொண்டு தலயாத்திரை செல்லுங்கால் பழனியம்பதியில் வேசியை அணுகினதும், கைப்பொருள் இழந்ததும், தாய்க்கிழவி என்னை அவமானப்படுத்தியதும், ஊரைவிட்டு விரட்டியதும், விறலியே ! கேட்பாயாக !! (41-48)

திருமகள் குடிகொண்டு வாழும் இடமான நண்ணூரில் எந்தையாம் சங்கமேசுரனார்முன் முறையிட்டேன். அவர் பொன்னை அள்ளித் தந்தார். மீண்டு வந்து வாழ்க்கை நடாத்தினேன். அதனைக் கேட்பாயாக ! நண்ணூரில் வீற்றிருக்கும்; மதுரையம்பதியின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைப் புரிந்தவர்; பாவலரும், காவலரும் போற்றும் திறனுடைய சங்கமேசுரனார், (48-85)

திருமகளும் நாமகளும் வணங்கும் சங்கமேசுவரியாம் வேதநாயகியாரை இடப்பாகத்தில் கொண்டு, (86-93)

சுந்தரர்க்குத் தூது நடந்த நலத்தோடும், மூவர் தமிழ்ப் பாடல்களுக்கந்த பெருமையோடும், மாணிக்கவாசகருக்காக அருள்புரிந்த (94-109)

கருணையோடும், பல்லியம் முழங்கவும், தேவார திருவாசகங்கள் ஓதவும், பரிசனங்கள் சூழ்ந்து வரவும், நண்ணூரின் அழகு மிக்க வீதிகளின் வழியே உலா வருகின்றார் என்று (110-146)

மக்கள் சாந்தால் தரைமெழுகிச் சந்தணத்தால் கோலமிட்டு வீதியினை அலங்கரிக்கின்றனர். (147-149)

அவ்வீதி வந்த உலா நிறைந்து சங்கமேசுரனுர் கொலுவிலிருக்கும் அந்த நாளிலே ; திருப்பதியில் சேஷபட்டர் மகனுய் உதித்தேன். (150-152)

சகல கலைகளிலும் வல்லவனுய் விளங்கியதால் எல்லோரும் என்னை "சோடச அவதானி" என்று அழைத்தார்கள். (153—164)

செகநாதபதியில் வாழும் திம்மபட்டர் மகளை மணம்புரிந்து இல்லறம் நடத்தி வருங்கால், ஒருநாள் மாணிக்கப் பட்டணத்தில் தேர் பார்க்கச் சென்ற போது எதிர்பாராத விதமாய், ஒரு தேவடியாளைச் சேர்ந்துவிட்டு வீட்டுக்கு வந்தேன். (165—169)

அதனை, என்மேலுள்ள குறிகளால் கண்டுகொண்ட என் மனைவி, என்னுடன் சண்டையிட்டு, என்னை "வீட்டைவிட்டுப்போ" என்று சொல்லி வெறுத்துவிட்டாள். (170—181)

மனம் உடைந்து, நொந்து வருந்திய நான், திண்ணையில் படுத்திருந்தேன். "மனமிரங்குவாள்" என்று எண்ணியிருக்கையில், அவள் கதவைத் தாளிட்டுக் கொண்டாள். (182—187)

அப்போது எனக்கு

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானுல்
எத்தாலும் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றுக இருப்பாளே யாமாயின்
கூறுமல் சந்நியாசம் கொள்"

என்ற ஔவை சொல் நினைவுக்கு வந்தது. எனது செல்வங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். (188—191)

திருவொற்றியூர், சென்னை, சிதம்பரம், திருஆனைக்கா முதலான எல்லாத் தலங்களையும் வணங்கி மதுரையை அடைந்து, பூணுச்சி ஐயர் மனையடைந்தேன். ஐந்து நாட்கள் அங்கிருந்துவிட்டுப் பிறகு தென்பழனி தேர் பார்க்கப் புறப்படும் போது, பூணுச்சி ஐயரையும் கூப்பிட்டேன். அதற்கு அவர் "தமிழ் வல்லோரே! பழனுபுரியில் மின்னு மினிக்கியர்கள் செயலைச்சொன்னுல் ஊரே சிரிக்கும். (192-208)

அவர்களில் "மணமாலை" எனும் வேசி, மகவின்றி வருந்திப்பல நோன்புகள் செய்து, நண்ணூர் சங்கமேசுரர் அருளால் கருவுற்றுள். கருவுற்ற மணமாலை, ஒரு பெண்மகவினை] ஈன்றுள். பாலூட்டும்போதே வேசையர்

தொழிலுக்கேற்ற, சூது, வாது முதலான சாகசங்களையும் சேர்த்துப் புகட்டினாள். பலவித உயர்ந்த அணிகலன்களைப் பூட்டித் தொட்டிலில இட்டுத் தாலாட்டினாள்; சீராட்டினாள். குழந்தை தளர்நடையிட்டு, சப்பாணிகொட்டி, நிலாக்காட்டி, செங்கீரையாடி மகிழ்வதைக்கண்டு முத்தமிட்டாள். மேலும் அணிகலன்களை அணிவித்துக் "காமரசக் குளிகை கண்ணாடி" என்று பெயரிட்டாள். தாய் மகிழும் வண்ணம் அன்ன நடை பயின்றாள். அம்மானையாடினாள்; கழங்காடினாள். நடனப்பயிற்சியும், இசைப்பயிற்சியும், மொழிப்பயிற்சியும் பெற்றாள். தாசித்தொழில் கற்ற இவள், பத்து வயது நிறம்பப்பெற்றாள். (209–286)

பேதைப்பருவமடைந்த இவளது நகில் பொற்காசுபோலப் பளபளப்புள்ள தாகியதைப் பார்த்த தாய்க்கிழவி, இவளைச் சீவி முடித்துபின் நகைகளை அணிவித்து அலங்கரித்தாள். சிவகிரி வேலவர் சந்நிதியில், இரத்தாட்சி ஆண்டு, சித்திரைத் திங்கள், செவ்வாய்க்கிழமை, பௌர்ணமி நாளன்று அரங்கேற்றம் நடந்தது. (287-311)

பதினொரு வயது நிரம்பிய இவள், காதல் சரசங்கள் செய்யத்தொடங்கினாள். (312–322)

அதனைத் தாய்க்கிழவியறிந்தாள். தொழில் நடத்த எண்ணினாள். தான் இதுவரை சேர்த்திருந்த பொருள்களை எல்லாம் ஓரிடத்தினில் மறைத்துவைத்தாள். மகளுக்கு தாசித்தொழிலுக்கு வேண்டிய யாவையும் போதித்தாள். "பெண்ணே! கரும்புக்குச் சுவை கொடுத்ததார்? அது இயற்கையல்லவா? அதுபோல நீயும் இயற்கையாய் என் பேச்சை 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று ஔவை சொன்னதற்கேற்பக் கேட்பாயாக! வேசையர் விருத்தாந்தம் எல்லாம் சொல்லுகிறேன். குலவித்தை கல்லாமல் பாகம்படும். நமக்குக் காசுதான் புருஷன். வாலிபம்தான் நமக்கு மாப்பிள்ளை, என்றெல்லாம் சொன்னாள். மேலும் முன்னிருந்தவர்களில் மதுரைப்பொன்னி, தஞ்சாவூர் சுப்பி, சிதம்பரம் தெய்வீ, திருவானைக்காவல் மதங்கி முதலானோர் பொன்னே புருஷன் என்று கொண்டு தக்கபெயர் எடுத்து வாழ்ந்தனர். (322–360)

அவர்களைப் போலவே நீயும், கோவிலுக்கு வந்தவர்களிடம் பணம் பறித்து, செங்கோல் துரைகளைச் சேர்ந்து, நாட்டு மணியத்தை நாடிப் பொருள் பறிக்க வேண்டும். சின்னஞ் சிறியவர்கள் வந்தால், அவர்களுடன் சேராமலே காசைப் பறித்துக்கொண்டு, கட்டியணைத்து அவர்கள் வீரியததை விட்டுவிடுமாறு செய். வீணர்கள் வந்தால் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். நம்மிடமே பொருள் கேட்பார்கள்; கொடுக்காதே. ஒருவன் இருக்கும்போதே மற்றொருவன் வந்து விட்டால், அவனையும் விடாதே. தோட்டத்திற்குச் செலவதுபோல் சென்று பொருள் பறித்து மீண்டும் வந்து, முதலிலுள்ளவனிடம் காசு பெறவேண்டும். (361–380)

வெட்டிப்பயல்கள் வந்தால் 'உடம்பு சரியில்லை' என்று சொல்லி அனுப்பிவிடு; குடிகாரர்களுடன் சேராதே. திருடர்கள் வருவார்கள்; காணாதே. தனுக்கு வித்தைகளைக் கைகொள்ளவேண்டும். கொக்கோகம் படித்துவிட்டு வருபவர் களிடம் நெருங்காதே. தமிழ்கற்ற புலவர்கள் வந்தால் சற்றே சேர்ந்திரு. ஒருவன் கலவியின்போது மற்றவன் வந்தால், அவனை மாட்டுக்கொட்டகையில் மருவி காசு பெற்று அனுப்பிவிடு. கோவில் தானீகனை உறவு பண்ணிக்கொண்டால், அவனால் நமக்கு நல்ல உணவு கிடைக்கும். பூக்காரன் தூதுக் குதவுவான். நட்டுவனார் வந்தால் நல்லதென்று பேசி மகிழ்ந்திரு. முத்தளக்காரர் முதலானவர்களுடன் நட்புக் கொள்ளாமல் இருப்பது நல்லது. ஊர் அடங்கியபின் சிலர் ஊமைபோல் வருவர் அவர்களது வீரியத்தை விட்டுவிடுமாறு செய்யவேண்டும். (381—430)

உள்ளூர் தலையாரி முதலானவர்களிடம் நட்புக் கொளல்வேண்டும். தாசி களிடம் காசு பறிப்பதென்ற கொள்கையுடையாரிடம் எச்சரிக்கை கொள்ள வேண்டும். வாசியூரில், குப்பிவீட்டில், ஒரு கோடாங்கிப் பயல் வந்து, அவள் காசு பணம் எல்லாம் பறித்துக்கொண்டு, அவளுக்கும் நோய் கொடுத்துவிட்டான். அந்த ஊதாரி என்னிடம் வந்தான்; எச்சரிக்கையுடன் நடந்துகொண்டேன். அவனை நான் விஷ்ணுகிரந்தி முதலான பொருள்களாற் செய்த ஆள் முழுங்கிப் பொட்டு வைத்துக்கொண்டு, சொக்குப்பொடி போட்டு மயக்கிவிட்டேன். அவன் பொருளைக் கொள்ளைகொண்டேன். அவனை ஓட்டாண்டி யாக்கிவிட்டேன். அந்த வசியப் பொட்டும், வசிய மருந்தும், உனக்கு வேணுமென்று வைத்திருந்தேன். "இந்தா" எனக் கொடுத்து விட்டு மேலும் கூறுவாள்; "சாதிகுலம் பாராதே; கூன் குருடு வந்தால பணத்தைமட்டும் பறித்துக்கொள்" என்று கூறினாள். இவற்றையெல்லாம் கேட்டவள தொழில் செய்யத் தொடங்கினாள். அவளது ஆசைவலையிலகப்பட்டோர் அவல நிலையுற்றனர். (431—464)

சொற்பனத்தில் வீரியத்தைச் சோரவிட்டோர், முதலானோர், கொண்டுவந்த பொருளையெல்லாம் இவளுக் களித்துவிட்டு, பின்னர் நொந்து "கோயில் கட்டினோமா? குளம் வெட்டினோமா? புலவர்களுக்குக் கொடுத்தோமா?" என்றெல்லாம் சொல்லி வருந்தினார்கள். பலவிதமான நோய்களுக் காட்பட்ட குப்பன், சுப்பன் முதலானோர் துயருற்றிருக்கிறார்கள்" என்று சொன்னார்' (465-498)

'இத்தகைய கொடுமை நிறைந்த தென்பழனுபுரிக்கு எப்படிச்செல்வீர்?' என்று பூனைச்சி ஐயர் கேட்க, அதறகுச் சோடச அவதானியாம் நான் "நம்மை அறியாமல மோகம் மீறிவிடுமோ?, வெந்நீர் கொதித்து வீடு வெந்துவிடுமோ?" என்று மறுத்து இருவருமாய் பழனி சென்றோம். கோயில் சென்றோம்; வேடிக்கை எல்லாம் பார்த்தோம். (498—506)

அங்கு, காமரசக்குளிகைகண்ணுடி நடம்புரிந்தாள். சாத்திரங்கள் சொன்ன பல்லி தான் கழுநீர்ப் பானையிலே வேத்து நழுவி விழுந்ததுபோல் நான், அவள் ஆசைவலைப்பட்டு மோகித்தேன். ஆதிதாளம், அடதாளம், திருவிடை தாளம் முதலான தாளவகைகளையெல்லாம் கொண்ட அவளது நடனத்தில் என் மனம் கட்டுண்டது. பூணுச்சி ஐயரால் கிடைத்த புண்ணியம் என்று அவளைப் பின்தொடர்ந்தேன். (507-529)

மாமாலப்பூனை, மாயப்பூச்சி, பாசாங்குக்காரி, பசப்பி, மூசாம்பு சொக்கி முறைமசக்கி, தோதகத்தி, ஆசாரக்கள்ளி, ஆள்மருட்டுங்காமி, சித்திரக்குள்ளி, மோசக்குளிகை ஆகிய பதின்மர் தாதியருடன், காமரசக்குளிகைகண்ணுடி தன் அரண்மனையினை அடைந்தாள். பின்தொடர்ந்து அரண்மனை வாயிலில் நின்றிருந்த என்னை, மாயப்பூச்சி வந்து விசாரிக்க, என் வரலாறு கூறினேன். (530-539)

பின்னரும் இருவர், சொக்கியும் தோதகத்தியும் வந்து முறைப்படி 1000 பொன் கேட்டனர். (540-550)

அப்பொழுதே கொடுத்துவிட்டு உள் நுழைந்தேன். வரவேற்பு மிகுதியாயிருந்தது. தாதியர்கள் உபசரிக்க காமரசக்குளிகை கண்ணுடி வந்து அன்புடன் வரவேற்றுத் தன் பஞ்சணைக்கழைத்துச்சென்றுள். அதுபோது தாய்க்கிழவி வந்து வணங்கித் தன் மகள் அறியாதவள் என்று சொல்லி நீர்தான் ஆதரிக்கவேண்டும் என்று கூறினுள். மேலும் இவள் ருதுவாகி ஒருமாதமாகிறது. வயது பன்னிரண்டே ஆகிறது. நீங்கள் இருவரும் சதிபதிகள் போலிரும் என்று சொல்லிச்சென்றுள். அப்பய்யங்கார் வீட்டில் உணவு கொண்டேன். (551-582)

மீண்டும் பள்ளியறையடைந்த நான், அங்குள்ள லீலா விநோதங்களைக் கண்டு மயங்கினேன். பின் காமரசக்குளிகைகண்ணுடி தம்பூருடன் பாடினுள். மெச்சிய யான், அவளுக்கு எனது கணையாழியினைத் தந்தேன். நாங்கள் இருவரும் கலவியில் ஈடுபட்டோம். ஆலிங்கனம் முதலான காமலீலைகளைச் செய்தோம். எனது செயலுக்கு மகிழ்ந்த காமரசக்குளிகை கண்ணுடியைக் கலவிசெய்தேன்; பொழுது விடிந்தது. இப்படியே தினமும் சுகம் அனுபவித்ததால் எனது சந்தியாவந்தனம் முதலான எல்லா நெறிகளையும் கைவிட்டேன். உணவில் நாட்டம் கொள்ளவில்லை. அவளையே நினைத்திருந்தேன். சில நாட்கள் சென்றன. (583-646)

தாய்க்கிழவி எனது கைப்பொருளை வாங்கக் கருத்து வைத்து நெரிஞ்சிவேர், மாதளைவேர் முதலான வசியப் பொருள்களைக் கூட்டி உருண்டை செய்து பாலில் கலந்தும், சுண்ணும்பில் சேர்த்து வெற்றிலையுடன் தந்தாள். மயங்கி விட்டேன். தம்பி கலியாணச்சிலவுக்கு எண்பது பொன் வேண்டுமென்று சொன்னுள்; உடனே கொடுத்தேன். "சேலையில்லை" என்றுள்; உடனே முன்னூறு

பொன்னுக்குச் சேலை வாங்கித்தந்தேன். சிலவுக்குப் பணமில்லை என்று சிணுங்கினுள். இருநூறு பொன் கொடுத்தேன். (647—687)

திருவானியம்பதியில் தேர்த்திருவிழா நடக்கிறது; போய்ப்பார்த்து வாருங்கள் என்று சொன்ன தாய்க்கிழவி எங்களுடன் தானும் புறப்பட்டாள். எல்லா நகைகளையும் பூட்டிக்கொண்ட காமரசக்குளிகை கண்ணுடியுடன் மூவரும் திருவானியம்பதியின் சிறப்புமிக்க தேர்விழாவினைப்பார்த்து மகிழ்ந்தோம். அங்கு பிற தேசத்து மக்களெல்லோரும் குழுமியிருந்தனர். கண்டு மகிழ்ந்தோம். ( 688-716 )

சங்கமேசுரத் தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபடும்போது, அங்கு பூணுச்சி ஐயர் வந்துவிட்டார். கேலி செய்தார். நான் தலைகுனிந்து கைபிசைந்தேன். "நன்ரு யிருக்கிறது. ! ஆனமட்டும் பாரும் !" என்று பரிகசித்துவிட்டுச் சென்ருர். பின்னர் ரெங்கய்யங்கார் வீட்டில் உணவு உண்டு வந்து இளைப்பாறினோம். கடைத்தெரு வந்தோம். பட்டுச்சேலை, ஆபரணம், சீப்பு, சிமிள் என்று அவள் கேட்டதெல்லாம் வாங்கித் தந்தேன். புறப்பட்டுச் சென்னிமலை வழியாக வரும்போது ஆம்பிரபதி யாற்றங்கரையில் "சமையல் செய்யவேண்டும்; நீர் போய் பால் தயிர் வாங்கி வாரும்" என்று தாய்க்கிழவி என்னை அனுப்பினுள். நான் வருவதற்குள் அவள் நகைகளையெல்லாம் கழற்றி மூட்டைகட்டி மறைத்து வைத்துக்கொண்டு, நான் வந்ததும் "திருடர்கள் வந்து நகைகளையெல்லாம கொள்ளை கொண்டனர்" என்று சொல்லி அழுதார்கள் இருவரும். அந்த நகைகள் இன்னின்ன மதிப்புடையன; இன்னின்ஞர் இட்டவை என்று வ்ருணனை செய்து அழுதாள். தேருக்குப் போன பலன் கைமேல் கிடைத்து விட்டது என்று சொல்லிப் பசப்பினுள். 'போனது போகட்டும்' என்று அவர்களுககு ஆறுதல் சொல்லி, அழைத்துக்கொண்டு ஊரடைந்தேன். (717-773)

கதித்தமலை என்னும் தட்டானிடம் ஆயிரம் பொன் கொடுத்தேன். அவன் அழகான நகைகளைச் செய்து கொண்டு வந்து கொடுத்தான். அவைகளைக்கண்டு அவள் பூரித்தாள். பின்பொருநாள் தாய்ககிழவி வந்து, "நல்ல சேலை நகைகள் இல்லை என்று கோவிலுக்குப்போக என்மகள் மறுக்கிருள்" என்று சொன்னுள். உடனே முன்னூறு பொன்னுக்கு வாங்கித்தந்தேன். தாதியர் வந்து வாங்கிச் சென்றனர். (774—788)

மற்ருருநாள் அரங்கேற்றுக் கலியாணச் சிலவுக்கு ஐம்பது பொன் ஆகும் என்று சொல்லி, மேலும் சிலவுகளை எல்லாம் வரிசையாகச் சொன்னுள். எல்லாம் கொடுத்து இழந்தேன். என்கையில் உள்ள பொருள் எல்லாம் தீர்ந்து விட்டது. அதனை அறிந்த தாய்க்கிழவி வைதாள். "கடன்காரர்கள் தொல்லை செய்கிருர்கள்; ஆடி நோன்புக்குப் பணமில்லை" என்றெல்லாம் பேசினுள். உடனே நான் வெளியில் வந்தேன். (789—830)

நான் எத்தனை பொன் கொடுத்தாலும் அதற்குள் நோன்பு செய்யலாம் என்று தாசி சொன்னாள். என்னிடம் காசில்லாததால் தலை கவிழ்ந்து தெருத்திண்ணைக்கு வந்தேன். தாய்க்கிழவி வந்து வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டினாள்; என்னைத் தள்ள வந்தாள். இருவருக்கும் சண்டை மூண்டது; கட்டிப்புரண்டோம். அவளது நீண்ட நகிலை எடுத்து என் கைவாள் என்று கக்கத்தில் அணைத்தேன்; முண்டினாள். (831—850)

கூக்குரலிட்டு ஊரையழைத்தாள். "பரதேசியாக இவன் வந்தான். என் மகள் சோறிட்டாள். அவளை இவன் மயக்கிவிட்டான். அவள் என்னையும் மற்றவர்களையும் மறந்தாள். யாராவது வந்தால் இவன் நெருங்கவிடாதடித்தான். பொருள் கொடுத்ததாகச் சொல்லுகிறான் திருடன். மாரியம்மன் கோவிலில் மாவிடிப்பது போல என்மகளைப் புணர்வான். அவள் வருந்துவாள். நான் தலையிட்டு விடுவிப்பேன். இவனை இரண்டு போட்டு அனுப்புங்கள்" என்று அலறினாள். (850—889)

'அப்பய்யங்கார் வீட்டில் சாப்பிட்டதற்கு ஐம்பது பொன் கொடுக்க வேண்டும்' என்று மேலும் இல்லாததெல்லாம் சொன்னாள். அங்கு கூடிய எல்லா அந்தணர்களும் எனக்கு அறவுரை கூறினார்கள் புத்தி புகட்டினார்கள். பதில் கூறத் தோன்றாமல் 'வேசையர் உறவு மோசம்' என்பதனை, குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோரும் தீவினைப்பயனால் செல்வமிழந்து, தன் மனைவியரையும் மாற்றான் கொள வறியராவர் என்பதனை நாலடியாரால் அறிந்து திருந்தினேன். (890–911)

அங்கிருந்தும் புறப்பட்டுத் தலங்களை யெல்லாம் வணங்கி விட்டு நண்ணுவூர் வந்தடைந்தேன். புனலாடி சங்கமேசுரரைத் தரிசித்தேன். செல்வங்களைத் தந்தார் பெற்றுக்கொண்டு என் ஊரடைந்தேன்; வீடடைந்தேன். என் மனைவி என்னைக்கண்டதும் தாளிட்டுக் கொண்டாள். இதுவும் ஒரு கதையோ! என்று துணிந்தேன். (912—926)

கேட்டாயோ? விறலியே! பண்டொருநாள் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் பரவை நாச்சியாருக்கும இடையில் சொக்கலிங்கப் பெருமான் தூதுபோய் அவர்கள் ஊடலைத் தணித்ததுபோல், நீ எனக்காகத் தூதுபோய் எங்கள் ஊடல் தவிர்க்கவேண்டும் என்று சொல்ல, விறலியும், சோடச அவதானி மனையாளிடம் போய் "மாதரசே! கணவனிடம் மோடி செய்யக் கூடாது; அடக்க ஒடுக்கமாக இருத்தல் வேண்டும்" என்று சொல்லி அறவுரை கூறினாள். (926—940)

அதற்கு அவள், "ஒண்டொடியே! கற்றுணர்ந்தவர்கள் அதற்குத்தக நடக்கவேண்டும். என்னை ஊரார் ஏளனம் செய்கிறார்கள். அதனால் மறுத்தேன்.

இப்போதும் மறுக்கிறேன்" என்றாள். விறலி அந்தணரிடம் வந்து எல்லாவற்றையும் சொல்ல, அதற்கு அவர் "உனக்கு சாமர்த்தியம் இல்லையோ?" என்றார். (941—954)

(இதற்குமேல் கண்ணிகள் இல்லை)

ஆயினும், "நீ மீளவும் சென்று எனக்காக ஊடல் தவிர்க்கத் தூது செல்லல் வேண்டும்" என்று வேண்டியிருத்தல் வேண்டும்.

"ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்".

முற்றும்.

# பிழை திருத்தம்

( இவற்றில் பாதிக்குமேல் சுவடிப் பிழைகள் )

| பக்கம் | கண்ணி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 38 | விறலியை | விறலியே |
| 3 | 39 | விறலியை | விறலியே |
| 4 | 52 | நீழ்மலையான் | நீள்மலையான் |
| 9 | 122 | சார்நத | சார்ந்த |
| 10 | 134 | குடை ரிவியைப் | குடைரவியைப் |
| 10 | 137 | மே – ரக்கை | மோதிரக்கை |
| 10 | 137 | தே – தில் | தேசத்தில் |
| 10 | 139 | தக்கதேவத் தானந்தான் விளங்க | தக்கதே வந்தானந் தான்விளங்க |
| 12 | 166 | நின்ற | னீன்ற |
| 12 | 170 | கீட்டணைய | கிட்டணைய |
| 13 | 177 | வாலறியன் | வாலறிவான் |
| 14 | 198 | ன நகர | ன நகர் |
| 15 | 200 | யானென்பார் பதியான | யரனென்பார் பதியான் |
| 21 | 295 | காசயெல்லாம் | காசையெல்லாம் |
| 23 | 325 | வும்பாவ | வும்பரவ |
| 29 | 403 | நின்பான் | நிற்பான் |
| 30 | 427 | நேத்தியாய்ச் | நேத்தியாச் |
| 32 | 450 | மொப்பில் | பொட்டில் |
| 32 | 452 | வல்லநன்மை | வல்லாண்மை |
| 33 | 476 | திண்ணைதோறும் | திண்ணைதொறும் |
| 34 | 481 | னெனபோத்தி | னேன்போத்தி |
| 34 | 492 | யரையாய்ப்பு | யரையாப்பு |
| 35 | 507 | நேத்திபேர் | நேத்திபெற |
| 36 | 516 | தென்புசெய்தால் | தென்புசெய்தாள் |
| 37 | 535 | யென்னவென்றே நிற்பதென்ன | யென்னவென்றேன் நிற்பதென்ன |
| 38 | 543 | வால்பார்த்தி | வாலபாரதி |
| 38 | 545 | அத்திக்கக் | ஆத்தீகக் |
| 42 | 609 | குமறிடவே | குமுறிடவே |
| 44 | 638 | தனமஞ் | தனமுஞ் |
| 45 | 645 | ரசமறிவேன் | ரசமறியேன் |

| பக்கம் | கண்ணி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 45 | 650 | ஆண்துட பெரிண்துடரி | ஆண்துடரி பெண்துடரி |
| 46 | 666 | தான்வளத்தி | தான்வாழ்த்தி |
| 46 | 668 | வெள்வால் | வெளவால் |
| 48 | 696 | வந்தர்னே | வரததானே |
| 49 | 705 | துலுக்குகளே | குலுக்குகளோ |
| 49 | 706 | குசரத்து | குர்ச்சரத்து |
| 49 | 709 | தெற்சிதமோ | கெற்சிதமோ |
| 50 | 719 | நாயகிபாம் | நாயகியாம் |
| 51 | 732 | யில்யிரங்கி | யில்லிரங்கி |
| 51 | 737 | ஒண்டிமா | ஒண்டிமரம் |
| 52 | 750 | மனமகிழ்ங்தேன் | மனமகிழ்ந்தென் |
| 53 | 761 | போட்டேனே | போட்டானே |
| 54 | 789 | ருங்கனவும் | ளுங்கனவும் |
| 55 | 795 | சொல்லு | செல்லு |
| 55 | 797 | வால்பார்த்தி மென்று | வாலபாரதி மென்றுங் |
| 56 | 812 | பூவையுன்னைக் | பூவையென்னைக் |
| 57 | 833 | தீவிரமாய்ச் சுள்ளிடுரா | தீவிரமாய்த் துள்ளிடுரு |
| 59 | 860 | போறவள்போல் வந்தாள் | போறவன்போல் வந்தான் |
| 61 | 879 | பாவிவிட்டா-ஓவென்பான் | பாவிவிடடா-ஓவென்பாள் |
| 61 | 893 | மிக்கிவனை | மிக்கவெனை |
| 62 | 896 | சீறலாம் | சீறலாமா |
| 62 | 900 | சீராம் | சீராமா |
| 63 | 916 | தும்பதியச் | தும்பதியஞ் |
| 65 | 945 | பிறர்குறை தாமறியார் பேதையவ ரென்றும் | பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையா ரில்லென்னு |

## நண்ணூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில்

# விறலி விடு தூது.

———x———

### காப்பு

மாமேவு நண்ணூர் வந்தசங்க மேஸ்பரன்மேல்
தேமேவும் சொல்விறலி செந்தமிழ்க்கு—நேமகரம்
ஐந்துளபத் தானைமுக னம்பிகைபெற் றானைநறும்
பைந்துளபத் தானைநினைப் பாம்.

### நூல்

பொன்மா தருமைமிஞ்சு பூமாத ருட்குலவு
தென்மா தவன்மகிமை சீராமன்—நன்னயமாய் 1

அன்னாள் படியளந்த தல்லாம லெவ்வுயிர்க்கும்
இன்னாள் படியளக்கு மெம்பிரான் — முன்னாளில் 2

மண்ணையுண்ட வாயன் வருவாயர் ஆயர்மனை
வெண்ணெயுண்ட வாயன் மிகுநேயன்—விண்ணுலகோர் 3

ஆயிரங் கண்ணன்முதல் வானவர்கள் போற்றமன
தாயிரங் கண்ணன்முத லாதியெனும்—தாயகியாம் 4

சங்கரிக்குச் சகோதரனும் தண்ணதிக் கிராவினைநீ
சங்கரித்து மோட்சந் தரவந்தோன் — செங்கரத்தில் 5

சங்கத்தான் நல்லபிறர் சங்கத்தான் வாலிதனை
சங்கத்தான் பாதத் தனுராமன் — இங்கிதஞ்சேர் 6

ஓரதத்தைப் பார்க்குணனார்க்கூர்ந்து பெருமைபோய்
பாரதத்தைச் செய்யும் பரந்தாமன் — தாரணியில் 7

ஐவரைச்சத் திரமதாய்ப் பிடித்தோன் பாண்டவர்செய்
ஐவரையுங் காக்கு மருள்வரையான் — மைபடர்ந்த 8

கம்பத்தா னைத்தடிந்த கைம்மதத்தான் கன்னமும் பொற்
கம்பத்தான் றன்றோணிப் பொற்கம்பத்தான் — செம்புனிதக் 9

கஞ்சத்தா னஞ்சனத்தான் கண்பசந்த செண்பகத்தான்
கஞ்சத்தா னேசெகுத்த காகுத்தன் — தஞ்சமென 10

வந்திருக்கும் வேளை வரந்தருவான் அன்புமிக
வந்திருக்கும் வேளையிது வாயளித்தோன் — சுந்தரஞ்சேர் 11

சாரங்கத் தைக்கொணர்ந்து தன்னங்கத் தைத்தெளிந்து
சாரங்கத் தைத்தெளிந்த தம்பிரான் — ஓர்கதையில் 12

மங்கைக் கதித்தகிரி வரந்தருவர் நன்புமிக
மங்கைக் கதித்தகிரி வைத்திருப்போன் — இங்கிதமாய் 13

முன்பு வனங்கடந்த மூர்த்தியுந் திரண்டபயன்
தென்பு வனங்கடந்த சீருலகில் — இன்பமுடன் 14

வண்டிசைக்குங் கோகுலத்தின் வாயசைக்கும் நாரதனூர்
பண்டிசைக்கும் வீணை பயிலிசைக்கும் — மண்டலத்தில் 15

எண்டிசைக்கும் சங்கீதம் ஏழிசைக்கும் நுட்பமெலாம்
கண்டிசைக்கும் வேதொளிக்கும் காரிகையே — விண்டக்கேள் 16

தித்திக்கு மத்தளமும் சேர்க்துவரத் தித்தியிசை
தித்திக்கச் சொல்லும் செழுங்குயிலே — கைத்தாளம் 17

காதிமிதி யைப்பளித்து தத்திமிதி தித்திமிதி
தாதிமிதி யென்றுரைக்கும் தையலரே — தோதிமிதி 18

தொந்தமெனத் தாழ்ந்து டங்கமயல் கொண்டவர்க்குத்
தொந்தமெனத் தென்புசொலுந் தோகையரே — வந்து 19

கலியாணி யென்றுசொல்லிக் காமுறுவர்க் காக
கலியாணி யைப்படிக்குங் காமி — கெலிவாய் 20

சுருட்டிராகஞ் சொல்லித் தூயிளேஞோர் வீசச்
சுருட்டி மயக்குவிக்குங் தோகாய் — மருட்பொருந்தும் 21

மாஞ்சிராகப் புவியில் வாலிபர்கள் மோகிக்க
மாஞ்சிராகம் பயிலும் மாதரசே — காஞ்சனமுள் 22

ளாரவிமானம் பொருந்தி ஆவல்கொண்டு ஏவல்செய்ய
ஆரபிராகம் பயிலும் ஆயிழையே — பேரவா 23

குறிஞ்சி நேகத்தில் குருஞ்சிரிப்பில் நாட்டிக்
குறிஞ்சி ராகம்பயிலும் கோதாய் — பரிந்தும 24

தாகிரியாங் கொங்கைமத யானைபிடிக்க வேண்டி
ஆகிரிரா கம்புகலும் அன்னமே — லாகிரிவா 25

காம்பூதி தன்னிலுள்ள காமுறுவ ரோடிவரக்
காம்போதி பாடிவரும் கன்னியரே — ஆம்பொன் 26

மணிரங்குக் காசைகொண்டு மாப்பிள்ளை மார்கெஞ்ச
மணிரங்கு தானுரைத்த மாதே — கனிசம் 27

அடாணி யெனவைவது மனதான் மிகக்கொள்ள
அடாணிராகத்தை யணிக்கு — விடாமலுந்தான் 28

நாகவரா ளிப்பருவ நாயகமார் தான்மயங்க
நாகவரா ளிப்பதுஞ்சொல் நாரியரே — யேகசுர 29

வ(ர்)ன்னத்தைச் சொல்லியந்த மாமுனியோ கீசரையொவ்
வ(ர்)ன்னத்தினால் மயக்கும் மாமணியே — பின்னுமந்த 30

நாட்டைவிலை யாய்மதிக்கும் ராகத்தி லேச்சான
நாட்டைரா கம்பயிலும் நாரியரே — ருட்டி 31

வயிரவிசே ஷங்களெல்லாம் மாற்றிவைக்கச் செய்யும்
வயிரவிரா கம்பகரு மாதே — செய்நீயும் 32

மோகனத்தை யேபலிக்கும் மோகமுற்று மேமயக்கி
மோகனத்தை யேபடிக்கும் மொய்குழலே — வாகாகத் 33

தோடிரா கத்தைத் துடங்கினால் யாருமகிழ்ந்
தோடிவரப் பாடிவரும் ஒண்டொடியீர் — நாடிவந்து 34

கண்டாரா கங்குளிரக் காதுக் கினிப்போகக்
கனடாரா கம்பயிலுங் காரிகையே — கொண்டாடி 35

சுரமண் டலத்தோர் சுதிக்கினை யாய்க்கூடிச்
சுரமண் டலம்பயிலுந் தோகாய் — யிரவலர்கள் 36

சாரங் கிருவித்துத் தம்பூரு வீணையொடு
சாரங்கி வாசிக்குந் தார்குழலாய் — பாருலகும் 37

விண்ணாணக் காமுறுவர் மேலான சிந்துகவி
விண்ணாகச் சொல்லும் விறலியைப் — பண்ணார்ந்து 38

வித்தாரச் செந்தமிழின் மின்சாரங் கண்டதிலே
வித்தாரஞ் சொல்லும் விறலியை — முத்தாக 39

உன்பாட்டின் கேள்வி உகந்து களிகூர்ந்தேன்
என்பாட்டைச் சற்றே யியம்பக்கேள் — தென்பாக 40

ஒள்ளியராய்த் தெள்ளியராய் உண்டாகி லூழ்வினை
மெள்ள நுழையுமென விதிமுன் — உள்ளவர்கள் 41

சொன்னமொழி தப்பாமல் தோகையரே என் மனைவி
தன்னைவி ரோதித்துத் தலந்தோறும் — என்ன செய்வேன் 42

சுற்றித் திரிந்ததுவும் துய்யபழ னாபுரியில்
நற்றியொரு வேசிதனை நாடியதும் — பெற்றதெந்தன் 43

கைப்பொருளெல் லாந்தோற் றுக்காலைதனிற் றாய்க்கிழவி
மற்பிடித்துச் சண்டையென்மேல் வாங்கினதும் — அப்பிரமோ 44

மண்ணத்தி லேற்றினதும் வாய்வீறு பேசினதும்
புண்ணாக்கும் ஊரைவிட்டுப் போவெனவே — அண்ணைக்கே 45

ஆட்டிவைத்த சித்திரக்கூத் தத்தனையும் ஏதுசொல்வேன்
கேட்டருளாய் பச்சைக் கிளிமொழியே — வாட்டமுடன் 46

அவ்வூரை விட்டகன்றேன் அங்க மயலிருக்க
யெவ்வூரி லீகையுண்டென் றேகினேன் — செவ்வைவந்து 47

செந்திரு மின்வாழுந் திருவானி யம்பதியில்
எந்தையென வந்தசங்க மேஸ்பரனார் — முந்துகொலுத் 48

தன்னிலவர் மேல்விறலி சாற்றியரங் கேற்றுதமிழ்
சொன்னவுடன் பாதந் தொழுதுநின்றேன் — பொன்னையள்ளித் 49

தந்தார் பவக்கடலைத் தள்ளினார் என்மனைக்கு
வந்தென் மனைவியுடன் வாழ்ந்ததுவும் — சுந்தரமே 50

இன்னவகை இன்னவிதம் என்றே யுரைத்திடுவேன்
பொன்னனையீர் சற்றே புகலக்கேள் — உன்னிதஞ்சேர் 51

மேருகிரி யாகுமருள் மீறுகயி லாசகிரி
நேரனைய வேதகிரி நீழ்மலையான் — பாருமினி 52

தங்கமுக மானகழுத் தம்மைபொன்னி வாணியென
சங்கமுக மாயுதித்த தண்ணதியான் — இங்கிதஞ்சேர் 53

ஆட்டினான் சூஷ்த்திர விளை யாட்டினான் பேரின்பம்
காட்டி வடகரைநன் னாடுடையான் — தாட்டிகம் 54

ஓதனத்தான் நத்தனத்தான் உற்பனத்தான் அக்குடத்தான்
நாதனத்தான் போற்றியநண் ஞறஹ்ரான் — மீதினிலே 55

நாகா பரணமொடு நல்லவெண்ணீ றுந்துவள
வாகாய்ப் புனைந்தகொன்றை மாலிகையான் — லோகமதில் 56

தந்திரமாய்ப் பல்லுயிரைத் தற்காக்க வேணுமென்று
வந்த ரிஷபமெனும வான்பரியான் — வந்தனைசெய் 57

தொண்டர் மனத்திருளைத் தூள்படுத்தி நால்வேதங்
கொண்டகற்று மெஞ்ஞானக் குஞ்சரத்தான் — அண்டிவந்து 58

அண்டமெங்குங் காக்க அழகுவிரு தாய்க்கட்டி
கொண்ட இடபக் கொடியுடையான் — அண்டமதை 59

பத்தமொடு மால்க்குப் பரிவுமுடி சூடுதற்கு
முத்தமதி லேதொளிக்கு மும்முகத்தான் — இத்தலத்தில் 60

தூண்மையில்லா சிருட்டித்திதி சங்கார முத்தொழிற்கும்
ஆண்மைதன தாய்கடந்த ஆண்மையினான் — கேண்மையில்லா 61

முண்டகத்தா னாகவந்த மோதகத்தா னைச்சிரித்து
முண்டகத்தா னற்சிரத்தை நின்றடித்தோன் — பண்டிலுள 62

கங்கையான் போற்றடிக்கி கங்கையா னேறியணி
கங்கையாள் காட்சிதரும் கர்த்தாவாம் — இங்கிதஞ்சேர் 63

மண்டலத்தா னாகடல் வந்தவிட மோதொண்டை
மண்டலத்தா னாகவந்த வள்ளலெனும் — கொண்ட 64

முதலியார் பக்கலிலு முன்வருவ ராதி
முதலிய ராய்வந்த மூர்த்தி — நிதநிதம்விந் 65

தையலுக்கு ராசனே சாற்றுமிரு பத்தேழு
தையலுள சோமன் றனைத்தரித்து — மெய்யதனில் 66

வெள்ளெலும்பும் பாம்பு மினுமனேக மூவேழு
வள்ளலும் பரும்பரவி வாழ்த்திநிற்க — துள்ளிச் 67

சிறுகால்ச் சிலம்புகொஞ்சத் தெய்த்தாதி தாவெனவே
சிறுகால்ச் சிலம்பு முனிதேர்ந்து — முறைபணியக் 68

குன்றில் நடம்புரிந்த கூற்றை யுதைத்ததல்லால்
மன்றில் நடம்புரிந்த மாதேவன் — என்றுமிகச் 69

செவ்விதழி லம்பிகையை சீர்வாமந் தனில்வைத்தே
அவ்விதழி மாலே அணிபரமன் — இவ்வுலகில் 70

அஞ்சுதலே யானவருக் காறுதலே சொல்லிடுவான்
அஞ்சுதலே யான்சிரத்தில் ஆறணையும் — உஞ்சுதலே 71

சங்கத்தார் தங்களொடு சங்கித் தெதிராளி
சங்கத்தா ராழத் தமிழுரைத்தோன் — இங்கிதமாய் 72

அப்ப ருரைக்கும் அருமைத் தமிழ்க்கிரங்கி
அப்ப வரமருளும் அன்புடையோன் — ஒப்பிதமாய் 73

விந்தை திருவாரூர் வேசி மனையதனில்
சுந்திரர்க்கா கத்தூது சொல்லினின்றோன் — பைந்தமிழ்சேர் 74

மாணிக்க வாசகர்க்கு வந்துகையே டாய்க்கோவை
பூணிக்கை யாயெழுதும் பொற்கரத்தான் — மாணிக்க 75

மாமலையான் வெள்ளி மலையதிப னுடோறும்
மாமலையாய்ச் சித்தமுள்ள மாதேவன் — நேம 76

சிறுத்தொண்டன் பிள்ளைதனை செய்பசியி னாலே
அறுத்துண்டு மோட்சம் அருள்வோனே — கறைக்கண்டன் 77

மார்க்கண்டர்க் கென்றும் வயதுபதி னாறெனவே
தீர்க்கமாய் உரைத்த சீராளன் — வேர்க்காம்பின் 78

சேயுமாய் வந்தமுத்தன் செட்டி மகள்தனக்குத்
தாயுமாய் வந்துதவி தான்புரிவோன் — தாயகமாய் 79

வரிவரியாய்த் தானிருக்கும் வண்ணமுள்ள கானின்
நரிபரியாய்ச் செய்தருளு நம்பன் — தூய 80

காணு தடிமுடியான் காமாரி யஞ்செழுத்தை
ஊணு தடியவர்பால் உற்றிருக்கான் — அரியயனும் 81

தாய்முலைப்பால் வேண்டித் தவித்தபுலிக் குட்டிக்குப்
போய்முலைப்பால் அன்றளிக்கும் புண்ணியனுர் — தூய 82

சித்தர்களும் பக்தர்களும் தேவர்களும் மூவர்களும்
எத்திசையும் போற்றுசங்க மேச்சுரனுர் — நித்தநித்தம் 83

நல்லவரும் அல்லவரும் நாரணனும் ஆரணனும்
எல்லவரும் போற்றுசங்க மேச்சுரனுர் — வல்லதமிழ் 84

பன்னூளும் பாடுகின்ற பாவலரும் காவலரும்
என்னாளும் போற்றுசங்க மேச்சுரனூர் — தென்மேவும் 85

ஆதி பராபரி ஆன பராபரி
சோதி பவானி சுபாகரி — பூதரி 86

நாரணி காரணி ஞயகி தாயகி
வாரணி பாவாணி வாரணி — பூரணி 87

சத்திவெகு சத்திசிவ சத்திகன புத்தியொடு
வித்தையு மனுக்கிரக மிகுத்தருளும் — உத்தமிதென் 88

மங்கள மிகுந்திடு சுமங்கிலி அலங்கிருத
மிலங்குசிவ சங்கரியி லஞ்சியமென் — மங்கையெனும் 89

ஆச்சிகளி வாச்சிவிசா லாட்சியுயர் சூட்சிநிதி
ஆய்ச்சொரி மாய்ச்சொரிமீ னுட்சிநல்ல — காட்சிதருங் 90

கொங்கேழ் சிவாலயத்துள் கூறுதிரு வாணியிதென்
றிங்கே தவம்புரியும் ஈஸ்வரியாம் — சிங்காரி 91

நால்வேத மும்பகர்ந்து நாடோறும் ஈடேற
மால்வேத னும்பணிய வந்தமின்னூள் — மேலான 92

மாமகளும் பூமகளும் மாமலர்க ளேசொரிய
நாமகளும் போற்றுமருள் நாயகியை — வாமமதில் 93

வைத்தபிரா னன்பர்பககல் வந்தமரர் நாதாக்கள்
யெத்திசையும் போற்றுசங்க மேச்சுரனூர் — மெத்த மெத்த 94

இன்பரவு மந்தர ரிரங்கிவரு மன்றதினிற்
பொன்புர நடம்புரியும் பொற்பதத்தான் — வன்புலியின் 95

தோலெடுத்து மேலுடுத்தித் தோலுரித்து மேல்விரித்து
வாலெடுத்து நீரழுத்து மார்பகத்தான் — ஞாலமதில் 96

மானு மழுவு வரத அபயமொடு
மானே தரித்த மணிக்கரத்தான் — வானோர் 97

கடலி லமிர்தங் கடைய வதில்வந்த
கடுவிடத்தை யுண்ட கறைக்கண்டன் — உடலதுவர் 98

பச்சை மலையில் பவளமலை ஒன்றாகி
மெச்சியபொற் செம்பவள மேனியான் — உச்சிதமாய் 99

மாமதுரைப் பட்டணத்து வைகையடைக் கக்கூலி
மாமதுப் புட்டுண்ட வாயினான் — தாமமென 100

வெம்புயங்கம் பூண்டபுயன் மெஞ்ஞானி யோர்நினைக்கும்
அம்புயம்போல் தோன்றிவரும் ஐம்முகத்தான் — அம்புவியில் 101

மங்கைக் கதித்தகிரி மன்னன்விசை யாசலனும்
பொங்க முபதேசப் பொற்குழையான் — இங்கிதஞ்சேர் 102

சந்திரனுஞ் சூரியனுந் தக்கவனல் மூவரையும்
விந்தைபெரு மூன்றுவிழி யாய்ப்படைத்தோன் — அந்தனுதல் 103

மீதுதிரி புண்டரமாய் வெண்ணீ றிலங்கவுயர்
சீதமதி கெங்கையணி செஞ்சடையோன் — ஓதரிய 104

கெச்சிதம் சேருமாதி கேசவரை மைத்துனராய்
மெச்சிப் படைத்த விமலனார் — உச்சிதஞ்சேர் 105

வேழமுக னைக்குகனை வீரபத்ர னைக்கிருபை
சூழமைந்த ராய்ப்படைத்த தொல்மறையோன் — ஆளழகன் 106

சுந்தரர்க்குத் தூதுசென்றோன் துய்யமது ராபுரியில்
வந்து விசாரமது வாசியென்றோன் — விந்தை 107

அறுபத்து நாலுவிளை யாடல் புரிந்தோன்
அறுபத்து மூவருக்கு மன்னாள் — திறமுற்ற 108

முத்தி கொடுத்துமற்ற மூவர் தமிழ்க்கிரங்கி
முத்தி கொடுத்தருளு முக்கணனார் — உற்றவிண்ணோர் 109

பூமாரி சந்திப் புனல்மாரி கங்கைபெய்ய
ஆமா முனிவ ரதிசயிக்க — நேமமொடு 110

பத்தரெலாங் கூத்தாடப் பாவலர்கள் கொண்டாடச்
சித்தர் கதிதேடச் சீர்வீணை — உற்றயிசை 111

நாரதருங் கின்னரரும் நன்றாக வேமீட்டக்
கூர்மையுள்ள வேதங்கள் கோஷ்டிக்க — சாரம் நிறை 112

சாத்திரபு ராணமொடு தத்துவங்க ளுற்றபொருள்
பார்த்தே உரிய பதம்பொழிய — நேர்த்திபெற 113

நாற்றிசை போற்றுமாதி நாராயண சோசியர்
சாற்றுக்கு வேதந் தணைப்புகல — ஏற்றபுகழ் 114

சுந்தரஞ்சே ருங்காசி சுப்பாவு தானியார்
விந்தையெதிர் வேத மிகப்பொழியச் — சந்ததமும் 115

சேஷாவு தானி செயசாம வேதமதை
வாசாம கோசம தாய்ப்புகல — கூசமல் 116

அண்ணை யாசார் அதர்வணவே தப்பொருளைப்
பண்ணுடனே ஓதிப் பகர்ந்து — வருணசெபம் 117

சொல்லரிய ராமலிங்க சோசியர்பஞ் சாங்கமதி
லுள்ளபலன் நன்ருய் உரைத்திடவே — தெள்ளிமைசேர் 118

சின்னண்ணு சாத்திரி யெக்கிய தீட்சதரும் (ஆகமங்கள்)
சின்னையா சாத்திரி தெளிந்தோதப் — பொன்னண்ணு 119

சாத்திரிய ரும்ராம சாமிசடா வல்லசுப்ப
சாத்திரியு மாங்காவு தானியரும் — தோத்திரமாய் 120

பாரா யணங்கள் பரிவுபோ லேயோதப்
பூராய மான புராண கதை — சீரான 121

சத்தம் புரிராமர் சார்ந்த தலபுராணம்
முத்தம்பி சோதிடர் மொழிந்துவர — ருத்திரசெபம் 122

நாளும் புரிந்து நரசிம்மய்ய ரும்வருக
வாழ்சுப்ப ராயரும் வில்வஞ்சொரிய — நீளண்ணு 123

வையங்கா ருங்கேச வையங்கா ருந்திரமாய்
செய்யதிரு வாய்மொழியுஞ் செப்பிவர — மொய்துளபம் 124

அர்ச்சனையும் எங்களண்ணை ஆச்சார்யர் தான்சொரிய
அற்புதங்கிருஷ் ணுச்சார்யர் அன்புசெய்ய—மெய்ப்பிதமாய் 125

சீராஞ்சா மய்யர் செயவீர ராகுவையர்
நேராய்ப் பிரசாதம் நீட்டிவர —பேராகச் 126

சாமிபராக் கெச்சரிக்கை என்னத்தம் பையனும்
நேமுகமாய்க் கட்டியமும் நின்ருேத— வீமனைப்போல் 127

வெள்ளித் தடிபிடித்து விசயமாந் தோலுடனே
தள்ளிச் சனங்கடன்னைச் சரியாய்—தெள்ளிமையுாய் 128

அத்தீக நாரணய்யன் யாவரையு மேயிரும்பால்
வித்தார மாக விலக்கிவர — மெத்த மெத்த 129

உண்மைசேர் சுப்பராய ஓதுவா ரானவரும்
பண்ணுடனே மூவர்திருப் பாடலது — ஒண்மொழியாய் 130

தேவார மிக்க திருவா சகங்களெல்லாம்
நாவாரச் சொல்லி நவின்றுவர — பாவாணன் 131

பைந்தமிழைச் சொல்வாழ் பாரதிமுத் தய்யனுயர்
சிந்துகவி நன்ருய்த் தெளிந்தோத — விந்தையுடன் 132

அட்டாவு தானி அருமைத் தமிழ்பாட
மட்டார் குழலியர்கள் வந்திருபால் — முட்டாமல் 133

முத்துக் குடைபிடிக்க முன்கவரி தானிரட்டப்
பத்துக் குடைரிவியைப் பாய்ந்துதட்டக் — கொத்துமணி 134

ஆலவட்டஞ் சூரியபான் ஆயிரமஞ் ஞாரிருபால்
மேலவட்டச் சூரியனை வீசியெட்டச் — சாலப் 135

பதினெட்டு வாத்தியமும் பாங்காகத் தொனித்தே
அதிருங் கடல்போ லதிர்த்த — எதிரெதிராய்த் 136

தேசிகத்தி லேபிடித்து திராணியுற்ற மே நிரக்கை
வீசிவிட்டு மாதரொக்க மேநடிக்கத்— தேச த்தில் 137

மன்னவர் செங்கோலு மனுநீதி யாய்நடக்கத்
தன்ம மிகுநாளுந் தழைத்தோங்க — இன்னிலத்தில் 138

மிக்க மழைபொழிய வேளாண்மை தான்மீற
தக்கதேவத் தானந்தான் விளங்க — மெய்க்கருட 139

கேதனத்தா னுமாதி கேசவநா ராயணனும்
மேதமுற்ற சித்திரத மேரிவரப் — பூதலத்தில் 140

மாடேரி யேநடத்தி வாழவோ லோகமெங்கும்
யீடேர வந்தசங்க மேச்சுரனர் — நாடோறும் 141

தம்பிபெரு பஞ்சாட் சரப்பொருளின் முத்தியருள்
எம்பெருமா னைசங்க மேச்சுரனர் — சம்பிரமொடு 142

காவிரி பவானி கலந்துவருஞ் சங்கமுகம்
மேவும் பெருமை விதரிவனம் — பூவில் 143

அடிக்காயி ரம்லிங்கம் அறுபத்து மூவர்
திடப்பான்மை காயத் திரியும் — படைத்தநிலைக் 144

கோபுரஞ் செச்சைமதிள் கொண்டருள் சிவாலயப்
பிரதாப மிகுந்த தலமாகும் — ரூபமதாய்க் 145

கூறுந் திருவாணி கூடல் பதியதனில்
வாரார் உலாவெனவே மானிடர்கள் — மீறுமணச் 146

சாந்தால் தரைமெழுகிச் சந்தனத்தால் கோலமிட்டு
காந்திபெறுந் தீபங் களையேற்றி — வாய்ந்தபட்டுத் 147

தோரணமு மாமகர தோரணமுங் கண்டவர்கள்
காரணமாய்ப் பார்க்கக் கதலிகளும் — சீரணியாய் 148

வீதிக்கு வீதி விதமாய்க் குறிஞ்சிநட்டுப்
போதஅலங் காரமது பொற்றேர்போல் — மாதயவாய் 149

பட்டணங்கள் சிங்காரம் பார்க்கக் கலிதீரும்
இட்டமுடன் மிக்கசங்க மேச்சுரனர் — கட்டளையாய் 150

1 சாற்று மரகத மேரிமிகச் சாரிவந்துதகை
யாற்றக் கொலுவிருக்கு மன்றுளில் — யேற்றுந் 151

திருப்பதியூர்ச் சேஷபட்டர் செய்தவத்தினலே
திருப்புதலவன் போலே செனிததேன் — உரைத்திடக்கேள் 152

அஞ்சு வயதுமுதல் ஆரியமுங் கன்னடமுஞ்
செஞ்சி நகரில் தெலுங்குடனே — பஞ்சலிய 153

இந்துவியுல் வாளபந்தும் இங்கிலீசு மற்றதிந்தச்
செந்தமி ழிலக்கணமும் சீர்தனையும் — சந்ததமும் 154

வாணி கடாட்சமெந்தன் வாக்கில் புதனிருக்க
பூணிக்கை யாலுவித்தை பூர்த்தியாய் — பாணி 155

அவுதான வித்தைசொல்ல ஆர்க்கும் அரிதாம்
நவரூப சித்திரமென நன்றாய் — கவியொருவர் 156

---

1 சீர் சரியில்லை

ஆரோ கணமு மவரோ கணமொருபால்
பாரோர் புகழ்கண்ட பத்திரியுடன் — பேருன 157

பஞ்சாங்க மிக்க பதினறு காய்ச்சூது
மிஞ்சு சதுரங்க விளையாடல் — அஞ்சாமல் 158

சீமைக் கணக்குரைத்தல் செய்ய புலியாடல்
நேமிதுபின் நெறிந்தநெல் கல்லுட னே — காமியரே! 159

துங்கமத யானையொடு சொன்னவினுக் கண்டுசொல்லச்
சிங்கத் திருந்துபிர சங்கத்தில் — வெங்கலத்தில் 160

ஓசைகண்டு பேருரைத்தல் ஒளிந்த பூவுரைத்தல்]
வீசுகெங்கை நீர்குடித்து மேயுரைத்தல் — யோசிளையில் 161

சாரி வருங்குதிரை தன்னை யறிந்துரைத்தல்
சீரி புராணத்தைச் செப்புவதும் — நாரி 162

பதினெ ரெழுத்தாணி பாவினங்க ளாலே
சதிராக வேயெழுதுந் தமிழ்சாற்ற — யெதிராளி 163

ஊடு திரைமரவில் ஓயாமல சொல்வதினுல்
சோடசவ தானியென்பேர் சொல்வார்கள் — பாடலது 164

ஆசுகவி சித்திரவித் தாரமுத லாய்ப்பகர்ந்து
தேசமதி லாண்மை செலுத்திடநாள் — பேசிச் 165

செகநாத மாம்பதியில் திம்மபட்ட நின்ற
மகராசி யான குணமாது — மிகுபசுபொன் 166

மேனியுற்ற மாதரசை மிக்க மணமுடித்து
யானு மவளும் ரதிமதன்போல் — மாநிலத்தில் 167

கூடிவிளை யாடிமனங் கூர்ந்திருக்கு மன்னளில்
பாடியெனும் மாணிக்க படடணத்தில் — நாடரிய 168

தேர்பார்க்கப் போயிருந்தேன் தேவடியா ளச்சேர்ந்தேன்
ஊர்புகுந்து வந்தேன்எம் மூர்புகுந்தேன் — சீர்பார்த்து 169

வீட்டுக்கு வந்தேன் மின்னள் முகம்பார்த்தேன்
கூட்டுமஞ்சள் வாடைக் குறியுடனே — கீட்டணைய 170

மார்மேல் நகக்குறியும் மாதுநல்லாள் கண்டுகொண்டு
நீரேது சூது நினைந்தீர்காண் — ஏராது 171

ஆருக் கடுக்கும் அசலாத்துப் பட்டர்கண்டால்
பேருக் கடுக்காத பேச்சுவைத்தீர் — நீரிப்பச் 172

சின்னஞ் சிரிசோ தெரியாதோ யிவ்வளவு
என்ன பெருமை இனிவருங்காண் — முன்னோர்கள் 173

சாற்றரிய நால்வேதஞ் சாத்திரங்க ளோராறும்
போற்றும் பதினெண் புராணகதை — யேற்றரிய 174

தெட்டா கம்புவியில் எண்ணான் கறஞ்சொலுமெட்
டெட்டாஞ் சகலகலைக் கியானவித்தை — இட்டமுள்ள 175

தத்துவந்தொண் ணூற்ருறு தக்கபதி னெண்பாஷை
மற்றவெந் திரதந்திர மந்திரமும் — இத்தனையும் 176

கற்றதினு லாய பயனென்கொல் வாலறியன்
நற்ருள் தொழா அ ரெனினின் — மற்ருெருவர் 177

கற்றதினல் தொல்லைவினை கட்டறுமே நல்குலம்
பெற்றதினல் போமோ பிறவிநோய் — உற்றதுகேள் 178

நஞ்சுகந்து கொண்டருளும் நாதனடித் தாமரையை
நெஞ்சுகந்து கொண்டால் நெறியென்று — செஞ்சொல் முன்னே 179

சொன்ன பழமொழிகள் தோராய மாய்த்தெரிந்த
இன்னகதை செய்தால்நான் என்செய்வே — னன்னவள்பால் 180

போவென்று சொல்லிப் பொற்கொடியா ளும்வெறுத்தாள்
நாமென்ன செய்வமென்று நான்மயங்கி — தாமிசமாய் 181

நின்றேன் தலைகவிழ்ந்து நேரிழையே குற்றமென்மேல்
ஒன்றுமில்லை என்றே உபசரித்தேன் — குன்றனைய 182

மாமுலையாள் பின்னும் மனம்வெருண்டு கொண்டுமுங்கள்
நேமமறி வேன்யிவடம் நில்லாமல் — போமெனவே 183

சிற்றினிச் சாதியென்று தேர்ந்து தெளிந்துமனந்
துற்பனத்தி லெண்ணி யுகந்திருந்தேன் — பிற்பாடும் 184

கண்டித் துரைத்தாள் கலியின் கொடுமையென்றே
தெண்டிக்க மாட்டாமல் திண்ணையிலே — ஒண்டி ஒண்டித் 185

தானிருந்தேன் ஓர்சாமந் தாட்டின ஆம்புகுந்தாள்
தானிருர்து பொற்கதவைத் தாள்போட்டாள் — யானிருந்து 186

பார்த்தேன் யோசித்தேன் பரதவித்தேன் தேகமெங்கும்
வேர்த்தேன் விருவிருத்து மேல்மெலிந்தேன் — நேத்தியிது 187

கைபிடித்த மின்னாள் கணவனை மீறிச்சினந்து
மற்பிடிக்க வந்தவளுக் கவ்வை — சொற்படித்தான் 188

கற்பகத்தைச் சேர்ந்தவர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததென்ன
முற்பகத்தைச் செய்தவினை முடிந்துதென உற்பனத்தில் 189

எண்ணினேன் முன்வைத் திருந்தபொருள் கைசேர்த்தேன்
புண்ணியத் தலங்களெல்லாம் பூசிக்க — அண்ணைக்கே 190

போவமென வேயெழுந்து போதமிக வேநடந்து
பாவமது தீருமென்று பாணித்தேன் — பூவையரை 191

விட்டுப் பிரிந்து மிகுந்திடுசிம் மாசலமாம்
பட்டண அகோபளமாம் பட்டணமும் — விட்டுநா 192

நாரா யணபுரமும் ராச மயேந்திரபுரம்
தீரா கியதுகிருஷ்ணா தீரபுரம் — பேராம் 193

திருப்புக்லூர் வேங்கடம் திருவொற்றி யூரும்
திருத்தணியுங் காளத்தி யுஞ்சேர் — திருப்புலியூர் 194

சென்னப்பட் டணங்காஞ்சி சேருமரு ணாசலமும்
தன்மைவிருத் தாசலமும் சிதம்பரமும் — பன்னரிய 195

சீரங்க மிக்க திருவானைக் காவல்நிரை
யாரஞ் சொரிதிருவை யாருடனே — சீர்சைகும்ப 196

கோணநக ராசமன்னார் கோவிலொடு சேதுவுமுக்
கோணமெனும் ஆவுடையார் கோவிலதும் — வாணர்மொழி 197

சித்திரரா மேசுரமும் தெற்பசய னநகர
உத்திர கோசமங்கை ஊருதிருக் — குற்றாலம் 198

பாவ விநாசம் பரங்குன் றஞ் செந்தூரம்
பூவார் மதுரா புரிநகரும் — தாடொழுது 199

தேடிமிகச் சுற்றிவந்து தீர்த்தங்க ளாடியருள்
பாடியரி யானென்பார் பதியான — தாடொழுது 200

போற்றினேன் செய்பவத்தைப் போக்கினேன் வெண்ணீறு
சாற்றினேன் தியானமது சாதித்தேன் — நேத்திபெறு 201

மீனாட்சி யைத்தொழுது வேண்டியபின் னவ்வூரிற்
பூனாச்சி யையர்மனை போய்ப்புகுந்தேன் — தானுக 202

வாருமென்று ரப்போது வாரமென்றே கண்ணாடி
பாருமென்று கைகொடுத்தார் பார்த்திருந்தேன் — சீராகச் 203

சேம சமாசாரந் தெரிந்தா ரவருடைய
சேம சமாசாரந் தெரிந்துகொண்டேன் — நேமமொடு 204

அஞ்சுநா ளங்கிருந்தேன் அப்பாலி லேயோருநாள்
செஞ்சொல்மிகுந் தென்பழனித் தேர்பார்க்க — நெஞ்சதனில 205

நாடினே னன்பொடுபூ ணாச்சியைய ரைப்பார்த்துக்
கூடனீர் வாருமெனக் கூப்பிட்டேன் — பாடுதமிழ் 206

வல்லீரே கேளுமந்த வாழ்பழனி யூர்தேர்க்குச்
செல்வீரே யவ்வூர்த் திறமையெலலாம் — பல்விதமுஞ் 207

சொன்னால் சிரிப்பார்கள் துய்யபழ னுபுரியில்
மின்னா மினிக்கியர்கள் மெத்தமெத்த — என்னாணை 208

தென்னுலவுஞ் சத்தி சிவகிரிவே லய்யனிட
சன்னதியில் தட்டந் தலையெடுக்கும் — கன்னியர்கள் 209

மூவா யிரம்பேரில் முத்தணிய மாயொருபெண்
பூவைமண மாலையென்னும் பொற்கொடியாள் — ஆவல்பெற 210

ஊர்சொல்ல வேணுமென்று உற்றோர்கள் சொல்லவுந்தன்
பேர்சொல்ல வேண்டும் பிரியமதாய் — சீராக 211

சந்தான பாக்கியமது தான்பெருக வேணுமென்று
விந்தைபெறு சஷ்டி விரதாதி — வந்தவந்த 212

சோமவா ரத்திஞெடு சுக்கிரவா ரந்தோறும்
நேமமொடு சந்தி நிலேபிடித்து — காமி 213

இரவுபக லீச்சுரனே யேற்றித் தொழுது
வரிசைத் திருவிளக்கு வைத்துப் — பரிவாய் 214

பலகரைகள் வைத்துப் பலகுறிகள் கேட்டுக்
கலகலெனக் காணிக்கை கட்டித் — தலேயாரி 215

எந்திர குளிசம் எழுதிக் கழுத்தணிந்து
மந்திரவெண் ணீறுதனே வாங்கியிட்டும் — சந்ததமுங் 216

கோவில்கள் கண்டதெல்லாம் கும்பிட் டடிபணிந்து
ஓவியம்போ லீயாத உலுத்தர்தனே — ஆவல்விட்டுக் 217

கண்டியுண்ட மின்னணங்கு கெற்பந் தரித்திடவே
கிண்டி மருந்து கிளரியுண்டு — வண்டமிழின் 218

பாமாலே கேட்டுப் பலதான மும்புரிந்து
பூமாலே நந்தவனம் போட்டுவைத்தும் — ஆமாங்கேள் 219

மன்னர்கிரை நண்ணூர் வாழ்வேத நாயகியாள்
சன்னதியின் முன்பு தவங்கிடந்தும் — இன்னபடி 220

வேண தவம்புரிந்து வேண்டி யிருக்கையிலே
நீணிலத்தி லோர்மாது நித்திரையில் — ஆணழகர் 221

அற்புதம்போல் செம்பவளம் ஆரோ கையில்கொடுக்க
சொற்பனத்தைக் கண்டு துணிந்தெழுந்தாள் — உற்பனமாய் 222

விண்ணுலகில் மேகமது மிக்ககெற்சி தங்கூற
மண்ணுலகில் மஞ்ஞைகெற்ப மானதுபோல் — பெண்ணரசி 223

கெற்பந் தரித்துமனங் கெற்சிதங்க ளுண்டாகி
பற்பலநா ளாகவும்வாய் பாறலுற்று — அற்புதமாய் 224

மூன்றுதிங்க ளாக முகத்தில் குருவேர்வை
தோன்ற வயரவைதப்புத் தோன்றியே — தான்றூன் 225

மசக்கையுள்ள பேரை மசக்கிய மின்னுள்ளாம்
மசக்கைகொண்டு நாலேந்து மாதம் — நிச்சபடவே 226

நாவுக்கு ளுப்பெரிப்பு நல்ல துவர்ப்புளிப்பு
ஆவெனத்தித் திப்புரைப்பி லாசைகொண்டாள்—பூவைமின்னுள்

மாங்காய் புளிக்காய்செம் மண்சுவர்க்கல் காவிக்கல்
ஆங்காண வெண்சாம்ப லதுதின்ருள்—பூங்குழலாள் 228

பண்பான மேனிதனிற் பச்சை நரம்போடக்
கண்சார லுங்குளிர்ச்சி காணவே—ஒண்சார 229

ஆரேழு திங்கள் அடவான கெர்ப்பமதில்
மீறுகொங்கை சற்றே சிரங்குனிய—யேருமல் 230

போத வலதுமுலைப் பொட்டகம்போ லேசிறுத்து
மோது மிடது முலைபருத்த—ஆதரவைக் 231

கண்டாள் குறிப்பதனி லக்க மணிபோலப்
பெண்ரூபம் உண்டாமெனவே உறுதிகொண்டாள்—ஒண்டொடியாள்

கன்னம் ஒடுங்கக் கனதேகம் பூரிதமாய்
முன்னே வயிறு முதிர்ந்துவர—மின்னரசி 233

ஒரெட்டு மாதம் உறுதியாய்க் கெர்ப்பமதில்
சீருற்ற ஒன்பதெனுந் திங்களுமாய்—பேர்பெற்ற 234

பைந்தமிழோர் போற்றும் பவானி நகரதனில்
வந்தசங்க மேச்சுரனும் மாதேவர்—தந்தருளும் 235

ஆனை முகவர்க் கழகான தொந்தியைப்போல்
தானே வயிறுமுன்னே தள்ளிவந்து—நான 236

முலைகருக்க அரைநெகிழ முகம்வெளுக்க நளினிமைக்கண்
நலமுரைக்க மதுகொடுத்த நயமிகுத்த—பிலிதகெர்ப்பம் 237

திங்களொருபத்தும் திரண்டு நடைதளிர்க்க
மங்கை வயிறு வலியாகி—பெண்களும்வந் 238

தெங்கே வலிக்குதடி ஏந்திழையே என்றுரைக்க
இங்கே வலிக்குதென்வயறு—குங்குமப்பூ 239

மேனி துவள வெகுமூச் சொடுதாதி
யேனென்வோர் பைங்கிளியை யீன்றெடுத்தாள்—மானனையாள்

ஆணென்ற போதே அயர்வுற்ருள் அல்லடிபெண்
தோணுதென அங்கே துணிந்தெழுந்தாள்—காணுது 241

கண்டதுபோல் ஒண்டொடியாள் கையா லெடுத்தணைத்துக்
கொண்டுநீ ராட்டிவட்டில் கொண்டுதட்டித்—துண்டாக 242

வந்தாடை யில்துவட்டி மாணமடி மேல்வைத்து
முந்தமுலைப் பாலினில்முப் பீற்கத்தி—பிங்திவங்த 243

பாலெண்ணெ ? யேத்தும் பசுப்புங் தசுக்குவித்தை
சாலவருங் குண்டினிகோள் தட்டவட்டம்—வோலாயம் 244

அங்தியூர்ச் சாடிசொல்லி அவ்வூருத் தாசிகளில்
சம்பந்தத் தொழில்மோச மாமாலம்—பைங்தொடியாள் 245

செய்வஞ் சனைகபடம் தேர்ந்ததிருட் டுப்பிரட்டும்
பொய்யுத் திரமும் புனைசுருட்டும்—வையகத்துத் 246

தோதகமும் பாதகமும் சூது முளவாதும்
ஓதிக் கலந்தொன்ருய் ஊட்டினுள்—மாதுசெம்பொற் 247

காப்பிட்டாள் வெண்ணீற்றுக் காப்பிட்டாள் மிக்கநிலக்
காப்பிட்டாள் பொட்டிட்டாள் கார்குழலாள்—கொப்பிட்டாள் 248

வாலிபரைக் கைக்குள் வளையெனவே ரெத்தினத்தால்
மாலிமையாய்க் கைக்கு வளையலிட்டாள்—நூலதனுல் 249

அக்குமணி பொற்பவளம் ஆங்கரிய பாசியுடன்
மிக்க சரங்கழுத்தின் மீதணிந்தாள்—கைக்கடங்காத் 250

தண்டெரியக் காத்துச் சன்ருசியும் விரகங்
கொண்டோ மன்மதனுர் கூத்தோ—விண்டேறிப் 251

பாலெரியப் பரங்கிப் பட்டை விலையேறி
வாலிபர்கள் வேப்ப மரமேற—மேலிமையாய் 252

மேடேரச் செம்பொன் விளைவேரத் தங்கள்குடி
யீடேர வென்றுதொட்டி லேற்றினுள்—நாடிவந்து 253

தாரார் தவருதார் தந்துதந்து நின்சமுகங்
காரார் தவருர் கைகழரார்—போரார 254

ராராா வும்பகலும் ஆசைகொண்டு சேராரார்
ராராரா வென்றுதொட்டி லாட்டினுள்—சீரான 255

கண்ணே மணியே கருவூல மேயினிய
பெண்ணே யமுதே பசுந்தேனே—பெண்ணரசே 256

வாழ்வே யெனதுயிரே மானே யினியெனக்குத்
தூழ்வே தெனவே தயவாக—நாளுமொரு 257

வண்ணம் பொழுதும் வண்ணமாய்த் தான் வளர்த்தாள்
எண்ணந் தனைத்துறந்தான் ஏந்திழையாள் —கண்ணுடனே 258

ஒத்திமுத்த மிட்டணைத்து முற்பணத்தில் மெச்சிமெச்சி
நித்தநித்தம் அந்தி நிலாக்காட்டிக்—கைத்தலத்தில் 259

கொட்டமடி மீதிருத்திக் கொண்டு முகம்பார்க்க
எட்டி விழுந்துநகை யேபுரிய—நட்டணையாய் 260

முன்வைத் தழைக்க முருவல்புரிந் தேதவழ்ந்து
பின்வைத் துயர்ந்து பெயர்ந்துவரப்—பெண்ணரசி 261

தாவெடுத்த பாவிணைபோல் சந்தோஷ மாய்மகளை
மாவெடுத்த கண்ணுள் மனங்குளிர்ந்து—தாவெடுத்து 262

மார்போட ணைத்து மதிமுகத்தை முத்தமிட்டு
வீரியமாய்க் கெஞ்சி விளையாடி—சாரிசமாய்ச் 263

சப்பாணி கொட்டித் தவழ்ந்து மொழிகுழறி
அப்பால் குதலைமொழி யால்பகர்ந்து—மெய்ப்பாகக் 264

கொன்னிக் குளரிமுத்துக் கொஞ்சிமிக ரஞ்சிதமாய்
யின்னிசைபோல்ப் பன்னுமொழி யேயுரைத்தாள்—பொன்னினணி

பாடகமும் பொற்சதங்கை பாதசரம் ஆடவர்மேல்
சாடிமிகச் சண்டையிடத் தண்டையிட்டாள்—நீடுசெம்பொற் 266

பட்டையரை ஞாண்மருங்கில் பார்த்தணிந்து கைக்கடகம்
யிட்ட முத்த மிட்டே யிருகுழைக்கும்—கட்டழகி 267

மத்திக்காய் தொங்கவிட்டு மையெழுதிப் பொட்டுமிட்டு
நெற்றிதனிற் சுட்டிகை நீட்டிவிட்டாள்—சித்திரம்போல் 268

வண்டமலுக் குப்பிலுக்கு மானேவி டாதேயெனக்
கொண்டைமலுக் கில்முத்துக் குச்சணிந்தாள்—ஒண்டொடியாள் 269

கன்னத்தை நீவியிரு கைமடித்து முத்தமிட்டுச்
சின்னச் சிறுபணிதி சேர்த்தணிந்தாள்—வ(ர்)ன்னமுள்ள 270

காம ரசக்குளிகை கண்ணுடி யென்றுபெயர்
நாமம்வைத்தாள் காமுகற்கு நாமம்வைக்க—நேமழ் 271

தாழ்ந்தசங்க மேசிரு தாழ்பணிவோர் செல்வம்
வாழ்ந்ததுபோல் மின்னாள் வளர்ந்தாள்—எழுந்தெழுந்து 272

எட்டி அடிவைத்தாள் இதைக்கண்டாள் தாய்க்கிழவி
பொட்டிரொம்பு மென்றுமனம் பூரித்தாள்—சட்டமதாய் 273

காட்டுக் கரும்புக்குக் கணுவேறும் பாவினைபோல்
வட்டமுக மின்னாள் வளர்ச்சிகண்டு—நட்டணையாய்க் 274

கட்டழகி மின்னாட்குக் காதுகுத்தித் தோடுமிட்டுச்
சட்டமதாய் மூக்குத் தளுக்குமிட்டு—வட்டநுதல் 275

தேனார் குழலாளுஞ் சிற்றாடை கட்டியெழி
லானாள் நடைபயின்றாள் அன்னமென—மானாரோ 276

டம்மானை யுங்கழங்கு மாடி மகிழ்ந்துசிற்றில்
அம்மாகக் கட்டிவிளை யாடிவரத்—தன்மேனி 277

முத்திரத்தி லொன்றிரண்டு மூன்றுநாலைந்தாதிச்
சித்திரத்தி லுற்றிடுவிச் சித்திரம்போல்—புத்தமுர்தை 278

ஆடவிட்டு மேர்ப்பரதம் யாவுந்தெரிந்து கொண்டு
பாடவிட்டாள் கீதம் பலிக்கலுற்றாள்—நாடறியத் 279

தம்புருவும் வீணையிசை சாரங்கி ஏழிசையும்
தும்புருவர் போலே தொழில்கற்றாள்—அம்புவியில் 280

செந்தமிழுங் கன்னடமுஞ் சீரா கியதெலுங்கும்
யிந்துவியும் நாகரமும் யிங்கிலீசும்—விந்தைவிந்தை 281

யானபல பாசைமுதல் எல்லாந் தெரிந்துகொண்டு
கானவித்தை தன்னில் கடிதானாள்—மோனவித்தை 282

கற்றவரைத் தான்மயக்க காயக்க வித்தையுடன்
மற்றவரைத் தான்மயக்க மாமாலம்—வெற்றிபுரி 283

செஞ்சிப் பிலுக்குடனே செய்யபித்த லாட்டமிந்தத்
தஞ்சாவூர் வந்த தசுக்குவித்தை—அஞ்சா 284

மதுரைஎத்துக் காரைமடை வந்த கலவிமிக்க
சதுருறு கன்னடக் கஸ்த்தூரி—விதவிதமாய்ச் 285

*சாணத்தி னங்கள்சொலுந் தந்திரமும் மந்திரமும்
வேணமட்டும் கைக்குள் மீட்டானாள்—நாணம் 286

*' சாணககியஙகள் ' போலும்

ஒடுக்கம் அடக்கம் வயதொன்பது பத்தாதி
எடுத்தபே தைப்பருவம் யீதில்—தடித்து முலை 287

பொற்காசு போலே புடைத்த பளபளப்பு
விற்காசு மேலாசை மீட்டினுள் — நிற்காமல் 288

ஈயவில்லை போலே எழுந்துவட்ட மிட்ட துரு
பாயைப் பரிக்கப் பயனறிந்து—நெய்க்கோட்டை 289

பாக்களவ தாகப் பருத்ததைத்துச் சற்றையெட்டிப்
பார்க்கவுந்தந் நச்சிமிளொப் பானநயம்—தீர்க்கமுமாய்த் 290

தாலவட்ட மாய்த்திரண்டு தானேபூஞ் செண்டாகி
ஆலவட்ட மிட்டே அழைத்துவர—வாள்விழியாள் 291

பார்த்தாள் மகளுடைய பான்மையெல்லாந் தானினிமேல்
வேத்தா ளாகு மெனநினைந்து—நேர்த்திபெறச் 292

சீவி வகுப்பெடுத்துச் செய்யசடைப் பின்னலில்பொன்
பூணாமணிக் குச்சும் புனைந்தாள் —சீவுரெத்தினம் 293

பெற்ற திருவும் பிறையணிந்த நெற்றியொடு
நெற்றிதனில் மூல நிழல்காட்ட—உற்றுமயல் 294

மட்டளவி லாமல்வரு மாப்பிளைமார் காசையெல்லாம்
சொட்டெனவே எட்டுமணிச் சுட்டியொன்று—கட்டிவிட்டாள் 295

பொட்டழகி யாவர்களும் பொட்டெனச்சிக் கட்டுமென்று
கட்டழகிக் கிட்டபொட்டு கட்டுமெட்டோ—நட்டணையாய் 296

முத்தணிந்து கொண்டிருந்த மூக்கின்மிசை முத்துடனே
நத்தணிந்த நேர்த்தி நளினமோ — நித்தியமும் 297

வாலிபரை மோக வலைக்குளணை யென்றுகந்த
ளோலையிட்டாள் வாகிலியும் ஒன்றணிந்தாள்—சாலமிகப் 298

பொன்னைத்தான் தேடிப் புதைத்திடுவா யென்றுசொல்லி
ஒன்னைப்பூ வாளிகுழை பூடணிந்தாள் —பொன்னருள்வார் 299

காமார்க்குஞ் சிலரைக் கைவசமாக் கென்றுசொல்லி
ராமராக் கென்று நடுவணிந்தாள் —மாமயிலுந் 300

தாக்கிட்டுக் கைப்பொருளைத் தந்தமட்டு மென்றெருசிந்
தாக்கிட்டாள் தாய்க்கிழவி தன்மகட்கு—வாக்கிட்டு 301

அட்டிகைஉத் தண்டமணி ஆரமுத்து மாலைசரம்
கட்டுவடம் பொற்பணிதி கழுத்தணிந்தாள்—கட்டழகி 302

பட்டுரவிக் கைதொட்டுப் பந்துமுலை பாதிவிட்டு
இட்டமுடன் தொய்யி லெழுதிவிட்டாள்—சட்டமுடன் 303

கங்கணங்கட் டிப்புவியோர் காசைப் பறியெனவே
கங்கணமுஞ் சூடகமுங் கையிலிட்டாள்—இங்கிதமாய் 304

மல்லெழுத்து மாப்பிளைமார் மார்பழுத்த முன்கொடுத்த
கல்லெழுத்து மோதிரத்தைக் கையிலிட்டாள்—சொல்லெழுத்து 305

மேகலைசேர் தண்ணிடையின் மீதிலொட்டி யாணமொடு
நாகரிகப் பொன்னினரை ஞாணணிந்து—வாகான 306

கால்மோ திரங்கள் கலகலெனச் சிற்றடியின்
மேலே பணிகள் மினுமினெனக்—கோலமலர் 307

சூட்டினர் ஆபரணம் தோணமட்டும் வேண்டியதைப்
பூட்டி யலங்கரித்தாள் பொற்கொடியை—நாட்டினிலே 308

தென்னூர் பழனிச் சிவகிரிவே லய்யரிட
சன்னதியின் முன்பாகத் தன்மகளை—நன்னயமாய் 309

இரக்தாட்சி வருடம் நன்மேடத் திங்களொடு
சித்ரா பௌர்ணமைத் தேருநன்று—சித்திரைநாள் 310

மங்கள வாரமதில் வையகத்தோர் கொண்டாட
இங்கித மாகவரங் கேற்றிவைத்தாள்—மின்கொடிக்கு 311

பேதைப் பருவம்போய்ப் பெதும்பைப் பருவமதில்
ஓதும் வயதுபதி னென்ருகி—மாதுநல்லாள் 312

சன்மான மாகச் சரசமொடு வந்தவரைத்
தன்மாம னென்கத் தலைப்பட்டாள்—என்னேரம் 313

கொச்சிமஞ்சள் பூசிக் குளிப்பதுவும் வந்தவரை
மச்சினனென் றேசி மரிப்பதுவும்—மெச்சி மெச்சி 314

மோசமுள்ள பேரை முறைமசக்கிக் கிள்ளியுஞ்சி
நேசமொடு சற்றே நிமிண்டுவதும்—யேகாந்தம் 315

நட்டணையும் வாலிபரை நாடுவதுஞ் சற்றைஎட்டித்
தொட்டணைய வந்தால் துலுக்குவதும்—கட்டழகி 316

பேசுவதுஞ் சற்றே பிலுக்குவதுஞ் சைகைசொல்லி
யேசுவதுங் கண்டவரை யேத்துவதும்—வாசனையள் 317

பூசுவதும் மேல்புருவம் போடுவதும் பேசமனம்
கூசுவதும் சற்றைசற்றைக் கொஞ்சுவதும்—ஆசையுடன் 318

மைக்கண்வலை வீசுவதும் மையல்கொண்டு வந்தவர்தன்
பக்கல் பரியாசம் பண்ணுவதும்—மிக்கபதம் 319

பாடுவதும் ஆடவர்க்குப் பாதி முலைதெரிய
மூடுவதுஞ் சற்றே முருக்குவதும்—மோடிசெய்து 320

காட்டுவதுங் கண்சாடை காட்டுவதும் மிக்கமையல்
மூட்டுவதும் மெள்ளப் பொருள்பறிக்க—தேட்டமதாய் 321

வார்த்தைப் பசப்பும் வழிநடைய லேயலுக்கும்
ஏய்த்துத் தசுக்குமதி லேற்றப்பும்—பார்த்தறிந்து 322

கண்டாள் மகளுடைய கற்பனையெல் லாந்தெரிந்து
கொண்டாள் மனமகிழ்ந்து கொண்டாடி—ஒண்டொடியாள் 323

சந்தனமி குங்கலவை தம்புபெரு குங்குமமி
ட்டர்ந்திட அணிந்திட வலங்கிருத—மிகுந்தமத 324

கும்புளக வும்பாவ வுங்கலச முங்கனக
கும்பமென வும்பெருமை கொண்டுவிம்மி—இன்பமொடு 325

மேருகிரி யைப்பழித்து விண்ணூர்ந்து அண்ணூந்து
சீருலவு கொங்கை திரண்டெழுந்து—பூரிதமாய் 326

ஆகங் குளிர்ச்சியுடன் அங்கே குலைவுகண்டு
மோகஞ் செனித்து முகங்கனிவாய்—தோகைருது 327

வாயினள் தாயிமகள் வாகினள் காமுறுவர்
பாகினர் சொல்லாளைப் பார்த்துநின்று—மோகமுறக் 328

கண்டாள் கிழவிநம்ம கன்னிபக்கல் வந்தவரை
செண்டாட லாமெனவே தென்புபண்ணி—உண்டான 329

பொன்னை யொருதர்வில் புதைத்துவைத்தாள் தானீன்ற
மின்னை வடிவாக மினுக்கிவிட்டாள்—அந்நேரம் 330

செல்லாப் பணத்தையெல்லாஞ் சேர்த்திவைத்தாள் பொல்லாப்புச்
சொல்லாப் படிமகட்குச் சொல்லவந்து—வல்லாண்மைப் 331

பெண்ணே யிளம்பிடியே பேடைமயி லேகுயிலே
கண்ணே நானீன்ற கருவுலமே—மண்ணின்மிசை 332

தேனே கரும்பினுக்குத் தித்திப்புச் சேர்த்தினதார்
மானே குதிகள் வருத்தினதார்—தேனிருக்கும் 333

பூவுக்கு வாசம் பொருத்தினதார் தங்கள் தங்கள்
நாவுக்கு ரசம்ந வின்றவரார்—பூவுலகில் 334

எத்தனைவி தட்சணமி ருக்கினுமு னக்குநிகர்
மற்றொருவ ரைச்சொலவ ழக்கிலைபார்—புத்தமுதே 335

அன்னமே ஒளவைமொழி அன்னையும்பி தாவுமினி
முன்னறியுந் தெய்வ மெனமொழிந்தாள்—அன்னதிறல் 336

மின்வாய்த்த நுண்ணிடையில் மின்னரசே பூவுலகில்
என்வார்த்தை கேட்பதுசற் றேர்க்கைதான்—என்வார்த்தை 337

உன்வார்த்தை யேயதிகம் ஒப்பிடலாம் ஆகுநாளென்
தன்வார்த்தை தன்னையினித் தட்டாதே—மின்னரசே 338

வேசியர் விருத்தாந்தம் விளம்புகிறேன் சற்றையினி
யோசனையாய்க் கேளிதனில் உண்மையெல்லாம்—பேசி 339

பலவித்தை கற்கப் படாம லிருந்தாலும்
நலமுற்ற பூவுலகில் நாரி—குலவித்தை 340

கல்லாமல் பாதியெனக் கற்றோர்கள் முன்னைசொன்ன
தெல்லாந் தெரியுமே யேந்திழையே—அல்லாமல் 341

தாசிமுறை பார்ப்பதற்குச் சங்கதியுண் டோபணமுங்
காசே புருஷனடி கார்குழலே—ராசலிங்கப் 342

பண்டிதரை நான்சேர்ந்தேன் பண்டிதனுர் மைந்தர்பணங்
கொண்டுவந்தால் நீயுங் குலுக்காமல்—மண்டலத்தில் 343

வாலிபமே நம்மனுக்கு மாப்பிள்ளையு மாகுமந்த
வாலிபத்தை நீயும் மறவாதே—வாலிபத்தில் 344

தாயகமாய் வேணபணந் தந்தணைந்தால் அன்பிலொரு
நாயகர்மே லாசைவைத்து நாடாதே—ஆயிழையே 345

தள்ளாடிக் கொங்கை தளர்ந்து விழுந்தாக்கால்
செல்லாக்கா சொன்றுகொடார் தேன்மொழியே—நல்லதலை 346

துப்பைப்பூப் போல்நரைத்த தோகையருக் கென்னவரும்
தொம்பரத்தி லம்பலமாய்த் தூங்கவரும்—தெம்பாக 347

இந்த வயதினிலே வந்தபொருள் குத்திருமல்
வந்தபிற கொன்றும் வராதுகண்டாய்—சுந்தரமே 348

முன்னிருந்த பெண்களிலே முக்கியமாய் வாழ்ந்தவர்கள்
இன்னவ ளென்றேநா னியம்பக்கேள்—தென்னூர் 349

மதுரைதனிற் பொன்னியென்றும் மைசூரிற் சின்னி
கதிர்காமந் தன்னில்முத் துக்காளி—அதிசயமாந் 350

தஞ்சாவூர்ச் சுப்பியிந்தத் தாரா புரத்தில்வள்ளி
வெஞ்சமரக் கூடல்நகர் மீனாட்சி—பஞ்சமா 351

பாதகத்தைப் போக்கும் பரங்கிரியூர்க் காமாட்சி
மாதவஞ்சீ ரங்கமதில் வாழ்சேஷி—ஓதும் 352

சிதம்பரத்தில் தெய்வி திருவானைக் காவல்
மதங்கிமகிழ் முத்துரத்ன வல்லி—இதம்பரவும் 353

பேரான குள்ளியவள் பிள்ளைமுத்து வள்ளியென்றுஞ்
சீராருஞ் சங்ககிரி செல்லியென்றும்—யீரோட்டில் 354

முத்துநஞ்சி வெள்ளோட்டில் மோகனத்தி பாடகத்தி
வத்துவுரை சென்னிமலை வந்தகுப்பி—சித்திரஞ்சேர் 355

அந்தியூர்க் காமி அவினாசி ராமிபுகழ்
முந்தியகெட் டிச்செவியோர் முத்துரத்தினம்—இந்தத் 356

துடுப்பூதிச் சண்முகமுஞ் சூலூரில் கன்னி
திடப்பெருமா னூரில் வருஞ்சின்னாள்—கடத்தூரில் 357

முத்தியழ காங்கோய முத்தூரில் முத்துமங்கை
சத்திமங்க லத்திலின்பந் தந்தபுட்டி—இத்தனைபேர் 358

பொன்னே புருஷனென்று போற்றித் துதிபுரிந்து
பொன்னதனைத் தேடிப் புதைத்துண்டார்—பின்னுமவர் 359

தன்மத்தைத் தேடினுர் தக்கபெயர் தானெடுத்தார்
என்மகளே நீயும் இவையறிந்து—மன்மதனுர் 360

கோவிலுக்கு வந்தவரைக் கூசாமல் நீயழைத்து
மேவிலக்கில் லாதபண மேபறிநீ—பூவையரே 361

செங்கோல் துரைகளுன்னைச் சேர அழைக்கவிட்டால்
தங்காமல் சென்று சலுதாக—அங்கனேபோய்த் 362

தோய்ந்து கரணச் சுரதவிதச் சும்பனத்தில்
சேர்ந்து மனதிளகச் சேர்ந்துகொண்டால்—ஆந்திரியம் 363

பொன்னை யொருதிரணம் போலேயோ சித்திடுவார்
உன்னை இரவுபக லும்மறவார்—மின்னரசே 364

பேராக லக்காய்ப் பிழைக்கலாம் பார்த்தவர்க்குஞ்
சீராயெண் ணிக்கை செனித்திடுங்காண்—நேராக 365

நாட்டு மணியம் நடத்திவரு வார்கள்சின்ன
வீட்டி லழைத்தொருநாள் மேவிவிடு—தாட்டியவர் 366

போகையிலே பின்னோடே போகையிலே தந்தமட்டும்
நீகையிலே வாங்கிவிடு நேரிழையே—மோகமதாய்ப் 367

பெற்றதாய்க் குப்பயந்து பெண்ணே உனைநாடிச்
சிற்றறிவில் சின்னஞ் சிறியவர்கள்—நற்றிவந்தால் 368

வாருமென உள்ளரையில் மஞ்சணையின் மீதிருத்திக்
காரியத்தைப் பார்த்துக் கசக்காமல்—வீரியத்தைப் 369

போக்கியந்தச் சேதி பிறத்திக்குச் சொல்லாமல்
மார்க்கமதாய்த் தாட்டிவிடு மானணங்கே—ஊர்க்குள்ளே 370

பாத்தியக் காரருன்மேல் பட்சம்வைத்து முன்னிருந்த
பேருக்குத் தியோகப் பிரட்டுவந்தால்—நாரியின் 371

உத்தண்டா வைத்தாபொன் னோலையைத்தா மாலையைத்தா
முத்துவடங் கட்டுவடம் மோதிரந்தா—சத்தியாய்த் 372

தானடகு வைத்துமிந்தச் சல்லியமுந் தீர்ந்தபின்பு
மானனையீர் கேளுமொரு மாசமதில்—நாணயமாய் 373

வட்டிமுத லுங்கொடுத்து வாங்கித் தருவனென்று
செட்டியா யுன்னைவந்து கேட்பார்கள்—அட்டிசொல்ல 374

மாட்டாமல் சிக்கி மயங்காதே ஞாயானைக்
கேட்டாக வேணுமென்று கெம்பிமெள்ளத்—தாட்டிவிடு 375

என்னைவந்து கேட்டால்நான் ஏறுவே னப்பிரமும்
உன்னைவந்து கேட்க ஒடுங்குவார்—பின்னொருவன் 376

பூவணையின் மேல்பூசை போடுஞ் சமயத்தில்
மேவுந்தா னுபதியன் விட்டொருவன்—ஆவலொடு 377

கூப்பிட்டா லேசமையல் கூடத்தி லேபதுக்கி
சாப்பிட்டு வாரனெனத் தானெழுந்து—பேய்ப்படுவான் 378

றன்னைத் திருத்திச் சமையல்வீட் டில்புகுந்து
பொன்னையொரு வேட் டுப் போட்டுவிடு—பொன்னையும்நீ 379

வாங்கி மறுகஇந்த வங்கணக்கா ரன்றனையுந்
தாங்கிஇவன் கைப்பொருளைத் தான்பறிப்பாய்—பூங்குழலே 380

வெட்டி மணியம் வெருமுண்டர் கண்டர்துடை
தட்டிவரு வார்காசு தானுதவார்—பட்டுளுவார் 381

வந்தா லிடுப்பு வலிக்குதென வேகுறுக்கி
முந்தாணிக் குள்ளே முடக்கிக்கொள்—தந்திரமாய் 382

பந்தயங்கள் போட்டுப் பசப்பிக் கலந்தனைய
வந்திடுவார் ஓர்காசு மட்டுருளார்—அந்தஅந்த 383

தத்தாரிப் பட்டுளுவார் தங்கள்முகம் பாராதே
வித்தாரஞ் சொன்னாலு மேவாதே—*அத்தேரி 384

மாக்கென் றதட்டி வருவார் அவர்கையில்
பாக்கென்றும் வெற்றிலையும் பத்தாதே—மேற்குக் 385

கரைவளியான் றன்னையும்நீ கைசேர்த்துக் கொண்டாக்கால்
பரிவுடனே வேண பதார்த்தம்—வரிசையாய்ப் 386

பொதிபொதி யாய்நெல்லைப் பிடித்தனுப்பு வான்பார்
அதிபதியாய் வாழ்ந்திருக்க யாரும்—விதம்விதமாய் 387

பூஷிகையால் மீசை முறுக்கிவரும் வம்பருட
மாளிகையிற் சிக்கி மயங்காதே—மேலான 388

---

*ஐத்தெரிபாட்சா என்னும் உருதுச்சொல்.

பொற்கடகக் கையணங்கே புத்தூரு நாகிசெட்டி
தன்கூடையி லேசிலவு தான்வாங்கு—அன்புணவுன் 389

தாட்சுணியக் காரனடி சண்டை யிட மாட்டான்காண்
பேச்சறிந்து பேசாத பேதமையான்—சீச்சீயென் 390

றேய்க்கலாம் பலசிலவு எப்பத்தந் தாயெனக்குப்
பார்க்கலா மிப்படியே பண்ணுசொன்னேன்—மூர்க்கச் 391

சாராயங் கள்குடிக்குஞ் சல்லிப் பயல்கள்முகம்
பாராதே மோசப் படுத்திடுவார்—பேராத 392

ஆசைகொண்டு முன்பின் அறியாத பேர்கள் தங்கள்
காசுபண முங்கலந்து ரொக்கம்—பேசியொரு 393

கெண்டாய் முடிந்து கிழிகட்டித் தாரனென்று
வண்டப் பயல்கள் வலியவந்து—கண்டிதமாய் 394

சொல்லிக் கலந்துநித்திரை சோதிச்சு விட்டுமுதல்
எல்லாம் பொருக்கி எடுத்துமவர்—சொல்லாமல் 395

சாமத்தி லேயெழுந்து தாட்டுந் திருடர்தமை
காமியரே யாரென்று காண்பமடி—தேமொழியே 396

முக்காலுஞ் சொன்னேனுன் மோசக்கா ரப்பயல்கள்
பக்கலிலெ நாடிமுகம் பாராதே—கைக்காரர் 397

*அக்கரையி லேயிருந்து அக்கரையாய் வந்தவரைச்
சக்கரைபோல் பேசிச் சரசமாய் — சொக்கியுந்தன் 398

செவ்விதழில் மிக்கநறுந் தேன்தடவி முத்தாடுங்
கொவ்வை யிதழ்பருகிக் கொண்டிரசம்—வெவ்வியவன் 399

புட்டப் பகலிலுங்கை பார்ப்பான் மணம்பிடிப்பான்
குட்டியிட்ட நாய்போல் குலவுவான்—கெட்டியாய் 400

வீட்டைவிட்டுப் போகான் வெறிபிடித்தாற் போல்திரிவான்
கூட்டிகையாய்க் காசையெல்லாஞ் சொட்டிவிடு—வீட்டைவிட்டு

தாட்டியவன் போம்பொழுது சாமியுன்னை விட்டிருக்க
மாட்டனென்று சொல்லி மரித்துக்கோ—போட்டபொடி 402

---

* 398, 399 ஆகிய கண்ணிகள் 400, 401 என்ற எண்களால் மறுபடியும் மூலத்தில் எழுதப்பட்டுள்ளன.

என்னுடைய கைம்மருந்து என்னசெய்த தோபார்நீ
உன்னிசமாய்க் கண்ணீரு திர்த்துநின்பான்—பின்னையவன் 403

அப்புரமும் போகான் அழகுசெவ்வாய் சிந்தைகளித்
தப்பாலே வாரனென்று ஆணைவைப்பான்—ஒப்பி 404

வலக்கையடித் துக்கொடுப்பான் வந்துவிடு அந்தப்
பிலுக்கெலாமாக் காசுவரும் பெண்ணே—சொலுக்கறிதாம் 405

கூறுமத னூலும் கொக்கோகம் பார்த்தமிண்டர்
நூறுபொன்னுங் கொண்டு நுழைந்துமயல்—மீறிடுவார் 406

என்னாணை சற்றும் இணங்காதே கொண்டுவந்த
பொன்னூறு போனாலும் போகட்டும்—பின்னாலே 407

தேகம் பிழைத்திருந்தால் தேடலாம் பொன்னுடைமை
மோகஞ் செனித்து முழுமதியே—வாகுடனே 408

கற்றோர் தமிழ்பாடிக் கைவீசிக் (கண்வீசிச்)
சற்றே யுடலும் தலையசைத்தும்—வித்தாரஞ் 409

சொல்லிவந்து கையைச் செறிந்தாலும் வங்கார
மெல்லிநல்லாள் நீயொருநாள் மேவிவிடு—அல்லவென்று 410

சொன்னாலும் போகார் துடுக்காக வாக்கிடுவார்
பன்னாளும இந்தப் படிநடநீ—மின்னரசே 411

பொன்னொருவன் தான்கொடுத்து போதக் கரையிலே
பின்னொருவன் ராசவட்டம் பேசினால்—அன்னவனைச் 412

சாடைசொல்லி யேயழைத்துத் தான்மாட்டுக் கொட்டகையின்
கூடத்து லேமறைத்துக் கொண்டிருந்து—நாடிமிக 413

வாசலுக்கு வந்தவளபோல் மாட்டிமயல் பூட்டிமன
தாசையின்பங் காட்டி யணைந்துரொக்கம்—ரோசுபற்றி 414

கைகா லலம்பிவந்த காரிழைபோல் முன்னிருந்த
பையலையுந் தெட்டிப் பணம்பறிநீ—வையகத்தில் 415

கோவில் கணக்கர் கொடும்பகைகள் தேடாதே
பூவிற் றிடுங்கடையில் புல்லுவிற்கப்—பாவிமகன் 416

பண்ணுவான் சம்பளமும் பற்றும லோர்வேலை
சண்ணுவான் கேள்டியே தையலரே—நண்ணிசெய்த 417

அத்திக் கார னழைத்தா லொருவேளை
மததியானப் பூசைநன்ருய் மாட்டிவிடு—தத்தாரித் 418

தானீகன் றன்னைத் தசுக்கிச் சுயம்பாகி
ஆனவனை மெள்ள அனுசரிநீ—தேனுநறும் 419

பாலுங் கலந்திருந்த பஞ்சா அமுர்தமும்முக்
காலுந் தாளிகைகள் வாடிச்சால்—சாலநித்தம் 420

கொண்டுவந்து தான்கொடுப்பான் கூசாமல் எல்லோரும்
உண்டு சுகிக்கலாம் ஒண்டொடியீர்—தண்டுவனும் 421

மாலைகட்டி தன்னை மயக்கிஞல் ஓர்தாவில்
ஓலைவிட ஆளாய் உரைத்திடலாம்—வாலிபத்தில் 422

முன்பரதங் காட்டியிசை மீட்டியுன்னை ஆட்டிவைத்த
வன்பரத நட்டுவனை மாத்திரம்நீ—இன்பரசம் 423

ஊட்டிமயல் பூட்டியவன் ஓ ஓ ஓ நல்லவள்சீ
மாட்டியென்று சொல்லவும்நீ மாட்டிவிடு—பாட்டகநாம் 424

சூழிசையில் வல்லவனைச் சுத்திநல்ல முத்தமிட்டோர்
நாளிசைவோ மென்று நழுவவிடு—ஆளழகன் 425

மத்தளக்கா ரன்றனக்கும் வாய்த்ததித்திக் காரனுக்கும்
தித்திக்க வார்த்தைசொல்லி தெத்திக்கோ—வித்தைசொன்ன 426

வாத்தியத்தைக் கொண்டு வாயிளித்தா லேசிடித்து
நேத்தியாய்ச் சென்றுசொல்லி நீயிளிவாய்—சாஸ்த்திரிமார் 427

ஊர்சச் சடங்கவிட்டு ஊமைபோ லேவருவார்
வாய்ச்சத்தம் பேசாம லேயழைத்து—பூச்சுக் 428

களபமுலை யோடிறுக்கிக் கட்டிஞல் போதும்
சளசளென வீரியத்தைத் தானே—ஒளுகவிட்டு 429

நிற்பார் கழுந்ததுபோல் நின்ருலும் நின்பணயம்
தப்பாமல் வாங்கிவிடு தையலரே—அப்பானை 430

உள்ளூர் தலையாரி உத்தண்டியை மாத்திரம்
மெள்ள உறவுபண்ணி விட்டிடுநீ—தெள்ளமுதே 431

தாசிகளைச் சேர்ந்து தசுக்கி முறைமசக்கி
காசு பறித்துவிடுங் கள்ளருண்டு—வாசியூர் 432

குப்பியுட வீட்டிலொரு கோடாங்கிப் பையல்வந்து
மெய்ப்பிதமாய்ச் சேர்ந்து விளையாடி—அப்பாலே 433

வெள்ளை கொடுத்தான் வெறிவலியாள் வீட்டினிலே
உள்ள முதலையெலலாம் ஒரொட்டாய்—மெள்ளப் 434

பறித்தா னவளைப் பறைக்கோல மாக்கி
வெறுத்தான் அல்லாமலு மேவீணன்—குறிச்சியிலே 435

ஆராளுக் கைந்தாலும் அஞ்சாள் கடுரிபெயர்
ஆரா ளெனவிருக்கும் ஆயிழையை—நூறுதரம் 436

கூடிச் சுகித்துமுதல் கொள்ளையிட்டுத் தான்திருடி
ஓடு கொடுத்துவிட்டான் ஊதாரி—தேடியவன் 437

என்வீட்டில் வந்தானவன் பூருவோத் திரமெல்லாம்
துன்மார்க்க னென்றுமனந் தோணியே—நன்மார்க்க 438

மாயழைத்துக் கொண்டேன் மாராயம் பார்த்துவிட்டேன்
வாயிளித்த பேய்ப்படுவான் வண்டனென்று—உபாயமதாய் 439

பட்டப் பகலிலேயும் பண்பாக வந்தவரைத்
தெட்டுதற் கென்பாட்டி செய்திருந்த—பொட்டதுகேள் 440

விஷ்ணுகிரந் தித்தயில மேயிறக்கிக் கொண்டுதந்த
திட்டுமது ஆள்முழுங்கித் திலதம்—இட்டுநான் 441

சோத்திலேயுஞ் சாத்திலேயுஞ் சொக்குப் பொடிகலந்து
சேத்தினேன் கைம்மருந்தில் சிக்கிவிட்டான்—பாழ்த்தபயல் 442

கொண்டுவந்த கைப்பொருளை கொள்ளையிட்டேன் பின்பவனே
குண்டியுங் கோமணமும் கொண்டுசென்முன்—ஒண்டொடியீர் 443

அந்தத் திலதம் அடங்காத பேர்களுன்பால்
வந்தாலும் வேணுமென்று வைத்திருந்தேன்—இந்தா 444

பிடியெனவே கைகொடுத்துப் பின்னையொன்றுஞ் சொக்குப்
பொடிமருந்து மூலிகையின் பூடும்—அடவாகத் 445

தந்துபின்பு இன்னமொன்று சாற்றுகிறேன் தட்டாதே
எந்தவகைச் சாதியென்றும் பாராதே—வந்தவந்த 446

கூன்குருடு முண்டிமுடம் கூறுசெவி மூமைபட்டைப்
பேன்பிடித்த மோடனெனும் பேய்ப்படுவான்—தான்பணத்தைத் 447

தந்தால் விடாதேநம்ம சாதிக் குணம்பணந்தான்
சுந்தரமே யென்றுமிகச் சொல்லவே—அந்தவிதம் 448

கேட்டு மகிழ்ந்து கெலிவாய்க் கிளிமொழியாள்
நாட்டிலுள்ள வாலிபரை நாடியே—தேட்டமுடன் 449

கைப்பிசகி னுலும்அவள் கைமருந்தால் மனை[illegible]
மைடபெடுத்த மொப்பில மயக்கியே—[illegible] 450

காசைப் பறித்தாள் சடுரி அவளுடை[illegible]
ஆசை வலையி லகப்பட்டு—வேசியிடம் 451

மையல்கொண்டு மாப்பிள்ளைமார் வல்ல[illegible]மை சொல்லுகிறேன்
செய்ய பெருமை செந்தமிழீர்—பையக்கேள் 452

கைப்பொருளுந் தோற்றுக் கடைகெட்டுச் சீரழிந்து
மைப்படிந்த கண்ணாள்தன் வாசலிலே—சொற்படிக்கு 453

ஏவல் தொழில்புரிந்து யேங்கிப் பரதவித்துப்
பூவிற் றிடுங்கடையில் புல்லுவிற்ற—பாவனைபோல் 454

மின்னாளை வேறொருவன் மேவுஞ் சுகந்தனைக்கண்
டென்னசெய்வோ மென்று யியம்புவாரும்—பொன்னனையாள் 455

கண்ணிக்குள் சிக்கிக் கைப்பொருளும் போனதல்லால்
எண்ணிக்கை யும்போச்சென் றேங்குவாரும்—பெண்ணரசி 456

ஆசை வலையில் அகப்பட்டேன் என்னுடைய
ரோசமெல்லாம் போச்சென்று நோவாரும்—தேசிகஞ்சேர் 457

வட்டமுலை மின்னரசி மஞ்சள் குளிக்கையிலே
எட்டியெட்டிப் பாத்துமன தேங்குவர்ரும்—தொட்டியில்நீ 458

ராடித் துகிலுடுக்கும் அவ்வேளை ரூபமெல்லாம்
ணடுருவப் பார்த்துமன தோய்வாரும்—தேடரிய 459

மாமாயக் காரி மயக்கத்தில் சிக்கிநித்தம்
பூமாலை கொண்டுவந்து போவாரும்—ஆமாம்கேள் 460

வேல்பிடித்த கண்ணாள் விரகத்தி னாலமயங்கி
கால்பிடிப்பே னென்று கசிவாரும்—பாலுடனே 461

சக்கரையு முப்பழமும் சாதங் கலந்தூட்டி
அக்கரையாய்க் கெஞ்சி அலைவாரும்—பைங்குழலாள் 462

கோவிலுக்குப் போம்பொழுது கூப்பிடுவா னென்றுகையை
நீவித் தலைக்கடையில் நிற்பாரும்—ஆவலினால் 463

பண்டிலுள்ள கைப்பொருளும் பற்றாமல் சூதாடி
தொண்டுபட்டு நின்று துதிப்போரும்—ஒண்டொடியாள் 464

நிற்பதுபோல் சேர்வதுபோல் நிசுதிரையில் கண்டதொரு
செற்றடனத்தில் காரியதலைச் சோரவிட்டு—நிற்போரும் 465

இந்தவிதமெல்லாம் பின்னும்வெகு பேர்கள் கொண்டு
வந்த முதலெல்லாம் இலட்கழித்து—சிந்தனையாய்த் 466

தோசி சுழிக்கேடிக் தொண்டிக்குத் தானளித்த
காசையெல்லா மோர்கோயிலை கட்டினமோ—பூசைமடம் 467

மண்டபங்கள் கட்டினமோ வாவிகுளம் வெட்டினமோ
உண்டுடுத்தி வாழ்வி லுயர்ந்தோமோ—தண்டமிழை 468

பண்பாகச் சொல்வரத பாரதிமுத் தையருக்குத்
தெம்பாகத் தியாகஞ் சொரிந்தோமோ—பெண்சாதிக் 469

காங்கா ரியத்துக் கழகா யுடைமைபண்ணிப்
பாங்கா யலங்கரித்துப் பார்த்தோமோ—ஓங்குபல 470

தானங்கள் செய்தோமோ தன்மத்தைத் தேடினமோ
ஆனவிவ சாயமுறைஞ் சாணேற வேணுமென்று 471

வைத்தோமோ வீடுகட்டி வாழ்ந்தோமோ காசுகொண்டு
வித்தோமோ ஆடுகொண்டு விட்டோமோ—சித்தனைப்போல் 472

வட்டிக்குப் போட்டோமோ மார்க்கந் தெரியாமல்
வெட்டிக் கழித்து விருதாவாய்—பொட்டிமகள் 473

உன்பிராண னுள்ளமட்டும் உள்ளமட்டும் உன்னைவிடேன்
தென்பிதென்று சத்தியஞ்செய் தாளெனவே—அன்பதுபேர் 474

போரடியில் மிக்க புனற்கரையில் அவ்வூரில்
தேரடியில் கோவிலுக்குத் தென்புறத்தில்—ஊர்தோறும் 475

திண்ணைதோறும் மங்கைத் தெருவீதி தோறும்அவள்
நின்னையத்தை யெண்ணி நிற்போரும்—பின்னையுமோர் 476

முக்காடு போட்டு முகத்திலொரு கைசேர்த்து
குக்கி யிருந்து குருகுரென்று—முக்கியமாய் 477

யோசித்துப் பார்த்தாலே ஒன்றும் அறியாமல்
பேசியென்ன வென்று பிதற்றுவாரும்—தோசியெனும் 478

கன்னி சிறுக்கிக்குக் கைநிறையக் கொண்டுவந்த
பொன்னைச் சொரிந்து புணர்ச்சிசெய்த—கண்மையர் 479

ஆடிதளு சூழே ஆனவெல்லாந் தேசுகொண்டு
மாடுதழு மோசமென வைவாரும்—சூடா 480

வேசிக்குக் காசுலிச்சி வேதினெனு தீசுகோணி
மோசமுறு னெனபோத்தி முந்தானே—ஆசையினுத் 481

தொத்துலஞ்சா நாக்கிட்ட சூலைசே சேயெனவே
மெத்த வடுகர் மெலிவோரும்—கைத்தகரில் 482

ராசீபுரஞ் செட்டிமகன் ராசியில்லாத் தாசியெனும்
தோசீ பரவாதி தொண்டியுடன்—நேசம்வைத்த 483

தோசமிப்ப மோர்வாங்கச் சுத்தமாய்ச் 1 சாவண்டைக்
காசுமில்லை யெனறே கலங்குவாரும்—ஆசைகொண்டு 484

கட்டுமட்டாய் வந்தார்கள் கன்னிக்குச் சேர்ந்தபின்பு
கட்டுமெட்டாய்ப் போனார்கள் காணீரோ—விஷ்ணுவிடான் 485

காணிக்கை யைத்திருடிக் கன்னியர்க்குத் தந்தணைந்தே
ஆணிக்கை யாய்ச்சென் றலைவோரும்—வேணதுசெம் 486

பட்டுக் கொடுத்ததற்குப் பாவிமகள் சந்துசந்தாய்
கட்டுக் கொடுத்துவிட்டாள் கண்ணாட்டி—எட்டிமுத்து 487

மாலை கொடுத்ததற்கு மாமாலைக் கள்ளிமகள்
சூலைகொடுத் தாளெனவே சொல்வாரும்—மாலிமையாய் 488

பூறுவோத்திறந் தோணாமல் பொக்கிஷத்தி லேதிருடி
மாறுகைகால வாங்கி மருள்வாரும்—கூறரிய 489

மோகமுச்ச மாகி முயங்கினேன் தேகமெல்லாம்
மேகமுச்ச மாச்சென விளம்புவாரும்—பாகனைய 490

சொல்லாள்மே லாசைகொண்டு துய்யபொருள் தோர்வையல்லால்
கொல்லாமல் கொல்லுதையோ குத்திருமல்—பொல்லாத 491

யீளை யரையாய்ப்பு இடுப்புவலி கண்புகைச்சல்
கோளை வயிற்றுவலி குன்மநோய்—ஆளழகர் 492

1. சாவணடைககாசு—காலகாசு (இது காசுககடை வழககு)

வெள்ளையொடு நீர்க்கடுப்பு மீறி உடலுருக்கி
உள்ளே ரணங்கள் உருகியதால்—தளளாமல 493

வேப்பிலையுங் கையுமாய் வீசிக் கிடந்துலர்ந்து
தோப்பிலையே காத்துத் துடிப்போரும்—பேய்ப்படுவார் 494

சுப்பனென்றுங் குப்பனென்றுந் தோகைதனைச் சேர்ந்தபின்பு
தப்பிலியாய்ப் போனதெல்லாஞ் சாற்றுகிறேன்—சுப்பிரமணிய 495

ஐயனென்றே யொருவன் வந்தவளைச் சேர்ந்துபெயர்
நொய்யனானேன் ஐயா நொடியதனில—பொய்யன் 496

வந்திருக்கி ரான்தவிர வங்காரி வீட்டிலுள்ள
சந்தில் கிடக்கிறான் தான்பாரும்—முந்துகதை 497

இப்படிக்குத் தானடந்த தெற்றபழ னாபுரியூர்க்
கெப்படித்தான் போவீ ரிரவலரே—அப்படியா 498

நன்றாச்சுக் காரியமும் லட்சணமாய்ச் சொல்லுகிறீர்
இன்றாச்சு வேடிக்கைக் கென்னசெய்வேன்—ஒன்றுகேள் 499

தன்னை யறியாமல் தான்விரக மீறிடுமோ
பொன்னை யறியாமல் புதைப்பதுண்டோ—நன்னயமாய் 500

சொன்னீராய் யாவயிரத் தூணிலுருப் பாய்ந்திடுமோ
வெந்நீர் கொதித்துமனை வெந்திடுமோ—பின்னைநம்மை 501

நோய்பிடிக்கு மோசொல் நொடிபிடிக்கு மோசொல்
பேய்பிடிக்கு மோதான் பெருமையாய்—வாய்மடித்துப் 502

பேசுகிறீர் சும்மா பிதற்றுகிறீர் ஐயய்யோ
வீசுகிறீர் வீச்சுவெறு வேச்சென்—றோசனைகள் 503

தோணிலையோ அல்லவென்று தோகையரைத் தெட்டுதற்கு
சாணத்தினந்தத் தசுக்குத் தந்திரமும்—வேணதுண்டு 504

வாருமென்று பூஞைச்சி மாதவருங் கூடியிரு
வோருமாய்த் தென்பழனி யூரில்வந்து—தேர்பார்க்கச் 505

சென்றோம் பழனிச் சிவகிரியா னைத்துதித்து
நின்றோபவே டிக்கையெல்லாம் நேர்பட்டோம்—அன்றைக்கே 506

சாத்திரங்கள் சொன்னபல்லி தான்கழுநீர்ப் பானையிலே
வேத்து நழுவி விழுந்ததுபோல்—நேத்திபேர் 507

மற்றுனுள் சந்நிதிக்குள் வந்தோம் அலங்காரம்
பெற்றமகா மண்டபத்தில் பெண்களுடன்—உற்றதுகேள் 508

காம ரசக்குளிகை கண்ணுடி யென்னுமிந்த
நாமமுள்ள மாது நடம்புரிந்தாள்—நேர்முகமாய்ப் 509

பார்த்தே மருட்டியெனைப் பார்த்தா ளௌனதுடலம்
வேர்த்தே னவளு மென்னை—வேத்தாளென் 510

றையத்தா வென்றுநடஞ் செய்தா ளிவள்சுகம்வந்து
தோயத்தா தாவென்று மனத்தென்பு—செய்தேன் 511

தத்தையென வேதாளஞ் சாற்றினுள் மையல்விழைந்
தத்தையென்ன சொல்வமென்றே தானினைந்தேன்—வித்தாரி 512

ஆதிதா ளம்பகர்ந்தாள் ஆவல்கொண்டு கைச்சுருளில்
பாதிதா வென்றுமுகம் பார்த்துநின்றேன்—கோதை 513

அடதாளம் கைக்கொண்டே ஆடினு ளாகமுமே
இடைநோகு மென்றெண்ணி னேன்யான்—குடைதுவள 514

மட்டையத்தி லேபார்த்த மாத்திரத்தில் வீரியத்தை
விட்டுயரத் தேகவிர யஞ்செய்தாள்—கட்டழகி 515

தேசிகத்தி லேநடித்த மாத்திரத்தில் வீரியத்தை
தேசிகத்தைச் சேருமன் தென்புசெய்தால்—வித்தாசி 516

திருவிடையி லேதாளந் தீர்ந்தாள் எனக்கு
ஒருவிடை தாவென்றே யுரைத்தேன்—அரிய 517

நிலைக்கிடை யி லேபிடித்து நேர்த்தியி னுள்மின்னுள்
முலைக்கிடையில் சேர மோகித்தாள்—துலக்க 518

பத்தாசைத் தாய்பிடித்தாள் பார்த்துமிக வேசுரத
வித்தாசை கொண்டேன் தேகாயி—துருவம் 519

திரிகால முந்தொடங்கிச் செய்தாளே காம
வெறிதாள மாட்டனென்று வேண்டி — முறையிடவே 520

திந்தா னெனத்தாளந் தீர்ந்தாள் சுறும்பாதி
இந்தா தருவனென் றெண்ணினேன் — சுந்தரம்போல் 521

சூளார் விதியேழுஞ் சொன்னு யெனதுமொழி
கேளா விதிமுறையால் கெஞ்சினின்றேன் — தானேன்மால் 522

மேலாகு பாய்ந்துகையை வீசி யுடல்சாய்ந்தாள்
கைலாகு தாண்டிக் கமியென்றேன்—ஒய்யாரி 523

ஆடுவதும் பாடுவதும் ஆடவர்மேல் மோடி
போடுவது மேல்புருவம் போடுவதும்—நீடுகயல் 524

கண்சாடை காட்டுவதும் கைவீசி நீட்டுவதும்
பெண்சாடை மெத்தப் பிலுக்குவதும்—பண்பாகும் 525

பந்தடித் தாப்போலப் பசுங்கிளியாள் நாட்டியஞ்செய்
சந்தடியாள் கூட்டி தான்வந்த—அந்தணனும் 526

பூஜைச்சி ஐயர் புரிந்தார் பெருமைபேர்
தானைச்சு காரியங்கள் சம்பிரமென் —மீனாட்சி 527

சன்னதியில் தட்டந் தனையெடுத்துப் பைங்கொடியாள்
வன்னமுள்ள கோபுரத்தின் வாசல்வந்தாள்—பின்னே 528

துடர்ந்தேன் அவளும் துறுசாய் மனைக்கு
நடந்தாள்பின் னாலே நடந்தேன் —மடந்தையவள் 529

கானவுயிர்ப் பாங்கியிடங் கைமாறி மாமால
பூனையென்றுஞ் சொல்மாயப் பூச்சியென்றும் —மானனையாள் 530

பாசாங்குக் காரி பசப்பிவெகு தோதக்த்தி
மூசாம்பு சொக்கி முறைமுசக்கி—ஆசாரக் 531

கள்ளியென்றும் ஆள்மருட்டுங் காமியென்றும் மீறுசித்ரக்
குள்ளியென்று மோசக் குளிகையென்றும்—உள்ளவர்கள் 532

பத்துப்பேர் தாதியர்கள் பைங்கொடியைச் சூழ்ந்துகொண்டு
சித்திர அரண்மனையிற் செல்லுற்றார்—முத்தத்தே 533

நின்றேன் ஒருவனுமாய் நிற்கின்ற வேளையிலே
ஒண்டொடி மாயப்பூச்சி நாடிவந்தாள்—நின்றவனைக் 534

காரிழையே யிங்குவந்த கண்மணியே யென்னவென்றே
சீருமெவ்வூர் எங்குவந்தீர் நிற்பதென்ன—பேரேது 535

சாற்றுமென்று கேள்கத் தலத்தில் திருப்பதியில்
போற்றுவருஞ் சேஷபட்ட பிள்ளையான் —ஒற்றமுள்ள 536

சேமபட்ட னென்மாமன் சுந்தரமய் யன்தம்பி
மாமயனும் என்னுடைய மைத்துனனும் —ஆமினிக்கேள் 537

பாடல் சகல பலகலையில் வல்லனென்பேர்
சோடசவு தானியென்றுஞ் சொல்வார்கள்—தேடரிய 538

காரிகையே மின்னாள் கணிசமென்ன மாப்பிள்ளைமார்
ஆரெவரு மின்றைக் கறிந்துசொல்வார்—னாரியென்று 539

கேட்டவுடன் கோட்டைக் கில்லேதா ரேவலது
சேட்டைக் குதிரைச் சிப்பாய்கள்—நாட்டிலுள்ள 540

பாளையப்பட் டுத்துரையோ பாற்பதியா லிங்கயனோ
தானாணித் தாசில் தரனோ—ஏழூருஞ் 541

சோமாசிச் சோசியரோ சுப்பிரமணிய தீட்சதரோ
சாமயங்கா ரோமவுனச் சாஸ்த்திரியோ—பாமாலை 542

பாடல் புரியும் வால்பார்த்தி முத்தயனோ
சேடறு இள்ளொருமிச் செட்டியரோ—நீடுதர்ம 543

பூசாரி யோபிள்ளைப் பூஞ்சோலை யோவடவே
லாசாரி முதலியார் தேவரோ—தாசரிக் 544

காரனோ ஊர்மணியக் காரனோ அத்திக்கக்
காரனோ நானறியேன் காணென்று மீறியவள் 545

சொன்னவுடன் பாசாங்கு சொக்கியுடன் தோதகத்தி
பின்னைநின்றா ளோடிவந்து பேசலுற்றாள்—கன்னியர்மேல் 546

ஆவல்கொண்டு வந்தீரோ ஆயிழையைச் சேராமல்
போவதென்ன தூது பொருத்துகிறோம்—தேவர்நமக் 547

கைந்நூறு பொன்னிவள்க் கைந்நூறு பொன்னது
முன்னூறு பொன்கிழட்டு மூரிக்கும்—மின்னாள்க் 548

கெழுநூறு பொன்னாக ஈரா யிரம்பொன்
நழுவாமல் ஓர்முடிப்பு நன்றாய்—வழுவாமல் 549

தந்தாலே நீரே தழுவலாம் வேறொருவர்
வந்தா லுமக்கென்ன வாருமென்றாள்—பிந்தாமல் 550

அப்பவே ஓர்முடிப்பாய் அப்படியே கைக்கொடுத்தேன்
துப்பிதழாள் பால்சென்று சொல்லிவந்தாள்—ஒப்பிதமே 551

ஆச்சென் றெனையும் அரண்மனைக் குள்ளழைத்தாள்
வாச்சுதென்று நானும் மவுனமுடன்—தாட்சணியம் 552

வைக்காமல் சென்றேன் மாயப்பூச்சி பாசாங்கு
சொக்கியுங்கை லாகுதந்து சூழ்ந்துவர—மிக்கான 553

ஆள்மருட்டுங் காமி அடப்ப வரிசையிட்டு
நீள்படிக மும்பிடித்து நின்றிடுவார்—தாள்விளக்கப் 554

பன்னீர் சொறிந்துநிற்கப் பாக்கியங்கள் பெற்றவன்போல்
பொன்னின் அரண்மனைக்குள் போய்ப்புகுந்தேன்—முன்னாலே 555

தந்த முடிப்பதனைத் தானெடுத்துக் கொண்டுமென்பால்
வந்தெதிரே கும்பிட்டு மாதுநல்லாள்—என்துரையே 556

கோவிலிலே கண்டுமயல் கொண்டுழன்று நின்றுமிக
ஓவியம்போல் வீட்டுக் கோடிவந்து—ஆவலினால் 557

கூசாம லீஸ்பரனார் கோவிலிலே நிற்பரய்யா
பேசாமல் மிக்க பிரியமதாய்—பாசாங்குக் 558

காரியுடன் உங்களையும் கண்டழைத்து வாவெனவே
கூறயிவ ளுஞ்செலங் கொண்டுநின்றாள்—பூருவமதில் 559

கும்பிட்ட தெய்வம் குருக்குவந்து நேர்ந்ததுபோல்
தெம்புற்ற நீர்வலிய தென்புவந்தீர்—முன்புவந்தீர் 560

வாக்கியமும் நேற்றிரவில் மல்லிகைப்பூச் சொற்பனமும்
பாக்கியம்போ லிப்போ(து) பலித்துதென—போக்கியமாய் 561

சப்பிரமஞ்சம் மீதிருத்திச் சாமியெனக் கைதொழுதாள்
அப்பெருமை சொல்ல அடங்காது—இப்படிக்கு 562

கானிருக்கும் வேளை நறைத்தகிழ மாமியார்
கூனி யுடலுலைந்து கோணலுடன்—பூனையைப்போல் 563

பம்மியொரு கோலூன்றி பாரத் தலைநடுக்கிக்
கும்மியமுக் காட்டுடனே கும்பிட்டு—நம்மையவள் 564

எந்தூரரோ தேவா எங்கள்குல தெய்வம்போல்
வந்தீரே மாப்பிளைமார் வாருங்கோள்—சந்தோஷம் 565

நான்செய்த புண்ணியமோ நாடோறும் எந்தன்மகள்
தான்செய்த மாதவமோ தானறியேன்—யான்சொலுவேன் 566

பையவே சக்கரையின் பந்தலிலே தேன்மாரி
பெய்த கதைபோலப் பெருமைபெற்றேன்—அய்யரே 567

கானக் குறத்தி கணிச்சுசொன்ன லெட்சணமும்
தானே வலக்கெவுளி சாற்றினதும்—ஆன 568

இடப்பாலித் தும்ம லெழும்பினதும் மிக்க
கொடிக்குறலும் ஆந்தைக் கூக்குறலும்—படித்தவித்தை 569

சூதறியாள் கண்டதொரு சொற்பனமுஞ் சென்மித்த
சாதகத்தி லுள்ளபடி தற்கனையாய்—வேதியரே 570

தூரத்தி லேயிருந்து தொம்பரத்தில் பெற்றபெண்ணை
கோரித்து நீருமையல் கொண்டுவந்தீர்—காரியந்தான் 571

ஏதுந் தெரியாது ஈரா றுளவயது
மாதுருது வாயிஒரு மாதமுண்டு—பேதையையா 572

பொய்த்தட்ட வட்டம் பிரட்டுமுழு வஞ்சனைகள்
செய்யறியாள் சின்னஞ் சிறியவள்தான்—அய்யரே 573

வேத்தாளைக் கண்டதில்லை மின்னாள் ஒருவர்முகம்
பார்த்தறியா ளின்னம் பசலையையா—பூர்த்தியுடன் 574

எப்படியாட் கொள்வீரோ இங்கிதங்கள் தானறியாள்
மெய்ப்பிதமாய் மின்னை மிரட்டாமல்—உற்பனமாய் 575

காரியங்கள் கொண்டால் கணிசமுண்டு தங்களுக்கு
வீரியம்யான் சொல்வதென்ன வேண்டியது—பாருலகில் 576

நீரே புருஷனிந்த நேரிழையே பெண்சாதி
பாரும்ஒ கையருமைப் பைந்தமிழீர்—காரியங்கள் 577

தாதிமார் சொன்னதுவுந் தாய்க்கிழவி சொன்னதுவும்
சாதி முறைமையென்று தானறிந்தேன்—சாதுரியஞ் 578

சொல்லவந்தா ளேகிழவி தூறு தலச்சியென்று
மெல்லக் கபடம்வைக்க வேண்டாங்காண்—வல்லவரே 579

என்றுசொல்லித் தாய்க்கிழவி ஏகினாள் எப்போது
நன்றெனவே காம ரசக்குளிகை—ஒண்டொடியாள் 580

அப்பயங்கார் வீட்டுக் கழைத்துப்போய் அன்னமிடச்
செப்பினாள் அந்தரத்தில் சேமமுடன்—ஒப்பிதமாய் 581

சக்கரையு முப்பழம்பால் தந்தபல காய்கறியும்
தக்க அமுதளித்தார் சாப்பிட்டேன்—மிக்கவே 582

பள்ளி யரைக்கியான் பாங்காக வந்திருந்தேன்
வெள்ளியுபபொன் னுங்கலந்த மெய்யூஞ்சல்—உள்ளபல 583

பூவணையின் பக்கலிலே பூரணகும் பத்தழகும்
மேவ இருபாலில் விளக்கெறியப்—பூவையர்கள் 584

சந்தனமுங் குங்குமமுஞ் சாந்து நறுங்கலவை
பொன்தளிகை யிலகொணர்ந்து பூவைவைத்தாள்—கொந்துடனே 585

சாதிக்கா ஏலம் தகருந்தற் கோலமறு
ஓதியகற் பூர மொடுலவங்கம்—மாதயவாய் 586

சீவு பிளவுடனே செய்யபல வெள்ளிலையுட
ஆவல்பெற வைத்தார்க ளவ் விடத்தில்—பாவனையாய் 587

சித்திரங்க ளொன்றேடொன்று சேர்ந்து கலந்திடுமச்
சித்திரத்தைச் சொன்னல் சிரிப்பார்கள—மற்றதொன்று 588

கெஞ்சுவதும் பின்னையொன்று கேரளலீ லைக்கீதங்கள்
மிஞ்சுவதும் சும்பனத்தில் மீறுவதும்—அஞ்சாறு 589

கால்கள் தலைமாறி கலவிசெயுஞ் சங்கதிகள்
பால்தாப ரணமொன்று பண்ணுவதும்—லீலை 590

கோகரண லீலையுடன் கூடுங் கெசகரண
மோகமதாய்ச் செய்து முயங்குவதும்—வாகாக 591

தாடனங்கள் செய்கின்ற சம்பிரதா யத்தினிலே
ஊடல் புறங்காட்ட ஒதுங்குவதும்—ஆடவர்க்கு 592

முத்தங் கொடுத்து முகத்திலே வைத்துமையல்
பத்திக் கிடக்கும் பதுமைகளும்—வித்தாரம் 593

கண்டால் பசிதீரும் காம ரசக்குளிகை
வண்டாடுஞ் செந்தேன் மலர்க்குழலாள்—கொண்டாடி[1] 594

தம்பூரு மீட்டிநிறை தந்தியிசை கூட்டிமிகத்
தும்புருவர் போலச் சுரநயமாய்—எம்பெருமான் 595

தெய்வக் கொழுந்தர் சிவசங்க மேசர்மிசை
தையல்நல்லாள் கீர்த்தனைகள் தான்படித்தாள்—ஐவர்தொழும் 596

---

1. கண்ணி இன்றி ஒரு எண் மிகுதியாக எழுதப்பட்டுளது.

கச்சியான் மீதினில்சொல் கட்டுடனே விண்ணுன
பச்சைப் பதங்கள் படித்துமனம்—மெச்சிடவே 597

பைங்குயில் போல்கீதம் பாடினுள் வீணைதனில்
இங்கிதங் காதுக் கிசைந்ததினுல்—மங்கைக் 598

கிணையாரும் லோகத்தி லில்லையென்று மெச்சிக்
கணையாழி மோதிரத்தைக் கையில்(ல)—க்ஷணமாக 599

போட்டே னவளும்வெட்கம் போலமிகப் புன்முருவல்
போட்டாள் தனத்தினில்கை போட்டிடவே—கோட்டிசெய்து 600

சந்தனத்தை வாரித் தடவினுள் நானுமவள்
தந்தனத்தில் குங்குமமுஞ் சாந்தணிந்தேன்—முந்தியவள் 601

பாதிச் சுருளைப் பகிர்ந்து கடித்தளித்தாள்
கோதிமலர் சூட்டினேன் கூந்தல்மிசை—மாதரசி 602

முத்தாடிக் கொண்டாள் முகத்தில்முகம் வைத்தணைத்து
முத்தாடிக் கொண்டேன் மோகத்தால்—நத்தி 603

பொத்தாப ரணம்புரிந்தேன் அவ்வேளை யந்த
மாத்திரத்தில் போகம் வளர்ந்தேறும்—ஆத்திரவில் 604

ஆலிங் கனவிதங்கள் ஆய்ந்து பரிந்திடவப்
பாலதிக பானம் பதினென்றும்— சாலவே 605

செய்யத் துடங்கியவள் சேலை தனைநெகிழ்க்கப்
பைய்யவுமென் சோமனில்கை பற்றினுள்—வைத்துஎன்னை 606

சாலமென்ன டாதுரையே சாமி யெனவறிந்தாள்
கோலமதன் மாமதன கோஷ்டிகளாம்—லீலை 607

ஆறுபத்து நால்வகையும் ஆரம்பஞ் செய்தாளே
தீரமுற்ற மன்மத நூல்தேடி—முறைபற்றி 608

மிக்கநகை யாளிடத்தில் மேடபதிப் புக்குரல்கள்
குக்கு குகுவென்றே குமறிடவே—சொக்கிவர 609

நான்புரியுங் காம ரசக்குளிகை மின்ருருந்
தான்சுர தஞ் செய்யுந் தருணத்தில்—வான்படர்ந்து 610

மோகம் வளர்ந்தேறும் முயற்சியால் சோர்விதங்கள்
ஆகிமடி மேல்சாய்ந்தா ளென்னவே—தேகங்கள் 611

விட்டுமொரு நாழிகையின் மேலே நினைப்பாகி
கட்டமுகி சற்றேயங்கே கண்விழித்தாள்—கெட்டியடா 612

சாமிஞ் னுன்னைப்போல் தாரணியில் கண்டதில்லை
காமியபோ கத்திலமூண்ட கரனுனீ—பூமியிலே 613

மாப்பிளை மார்மெத்த வாய்வீச்சுக் காரருண்டு
பேய்ப்படுவார் தங்களுடன் பேசேனுன்—சீப்போவென் 614

றேசுவேனுன் னைப்போலே கையினுல் கண்டதில்லை
காசு பணமுங் கணிசமல்ல—ஆசைதந்த 615

மாப்பிளையே உன் கை மருந்து விதமென்னடா
கூப்பிடுதே வாவென்று கொல்லுதே—ஏய்ப்பதென்ன 616

முத்தங்கேட் டாமுகத்தை முகத்தோ டமுத்தி
எத்துருய் மார்போ டிறுக்கடா—சற்றே சற்றே 617

கொஞ்சடா இன்னமேன் கூச்சமடா லீலைசெய்ய
மிஞ்சடா இன்னொருகால் மேவடா—பஞ்சமா 618

பாதகா தாமிசங்கள் பண்ணுகிருய் இன்னுமென்ன
வாதடா வந்தணைத்து இந்தவிதம்—தாதடர்ந்த 619

மல்லிகையின் முல்லை மறுவுங் கொழுந்தணிந்து
மெல்லிதழின் தேனை மிகப்பருகி—மெல்லியரே 620

யோகத்தி லொன்றும் உயர்ந்த வரத்திலொன்றும்
ஆகத் திரவியத்தை யான்சேத்தி—யேகமாய்ச் 621

சொல்ல மடமாது சுருளை மடித்திதனை
மெல்ல ஒருமாது விளம்பெனவே—நல்லதென்று 622

பாதி பகிர்ந்தளித்துப் பந்து முலைபிடித்து
மோதவிப ரீதமுள்ள மோகத்தால்—பாதசரம் 623

தண்டைக ளோடுஞ்சிறு சதங்கை புலம்புமொலி
கொண்டிட வருங்கனகக் கும்பமென—உண்டதிக 624

சந்தன மணிந்திடுங் தனங்களில் நகம்பதிய
வுந்தயவு வந்தவளு கைந்திடமும்—விந்தை 625

முத்தமித னைப்பிடித்து முத்தமிட் டணைத்திறுக்கி
மெத்தையில் படுத்துமன மெச்சி—ஒத்தவனை 626

வாடிமிக ருடியுற வாடவும்வி டாதேபல
மோடிச் சபாசு போடெனவே—வாடியவள் 627

நூறுவகை கூறிமன நெகிழ்ந்து மனதுமையல்
மீறவெகு நேரம்விப ரீதமொடு—நூறுவிசை 628

கோபியர் தகவே கிறீடி கிறீடியென
ஓர்பனையின் மீதுயர ஊசல்பறி—பாவனைபோல் 629

நாரியரும் யானும் தன்தொழிலில் மீறவெகு
நேரமட்டும் மோகம் மீறலுச்சி—வீறெனவே 630

அகம்புள கிதங்கள் ஆகிச் சலதிவெள்ள
மோகம் பெருகுதடி முன்வழிநூல்—போகமதாய் 631

அந்த ரதிமதனும் ஆரம்பஞ் செய்ததுபோல்
சிந்தைகளி கூர்ந்ததென் செப்புவேன்—வந்துபின்னும் 632

முப்போகம் நன்ருய் முயற்சிசெய்யும் வேளையிலே
தப்பாமல் கோழி சதிசெயவே—மொப்பாக 633

மோக விகாரம்வந்து முடிப்பதால் எந்தனுக்கு
வாகான புத்தி மதிமயங்கி—லோகமெங்கும் 634

ஆதித்தன் வந்தானென் றப்பவவ ளைப்பிரிந்தேன்
சோதித்தேன் தியானமொன்றுந் தோணவில்லை—மீதினயம் 635

அன்பிலு லத்தனையும் ஏந்திழைதன் மஞ்சளினுல்
பொன்பூனு லாச்சுதென்று பூரித்தேன்—அன்புடனே 636

மோகக் கடல்முழுகி முழுகி யனுதினஞ்சை
யோகக் கடலுக்கு உள்புகுந்தேன்—நாகரீகச் 637

சத்தானங் கள்விட்டேன் சந்தியபந் தனமஞ்
சத்தானங்க ளாச்சுதுவிர்த் தாந்தமெல்லாம்—மாணையாள் 638

மாயத்தில் சிக்கி மறுவதல்லால் என்னுடைய
காயத் திரியதனைக் கைவிட்டேன்—நாயகியைப் 639

பத்தாசை கொண்டு பரியாசஞ் செய்வதல்லால்
மத்தியா னந்தன்னை மறந்துவிட்டேன்—சொத்திமின்னுள் 640

மத்தியான பூசை மறப்பதில்லை நால்வேதம்
அத்தியாய மெல்லாம் அகலவிட்டேன்—நித்தியம் 641

சுரதங்கள் செய்யும் தொழில்முறைமை யாலே
விரதங்க ளெல்லாம் வெறுத்தேன் —வரிவிழியாள் 642

யாசிப்ப தல்லால் அணிவேத நாயகியாள்
பூசிப்பது மறந்து போனேன் நான் —தாசியவள் 643

அப்பயங்கா ராத்தில் அமுதளிக்க வந்துசொன்னூர்
செப்பமுடன் போசனஞ் செயும்போது—மெய்ப்பிதஞ்சேர் 644

கன்னிதந்த ஆசையினால் காய்கறிகள் வற்கவகை
இன்ன விதமென்று ரசமறிவேன் —பினையுமோ 645

அல்லும் பகலும் அவள்மேல் தியானமல்லால்
சொல்லுகிறேன் மற்றொன்று தோணுது —மெல்லிபக்க 646

மிப்படியே நானிருந்தேன் ஏந்திழையாள் என்னுடைய
கைப்பொருளை வாங்கக் கருத்துவைத்து —செப்பு 647

நெறிஞ்சிவேர் மாதளைவேர் நெல்லிவேர் ஆற்றில்
சிறிஞ்சவே ருங்கிருமி சத்துரு—கரந்தைவேர் 648

நன்றிவே ரோடுபூ ளைக்காவி ஆமணக்கு
பொன்னு வரைபோனும் போக்கிவேர் —குன்னிசின்னி[1] 649

போட்டுதவ சிழுருங்கை மலேதாங்கி யூமைப்
பூட்டுடனே ஆண்துட பெரிண்துடரி—ஞட்டினிலே 650

தொட்டால் சிணுங்கிவெகு தோதகத்தி ஆடவரை
தெட்டும் பொழுது திலுப்பியுடன் —வெட்டிவேர் 651

பூவடக்கி னுவடக்கி புங்குசங்கு செங்கொழுந்து
தேவதா ரித்தனையும் செமபருத்திப் —பூவுமணத் 652

தக்காளி யும்நாக தாளிசிறு பூளைமணஞ்
சொக்கிவறு வேர்முஞ்சி தும்டை யுடன் —கற்கொழுஞ்சி 653

கோவைபனங் கோவையப்பக் கோவைகருங் கோவைவெள்ளைக்
கோவைவந்த நீலக் கோவையஞ்சே—பூவைகையில் 654

காமப்பூக் குங்குமமும் கம்புசெம்பு தம்புலம்பு
ஓமப்பூ கிராம்பு சுண்ணும்பு—தாமரைப்பூ 655

---

1. இங்கு இருககவேண்டிய எண் 652 -குப் பதிலாக 654 என்றுளது. ஆகவே இங்கு விடுபட்ட (கண்ணிகள்) எண்கள் 2.

சாதிக்காய் வந்ததெல்லாம் தன்மக்களுக் காய்சிறங்காய்
வாலக்காய் காயத் தாணிக்காய்—சூதுசெய்யும் 656

கம்பளத்தா றும்பளத்தில் காய்பழத்தோ டப்பளமும்
சம்பளமும் கொப் பெலுமிச் சம்பளமும்—கொம்புணுணாப் 657

பட்டை இளைஞருடன் பட்டைப் பழையதுசெம்
பட்டைமயிர்க் குருநாப் பட்டையுடன்—குட்டிசெட்டி 658

பாளையத்தி லுள்ளதென்னம் பாளை வளர்ந்தபங்கம்
பாளைபல தாளியத்தன் பாளைசுத்தப்—பாளையவன் 659

காரவர்க்க சீனிக் கார முயர்ந்தபடிக்
கார மழகுசவுக் காரவெங்—காரமலாக் 660

கார மிகுந்திடுபொங் கார முளுதொளிக்
காரமிதுவும் விபகார முபகாரமும்—அப்பால் 661

மாட்டுப் பால்பூக மரத்துப்பா லுங்காட்டுக்
கோட்டைப்பால் வெள்ளாட்டுக் குட்டியின்பால்—ஆட்டுப்பால் 662

தாய்ப்பாலுங் கள்பாலுந் தக்கெலுமிச் சஞ்சாறும்
ஆய்வளஞ் சாருவகைச் சாறும்—போயான 663

காட்டுச் சிரங்கையமு துங்குமரி தன்வயற்றை
சூட்டிக்கிழித் துள்ளிருக்குஞ் சோறெடுத்து—காட்டிலுள்ள 664

வன்னமகச் சேறுயர்ந்து வந்த பனஞ்சோறு
தன்வீட்டில் செய்கருஞ்சா மைச்சோறு—மென்மேலுங் 665

கந்தனையும் போற்றிக் கருப்பனையுந் தான்வளத்தி
செந்தினையா லாளுக்குச் சேத்தியே—மந்தியிட 666

கண்ணுக்கு மூக்கு கரும்பனை யுண்ணாக்கு
புண்ணாக்கு மென்னுடம்பைப் புண்ணாக்கு—நண்ணுகுட்டி 667

பாப்பரணை வால்வெள்வால் பல்லிவா லூர்வெளியில்
கூப்பிடுபோ டும்மோரிக் கூழைவால்—முப்பொரிசேர் 668

ஓந்திப்பிச் சாமையின்பிச் சூர்க்குருவிப் பிச்சுடனே
ஆந்தைப்பிச் சித்தினையெல் லாம்பிச்சுக்—காந்தியுள்ள 669

கெர்ப்பிணியாள் தன்னுடைய கிச்சழுக்குப் பொன்னோலைக்
கெர்ப்பிணியாள் காதின் குரும்பையுடன்—இப்படித்தான் 670

சின்னஞ் சிறிதுவகை எத்தனையோ கொண்டுவந்து
சன்னைசெய்தாள் தன்மகளைத் தாய்க்கிழவி—அன்னவளும் 671

ஆகயோ சித்துமருந் தத்தனையுங் கொண்டுவந்து
பாகமொடு முன்னைசொன்ன பாச்சாரும்—ஏகமதாய் 672

பிள்ளைக் குழவிமண்ணை பேசாமல் கொண்டுவந்து
உள்ளகல் ரந்திரத்தில் ஒன்ருயரைத்து—ஒள்ளியநாள் 673

ஆதித்த வாரமும் அமாவாசை யன்றைக்கி
சாதித்து உண்டையது தான்செய்து—மோதுநிழ 674

லாலே யுணர்த்தியொரு நான்கு நாட்கழித்தப்
பாலே நிறைபசுவின் பாலினையும்—மாலிமையாய் 675

சுண்ணும்பி லுங்கலந்து தோதகத்தி எந்தனுக்கு
நண்ணுய் மருந்தையிட்டாள் நாடோறும்—கண்ணுட்டி 676

கைப்பிசகி னுலுங் கசக்கி மசக்கிவிட்டாள்
இப்படிக்கு நானிருக்கும் ஏகாந்தம்—மெய்ப்பினில்தான் 677

தம்பிக்குக் கலியாணம் தான்செய்ய வேணுமென்ருள்
எண்பது பொன்னுகர மெண்ணிக்கொடுத்தேன்—பின்பொருநாள் 678

சாலமிக தொம்பரத்தில் தாதியர்கள் கூடிவந்து
சேலையில்லை என்று சிணுங்கினுர்—மேலாம் 679

திருவாலி நன்குடியில் தேர்பார்க்கப் போனேன்
தருராம செட்டி கடைதன்னில்—விரிவான 680

முத்துவர்னச் சேலையைந்து முன்சரிகைச் சேலையிலே
பத்துநகை மாதளம்பூப் பட்டாறும்—சித்திரப்பூத் 681

துத்தாறிச் சேலரெண்டு தோரணையாய் வாங்கிவந்து
தத்தாறித் தொண்டியர்க்குத் தான்கொடுத்தேன்—அத்தனையும் 682

முன்னூறு பொன்னுச்சு மோசம்போ னேமெனவே
பின்னேயோ சித்துப் பிதற்றிவிட்டேன்—என்னுணை 683

தாய்க்கிழவி யோர்நாளில் தன்மகளைப் பார்த்ததட்டி
வாய்க்குள் முணுமுணென்று வைதுகொண்டு—பாக்குவெத்திலை 684

வீட்டுச் சிலவுக்கு வேண்டியமுத் தேதியுடன்
கூட்டுமஞ்ச ளில்லையென்று கோதையரே—கேட்டிலையோ 685

என்ற உடனே இருநூறு பொன்முடிப்பை
நின்ற கிழவிகையில் நீட்டிவிட்டேன்—நன்றெனவே 686

வாங்கிச் சிலவுசெய்தாள் மாமியத்தை பின்பொருநாள்
தூங்கையிலே வந்தெழுப்பிச் சொன்னாள்காண்—பாங்காய்த் 687

திருவானி யம்பதியில சித்திரைத் தேருக்கு
இருவோரும் போய்வாரும் ஏற்கக்—கருவூராள் 688

குப்பிமக சுப்பிமுத்தூர் கூளிமுத்துக் காளியுடன்
ஒப்புடனே போனார்கள் ஒன்றாக—அப்படியே 689

நீங்களும்போய்த் தேரில் நிறைந்தவே டிக்கையெல்லாம்
பாங்குடனே பார்த்துப் பரிவெய்தி—ஆங்கருணை 690

மங்களஞ்சேர் காவேரி பவானிநதி யுங்கலந்த
சங்கமுகத் தீர்த்தங்கள் தானாடி—எங்கெங்கும் 691

ஏகவத்து வானசங்க மேஸ்வரனை அன்பாக
நாகரீக மாம்வேத நாயகியை—லோகமெச்ச 692

போற்றித் தவம்பெறலாம் புண்ணியங்கள் தேடலாம்
சாற்றரிய நல்ல தலமாகும்—ஏற்றமுடன் 693

போய்வாரு மென்று புகன்றவுடன் என்னுடைய
நாயகியாம் காம ரசக்குளிகை—நேயமுள்ள 694

தன்னுடனே சொல்லவந்தத் தையலருஞ் சம்மதித்து
பொன்னுடைமை வேண்டியது பூட்டியே—மின்னை 695

அலங்கரித்துத் தாய்க்கிழவி ஆனவட்கு மூவர்
தலங்கள் சேவித்து வந்தானே—நலம்பெறவே 696

கோதமங்க லங்கடந்து கூறரிய ஊதியூர்
மாதவரஞ் சென்னிமலை மார்க்கமாம்—பாதையது 697

காதமரு காதமுமுக் காதங் கடந்துமிக
ஓதுந் திருவானி யூர்புகுந்தோம்—வீதியெங்கும் 698

சோடித்த நேர்த்தியென்ன சொல்வேன் திருத்தேரின்
வேடிக்கை சொன்னால் விபரீதம்—நீடறிய 699

கோபுரமும் செச்சைமதில் கோவில் நிறைமணப்பிர
தாப மிகுந்த தலமாகும்—சோபிதஞ்சேர் 700

பட்டணத்துச் சிங்காரம் பார்க்கப் பசிதீரும்
மட்டுளதோ தேர்பரிசு வந்தசனம்—திட்டமுள்ள 701

நெல்லூர்மாயே நீதிபுரி நேரிழைமார் தன்னழகு
உல்லாசஞ் சொல்ல உவமையில்லை—சல்லாப 702

வங்களத்துப் பெண்கள் வடிவுகளோ மாமால
சிங்களத்துப் பெண்கள் செழிப்போ—துங்கமலே 703

யாளத்துப் பெண்க ளதிரூப கொங்கையைப்போல்
ஈழத்தி லுங்கண்ட தில்லையோ—வாள்விசையாற் 704

பப்பரத் தூற்செய்யும் பற்பவணை யோசெந்தேன்
துப்பிதட்சி ணத்தார் துலுக்குகளே—செப்பமுள்ள 705

குசரத்து மாதர் குறுஞ்சிரிப்பு நேர்த்திகளோ
கெர்ச்சித விலாட கெலிகெலிப்போ—உச்சிதஞ்சேர் 706

சோனக தேசத்தார் அசுமானச் சொகுசுகளோ
ஆன மகதத்தா ரழகுகளோ—நாணயமாய் 707

ஒட்டியத்துப் பெண்கள் ஒழுங்காய் வருமடிக்கோ
நட்டணைப்பாஞ் சால நளினமோ—சிஷ்ட்டர்தொழும் 708

கோகறண தேசத்தார் குலுக்கு மலுக்குகளோ
கேகயத்து மின்னார்கள் தெற்சிதமோ—நாகரீகக் 709

கோசலதே சத்துமின்னார் கூறும் பயிலுகளோ
ஓசையொடு பேசும் ஒயிலுகளோ—வாசமுயர் 710

கொங்கணத்து மாதர் குசலவித்தை யோகலிங்க
சங்கதியாய் வந்த சம்பிரதாயமோ—பொன்குலிங்க 711

தேசத்து ரம்பையர்கள் சிற்றிடைச் சிங்காரமோ
காசிச் சிறுக்கியர்கள் கைவீச்சோ—கூசனையாய் 712

வீரியத் திராவிடனும் மேல்புருவம் போடுவதோ
காரியத்தில் கண்சாடை காட்டுவதோ—பேர்படைத்த 713

தஞ்சாவூர் பெண்கள் தசுக்குவித்தை யோயிந்த
செஞ்சியின் மின்னார் பிலுககுவதோ—மிஞ்சிமயல் 714

தோற்றிய கர்னாடகஸ் தூரிமின்னார் மோடிகளோ
போற்றிய மாராட்டர் புதுமைகளோ—நாற்றிசைக்குள் 715

காரமடைத் தேர்மாதர் கல்விரகி னங்களொடு
வீரியங்கள் கொண்டுமெத்த வீம்பானேன்—காரியத்தில் 716

வீராப்பு மெத்தமெத்த மேனும்பு என்னுடைய
யேராப்புக் கும்எதிர் இல்லையெனக்—கூறுமல் 717

கூடு துறையிலந்தக் கோதையரும் யானும்வினை
யாடிமிகத் தீர்த்தங்க ளாடியே—பாடல்பெறுஞ் 718

சந்நதிக்குள் மிக்கசிவ சம்புசங்க மேஸ்பரனை
நன்னயஞ்சே ரும்வேத நாயகிபாம்—மின்னணங்கு 719

மீனுட்சி யைத்துதிக்கும் வேளைதனி லேபழைய
பூணுச்சி ஐயன் புதுமைபெற—தானெதிரே 720

வந்தா ரெனத்தூண் மறைவில் ஒதுங்க அவர்
பிந்திநமஸ் காரமென்று பேசிநின்றுர்—சந்தோஷம் 721

என்னையா நாவலரே ஏதிந்தக் கோலமுநான்
முன்னைசொன்ன வார்த்தை முடிந்ததோ—என்னவதற் 722

குத்தரவு சொல்லாமல் ஊமைபோல் நின்றுமிரு
கைத்தலத்தை யேமுருக்கக் கண்டுகொண்டு—முத்தமிழீர் 723

ஆனுலு மென்னயினி ஆனமட்டும் பாருமென்று
போனுர் அவரகன்று போனபின்பு—யானுமந்த 724

மங்கையருங் கோபுரத்தின் வாசல் கடந்துரெங்க
(ஐ)யங்கார் வீட்டில் நலம்பெறவே—பொங்கடிசில் 725

சாப்பிட் டிளைப்பாறித் தக்க கடைத்தெருவில்
பூப்பட்டுச் சேலை புராணபுரி—மாப்பிளைபோல் 726

ஆறெழுத்துஞ் சேலை ஆபரண முஷ்த்தேதி
நீள்பவழம் முத்து நிறைந்தரற்றினம்—ஏமூறுச் 727

சீப்பென்றுள் தந்தச் சிமிளென்றுள் நானுமிரு
மாப்புடனே கேட்டதெல்லாம் வாங்கியே—மூப்பியெனும் 728

தாய்க்கிழவி காணமகள் தன்னிடத்தி லேகொடுத்த
மார்க்கமதி லுள்ளபழ வற்கவகை—தேர்கடையில் 729

வேணுமென்றுள் யானுமிக வேண்டியது வாங்கியன்பு
காண மடியதனில் கட்டிவிட்டேன்—நாணுமல் 730

தேர்பார்த்த பின்பாக சென்னிமலை மார்க்கமாய்
ஊர்நோக்கி வந்தோம் ஒருநொடியில்—சீராக 731

ஆம்பிற பதிநதி யாற்றங்கரை யில் யிரங்கி
தீம்புவிலே சமையல் செய்திடவே—பாப்பான 732

தாய்க்கிழவி என்னைத் தயிர்பாலும் வேணுமென்று
போய்க்கொணர்வீ ரென்னப் புகலவே—சீக்கிரமாய் 733

ஓடி வரும்பொழுது உள்ளாக மாயத்தோப்
பாடியொரு மோசம் பண்ணிநின்ருள் —தேடறிய 734

பொன்னனையாள் பூண்டிருந்த பொற்பணியெல் லாங்கழற்றித்
தன்னிடத்தி லேபதனந் தான்செய்து—என்னசெய்வேன் 735

கள்ளர் திருடர்வந்து காத்திருந்து பார்த்தவர்போல்
உள்ள முதலையெல்லாம் ஒரொட்டாய்க்—கொள்ளையிட்டுக் 736

கொண்டார்க ளய்யய்யோ கூகுவென வரற்ற
வண்டார் குழலாளும் வாய்பிதற்ற—ஒண்டிமா 737

போலநிற்கும் வேளையில் நான் மோசடியோ ஏதுஇந்தக்
கோலமென்ன சொல்லென்றேன் கூசிகின்றேன்—சாலவந்த 738

தாய்க்கிழவி நீங்களிப்பத் தானகன்ற வேளையில்துன்
மார்க்கம் நடத்திவைத்தார் வண்டரவர்—மார்க்கமதில் 739

யாரே யெவரோ அறியே னவராற்றித்
தாராள கண்ணீறு தும்பிவிட்டுத்—தோராய 740

மாயங்கள் செய்து வயற்றைப் பிசைந்துகொண்டு
நேமமில்லாள் கையை நெறித்துமே—ஆயிழையே 741

என்னசெய்வேன் யானினிமேல் எப்படிக்குத் தான்பிழைப்பேன்
முன்னைசெய்த பாவம் முடிந்துதோ—இன்னிலத்தில் 742

பண்பாங் கருவூர் பசுபதிலிங் கேஸ்வரனுர்
கண்பார்க்கும் வடிவுடைய நாயகியே—கண்பார்த்து 743

நட்டணையாய் மின்னணங்கு நாட்டியத்தைக் கண்டளித்த
கட்டு வடம்போலக் காண்பேனே—சிட்டர்தொழும் 744

வெஞ்சாம ரக்கூடல் விகுர்தீசர் அன்பருக்கு
நெஞ்சம் இறங்குபண்ணி நேரிழையாள்—வஞ்சமிக 745

பத்தந்தான் வைத்துமிக பாங்கா யவரிசைந்த
உத்தண்ட ரவைபோ லுலகிலுண்டோ—சித்திரக் 746

கொடுமுடியில் வாழும் கோடிசரண மிக்க
வடிவுடைய னுயகி யென்மாதா—படியளந்த 747

வீரநா ராயணரும் மெச்சியருள் முச்சிதஞ்சேர்
ஆரம்போல் செய்வதற்கா சாரியுண்டோ—சீராக 748

தருமுருகன் பூண்டிச் சேரு முருகனுதர்
வருமுயங்கு பூண்முலையின் வல்லி—இருவருந்தான் 749

மெச்சி மனமகிழ்ந்தேன் மின்னுருக் கேயளித்த
பொற்சவடி போல்காணப் போறேனே—இச்சைநிறை 750

புக்கொளியூர் வாழ்வு புரியுமவி னுசிலிங்கர்
மிக்க பெருங்கருணை மீனுட்சி—மைக்குழலாள் 751

மாலிமையா யென்மகளை மெச்சி யளித்தமுத்து
மாலை தனை ஏன்போட்டேன் மாபாவி—சாலயிந்தப் 752

பார்போற்றும் பேரூரில் பட்டீச ரங்கயற்கண்
மாராசி பச்சை மரகதப்பெண்—சீராய் 753

அவனியத்தைக் கண்டே அருள்செய்கொங் தளவோலை
எவனெடுத்துக் கொண்டானே யீனன்—நவமிகுந்த 754

காவிரிப வானிநிறை காயத் திரிதிருநண்
ணுவூர் விதரிவனம் பரவித்—தேவர்தொழும் 755

வேதகிரி யீசர்மிக்க வேயாதி சேவகரும்
நாதசங்க மேஸ்பரனும் நாகரீகம்—மோதிவளர் 756

நாவடர்ந்த சொல்வேத நாயகியா ருங்கொடுத்த
தாவடத்தை ஏன்போட்டேன் சண்டாளி—மூவர்தமிழ் 757

கூட்ட மிகுதிருச்செங் கோட்டரர்த்த நாரீசர்
பூட்டிவிட்ட சீஷரத்னப் பொற்பணியைக்—கேட்டவட்கு 758

மாட்டனென்று சொல்லினுன் வாங்கிவைத்துக் கொள்ளாமல்
மேட்டிமையாய்ப் போட்டுவிட்டு வீணுனேன்—நாட்டினிலே 759

கச்சி யானுமிக்க காமாட்சி யம்மன்மன
மெச்சிமிக என்மகள்தன் விச்சையெல்லாம்—உச்சிதத்தை 760

ஆச்சரிய மாய்ப்பார்த் தருளுநெற்றிச் சுட்டியைப்பொன்
பூச்சியென்றெங் கேயெறிந்து போட்டேனோ—காட்சிதரும் 761

தென்மதுரை மீனாட்சி தேவி மகிழ்ந்துதந்த
பொன்மணியைப் போல்காணப் போரேனோ—என்ன செய்வேன் 762

முத்தண்ணா றங்காளி மோதிரந் தான்பதித்த
ரெத்தினத்தைப் போலே கிடைக்குமோ—சித்திரஞ்சேர் 763

வங்கக் கரிதகிரி வள்ளியம்மை தான்கொடுத்த
தங்கச் சரப்பளிபோல தானுண்டோ—இங்கிதஞ்சேர் 764

ரெத்தினம போல் தெய்வ ஊ தேவி மகிழ்ந்தளித்த
நத்தை யெவனெடுத்து நத்தினனோ—சித்தர்தொழும் 765

ஆதியொரு நாகபுரத் தையன்விச யாசலநீள்
பாதசரம் போலொருவன் பண்ணுவனோ—வேதியரே 766

தேருக்குப் போனபலன் சீக்கிரமாய்க் கிட்டியது
ஊருக்குப் போரேனென ஊதாரி—மோருக்குப் 767

பாலுக்குப் போனீர்நான் பாதகத்தில் செய்தபிழை
மேலுக்கு மேலாய் விளைந்துதென—நாலுவிதம் 768

தாய்க்கிழவி சொல்லி தயங்க அவள்மகளை
பார்கக அவளோயச்சைப் பாம்பாட்டி—முக்கால் 769

மூணாங்கி கண் ணீர்ததும்ப மொட்டை மரம்போலே
கண்டிலுக்குள் நின்றாளே கன்னி—குணங்களெல்லாம் 770

கண்டேன் கிழவிதனைக் கையமைத்தேன் முன்னொருவன்
பண்டுகதை போலப் பறிகொடுத்தாய்—ஒண்டொடியீர் 771

போனதெல்லாம் போகட்டும் பொற்பாக உந்தனுக்கு
மானமிச்ச மானதுவே மாதவங்காண்—ஆனாலும் 772

என்னவென்று சொல்லி இருவரையுந் தானழைத்து
தன்மையாய் ஊருக்குத் தான்வந்தேன்—பொன்னிலை 773

தட்டான் கதித்தமலை தன்கையிலே பொன்பணிக்கு
கெட்டியா யாயிரம்பொன் கொண்டுகட்டி—ஒட்டாகத் 774

தந்தவுடன் வேறுடைமை தன்கையினால் செய்துகொண்டு
வந்தே அதிக வரிசையாய்ப்—பைந்தொடிக்குப் 775

பூட்டினான் யானுமனம் பூரித்தேன் பின்பொருநாள்
கேட்டிலையோ வென்றாள் கிழவிவந்து—வாட்டமுடன் 776

வின்னம் பணிதநல்ல வேலையிலை யென்றளிக்கச்
சொன்னாலல் லாமலுமோ தொண்டியவள் —என்னேரம் 777

கோவிலுக்குப் போவென்றால் கோபிக்கிறாள் கூந்தல்
சீவிமுடித துக்கொளென்றால் சீறுகிறாள் —பாவிகட்டச் 778

சேலையில்லை யென்றே சிணுங்குகிறாள் கொத்துமுத்து
மாலை யிலையென்று வைகிறாள்—நீலியென்று 779

மோட்டக் கிழவிபொல்லா மூசாம்பு சொல்லவுநான்
வீட்டைவிட்டுச் சற்றே வெளியில்வந்தேன் — மூட்டையைந்து 780

சேலத்துக் கோமாளி செட்டிமகன் சுஞ்சிரங்கன்
கோலச் சவுளிநகை கொண்டுவந்தான்—மாலிமையால் 781

வேணமட்டும் பார்த்து விலைதீர்த்தேன் புத்திக்குத்
தோணமட்டும் வாங்கத் துணிந்துகொண்டேன்—வாணகிரி 782

கத்தூரிக் கட்டிசமும் காளவர்னச் சேலைபட்டு
துத்தாரிச் சேலைசல்லாத் துப்பட்டி—முத்துவர்னச் 783

சேலையொடு கண்டை யிட்ட சேலை நிறையெழுத்துச்
சேலை மறுவர்னச் சேலைபத்து—மேலையொடு 784

போர்வை நிறைசரிகை போட்ட ரவிக்கையது
நாலும் விலைதனியே நாற்பதுபொன்—சேலையெல்லாம் 785

முன்னூறு பொன்னாச்சு மூட்டையொன்று தானாச்சு
பின்னாலே நின்றுகன்னி பேசலுற்றாள்—அந்நேரம் 786

கன்னிகையி லேயெடுத்துக் கட்டுடனே தான்கொடுக்க
சன்னைசெய்தா ளங்குசில தாதிவந்து—முன்னை நின்று 787

வாங்கினாள் யானு மனமகிழ்ந்தேன் என்னைமிகத்
தாங்கினாள் மற்றொருநாள் தாட்டினபின்—பாங்கிமுத்து 788

மாலையொன்றும் ஒன்னைப்பூ வாளியொன்றும் கொந்தளப்பொன்
னோலையொன்று மோதிரங்க ருங்கனவும்—காலின் வெள்ளி 789

பாடகமொன் றுஞ்சிலம்பு பாதசர மொன்றுமிக
சூடகங்க ளொன்றுகுப்பித் தொங்கலொன்றும்—தேடறிய 790

அய்யரே தங்கைக்கு அரங்கேற்றிக் கலியாணம்
செய்ய வதற்குச் சிலவுவகை—பொய்யலகாண் 791

பாக்குடனே வெற்றிலை பலசிலவு முஷ்த்தேதி
மேற்கு வருவார்க்கு விருந்தென்றும்—தேர்க்காது 792

நட்டுவன் சங் கீதமொடு நல்லதித்திக் காரனிந்த
முட்டுக்கா ரன்தனக்கு முன்கொடுக்குங்—திட்டமது 793

பாக்குடனே சோமனது பட்டிநகை பத்தெட்டே
ஆகச் சிலவுதுகை ஐம்பதுபொன்—நாகரமாய் 794

சொல்லுமினி யுங்களிட சித்தமினி எப்படியோ
நெல்லென்றும் பிலலென்றும் நெய்க்கென்றும்—நல்லவள்போல் 795

கட்டெருமைக் கென்றும் கரவைமா டென்றும்
செட்டிகுட்டி முறியெழுதிக் கொண்டிருந்தாள்—வட்டியென்றும் 796

பட்டணம் போற்றும் வால்பார்த்தி முத்தயர்க்கு
கட்டுவர்க்க மென்று கதித்தசின்னுஞ்—செட்டிதந்த 797

வாடை பொடிக்கென்றும மாப்பிள்ளைமார் சேர்வதற்குள்
ஆடை துணிகளென்றும் அப்பாலே—நாடறிந்த 798

வெத்திலைக் காரிச்சி விளாமரத்துப் பட்டிமுத்திக்
கெத்தனொரு பாயிலெனை பதென்றும்—முத்தண்ணார் 799

அங்காளி யம்மனுக்கு ஆட்டுக் கிடாயென்றும்
பொங்கலுக்கு நெலலோ பொதியென்றும் செங்காட்டுக் 800

கன்னிமா ருக்குக் கருவளையல் காதோலை
சின்னக் கரியமணிச் சிற்றுடை—சின்னதென்றும் 801

நன்ருய்ப் புகழ்மிகுந்த நாயகி பிரார்த்தனைக்குச்
சொன்ன வபிஷேகஞ் செய்யவென்றும்—ஒண்டொடியாள் 802

எத்தலமும் போற்றுஞ்சங்க மேஸ்பரனர் பூசைக்கு
கொத்துமணி வாங்கிக் கொடுங்களென்றும்—குத்து 803

விளக்கென்றுந் தந்திரமாய் மென்மேலு மென்மேலும்
வழக்கென்றும் போட்டு மறித்துக்—களிப்பெய்தி 804

பின்னும் பரியாசப் பேச்சென்னைப் பேசியவள்
இன்னம் கருங்குதிரை ஏறவென்றும்—வர்னமுள்ள 805

கட்டிலென்றும் மெத்தையென்றும் கண்டிடவே டிக்கையெல்லாம்
கிட்டும் அசுமான கிரிக்கென்றும்—பொட்டிமகள் 806

பைக்கென்றும் மெத்துப் பரிக்கென்றுங் கலியாண
மொய்க்கென்றும் வார்த்துண்ட மோர்க்கென்றும்—முக்கியமாய் 807

வேலிக்கு முள்போட்ட வெள்ளைக் கவுண்ட னு-
கூலிக்கு நீங்கள் கொடுங்களென்றும்—மாலிமையால் 808

கைமருந்தி னாலுமெத்த காய்க்கின்ற வித்தையது
செய்த கிழவிகையில் சிக்கியதால்—பொய்யலகேள் 809

நாள்சிறிது தன்னிலே நானாகக் கொண்டுவந்து
பாழான வெண்கைப் பணத்தையெல்லாம்—வாள்விழியாள் 810

தந்தனத்தை யீய்ந்து தசுக்கு மயக்கியவள்
எந்தனத்தை எல்லாம் இழுத்துவிட்டாள் - சந்தனமும் 811

பூமணமு மில்லாமல் பூவையுன்னைக் குண்டியுடன்
கோமணமாய்ப் போம்படிக்குக் கொள்ளையிட்டாள்—மூவுலகில் 812

கண்டுசிப்பி வேய்கதலி நஞ்சு வரும்போது
கொண்டு கருவழித்த கொள்கைபோல்—ஒண்டொடியாள் 813

போதந் தனங்கல்வி பொன்றிவருங் காலத்தில்
மாதர்மேல் வைக்கும் மனமென்றும்—நீதியவ்வை 814

சொன்ன வசனமது தோனாமல் யானுமிந்த
அன்னநடை மின்னாள்மேல் ஆசைகொண்டேன்—எந்நேரம் 815

காத்திருப்பேன் மோகக் கடுரத்தி னாலேமுகம்
பாத்திருப்பேன் கன்னியையப் பாலேவ்டேன்—சேர்த்தணைத்து 816

கட்டிக் கிடப்பன் கனதேகம் ரெண்டுமொன்றாய்
ஒட்டிக் கிடக்கும் உறுதிதன்னைப்—பொட்டிமகள் 817

[1]விங்கடிக்க வேணுமென்று வேசியர்க்குள் தோசியவள்
சங்கைகெட்ட அத்தையருஞ் சண்டாளி—பங்கமற்ற 818

தொண்டி படுநீலி தோதகத்தி முக்கலச
வண்டியென்ன வந்துதித்த மாமியார்—விண்டக்கேள் 819

1. இங்கு ஒரு கண்ணி விடுபட்டுளது.

பொல்லி சுளிகேளி புழுக்கச்சி யாளேறி
மல்லியென வந்துதித்த மாமியார்—கல்ரிஷபம் 820

சந்ததமுஞ் சொல்லி சரசவித மாய்மகள்பால்
வந்தவரைத் தானழைக்கும் மாமியார்—மந்தைதனில் 821

ஈனமில் லாமலேதான் எருமைபேய்க் கிக்கிணங்கும்
மானமில்லாப் பொல்லாத மாமியார்—நாணமொடு 822

நெய்சாருங் கூந்தலுள்ள நேரிழையைப் பெற்றெடுத்த
வைசாரி யாங்கிளட்டு மாமியார்—நையாண்டி 823

சொல்லுறதுந் தன்மகளை தூறிறதுந் தன்வெறுவாய்
மெல்லுறதும் வார்த்தைசற்றே மீறுவதும்—பொல்லிவசை 824

பேசுவதுஞ் சண்டை பிடிக்கிறதுஞ் சாடையிலே
யேசுவதுங் கோபித் திருக்கிறதும்—வாசலிலே 825

நின்றுமக ளைப்பார்த்து நீலியின்னந் தூங்குவயோ
என்றதட்டி வந்தே எழுப்புவதும்—என்றைக்கும் 826

வீட்டுக்குச் செல் லுகின்ற மேல்சிலவு தான்கொடுக்கும்
ஆட்டையான் செட்டி அலட்டுகிறான்—நுட்டிசெய்யும் 827

சாராயக் காரன்முத்தி சண்டை யிடு ரானிந்த
மாராயக் காரன்வந்து வைகிறான்—சீராக 828

ஆடிநோம் புக்குமொரு ஆடிலலை கோழியில்லை
மூடி முசக்கிட்டே முடக்கிறுவி—வாடியென்று 829

சொன்னவுடன் யானுந் துணுக்கா யெழுந்திருந்து
சன்னையுட னேவெளியில் தான்வந்தேன்—பொன்னையவள் 830

அய்யரே நாலுபணம் ஆறுலும் நீங்கள் தந்தால்
செய்யலாம் நோன்புச் சிலவென்றாள்—கையிலொரு 831

காசளவில் லாது கண்டு தலைகவிழ்ந்து
பேசா திருந்துவிட்டேன் பித்தனைப்போல்—ஆசாரக் 832

கள்ளியும்வாய் கொண்ட மட்டும் கத்தினாளே [1]தீவிர மாய்ச்
சுள்ளிடுரா ளென்று துணிந்துகொண்டு—மெள்ளவே 833

---

1. 'திவிடான' என்பது மூலபாடம்.

வீடுவிட்டுத் திண்ணையதின் மீதினிலே வந்திருந்தேன்
கேடுகெட்ட முண்டை கௌட்டோரி—பாடுபட்டு 834

சாப்பிடுவா யல்லவென்றால் சன்யாசம் போய்விடுவீர்
பேய்ப்படுவாள் நின்று பிதற்றுகிறாள்—மாப்பிள்ளையே 835

வேசி மகள்சுகமும் வெட்டியோ பத்தஞ்சு
காசுதந்தா யோமுற் கடனுண்டோ—பேசி 836

முறியெழுதிக் கொண்டாயோ மோசமில்லை காணும்
வெறிபிடித்தாற் போலே விழுகிறாய்—அறியவோ 837

சேதியென்ன வென்று சிரித்து நகைத்துவைத்து
மோதி யடிக்கவந்தாள் மூதேவி—மாதரெல்லாம் 838

சோறுமிட்டுப் பெண்கள் சுகமுங் கொடுப்பதுண்டோ
பூருவத்தில் பட்டகடன் போலாச்சு—கூறுகெட்டு 839

போறாயோ நில்லாமல் போறாய் பிழைத்தாய்நீ
தானே நடவுமென்று தள்ளவந்தாள்—ஆனாலும் 840

கைப்பொருளுந் தோற்றுக் கனங்கெட்டுச் சீரழிந்தோம்
மற்பிடிக்கிறாளே மதிமுன்னே—தப்பித்துக் 841

கெண்டுகெண்டாய்த் தந்ததெல்லாம் கேள்வியில்லாமல்போச்சு
சண்டையிட வருகிறாள் சண்டாளி—முண்டையிவள் 842

காலுபணம் கேட்டதற்கு நாமில்லை யென்றுசொன்னோம்
நீலி நடவெனவே நிற்கிறாள்—சோலியென்ன 843

சொக்கன் தினவது காதுக் கடுக்கனோடே
மிக்க மனது மிகவெகுண்டு—போக்கிரி 844

முண்டைபடு தேவடியாள் முண்டை அவுசாரி
முண்டைக் கிழட்டோரி முண்டையென்றேன்—சண்டையது 845

போட்டாள் குடுமியில்கை போட்டாள்கன் னத்தில்ரெண்டு
போட்டாள் மடியினிலகை பேட்டிமுத்து—ரூட்டிசெய்தாள் 846

ஒன்றோடொன்றுகட்டி உருண்டு புரண்டுமண்ணைத்
தின்று துகிலுரிந்து சீரழிந்து—முன்றிலதொருங் 847

கீழுமே லாசக் கிடந்துமவள் தேம்புமுலை
ஏழு முழநீள மிருந்ததைகான்—கேளுமெந்தன் 848

கைவாழை யென்றெடுத்துக் கக்கத்தில் வைத்தெழுந்தேன்
வைவாளே சண்டாளி மாபாவி—அய்யய்யோ 849

இப்படிக்கு ரூட்டிசெய்து என்னைமண் ணும் ஏற்றிவைத்துப்
பிற்பாடு விட்டாளே பேய்ப்படுவாள்—சுப்பய்யரே 850

ராமய்யங்கா ரேபடியூர் ரெங்கய்யங்கா ரேகரூர்
சோமய்யங்காரே நாராயண சோசியரே—ராமபத்திர 851

சோசியரே தெத்தாரி சோசியரே மெய்ஞ்ஞான
சோசியரே நீலகண்ட சோசியரே—சேஷகிரி 852

தீட்சதரே சுந்தரய்யா தீட்சதரே காமாட்சி
தீட்சதரே ராமகுப்பா தீட்சதரே—வாச்சாங்க 853

ராயரே வெங்கிட்ட ராயரே சீராம
ராயரே சீரங்க ராயரே—தாயகமாம் 854

பட்டரே சொக்கலிங்க பட்டரே மீனாட்சி
பட்டரே சுப்ரமண்ய பட்டரே—சட்ட முனி 855

அய்யரே பாரதிமுத் தய்யரே உத்தமலிங்
கய்யரே சங்கிரலிங் கய்யரே—பொய்புகலாச் 856

சாஸ்த்திரிமா ரேயெனக்குத் தாயகமா ரேயெனக்குச்
சேர்த்தபுகழ் விப்பிரகுல தேசிகரே—பூர்த்தியுள்ள 857

வேதப் பிராமணரே மிக்க சிவஞானப்
போதத் தபோதனரே புண்ணியரே—சேதியெல்லாம் 858

கேளுமய்யா என் முறையைக் கேளுமய்யா சொல்லுகிறேன்
தாளுமய்யா ஒருநாள் மாலையிலே—மூளியிவள் 859

எந்தூரோ நானறியேன் எங்கேயோ போரவள்போல்
வந்தாள் வழிப்போகி வாசலிலே—அந்திக்கு 860

முப்பளமில் லாமல் போனவரு டத்தினிலே
பாப்பாரப் பையலென்று பட்டினியாய்ச்—சாப்பாடு 861

மில்லாமல் திண்ணைதனி லேயிருந்தோ னென்றெவர்க்குஞ்
சொல்லாம லென்மகளோ சோறிட்டாள்—பொல்லாத 862

பாதகனோ பார்த்தக்கால் பஞ்சைபோ லேயிருந்தான்
மாதருக்குள் மோக வலைகாரன்—போதிநிற்கக் 863

கொம்பிருக்கு மோபின் குளிகையுண்டோ மூலிகையின்
தம்பிருக்கு மோயெநதிர தந்திரமுண்டோ—செம்பிருக்கு 864

மோகினியின் மந்திரமு டுக்கவல் லாதுமே
வாகினியா யென்ன மருந்துண்டோ—போகமுள்ள 865

கைமருந்தா லென்மகளைக் காயக்கஞ் செய்துகொண்டான்
மெய்மறந்தாள் காம வெறிபிடித்தாள்—அய்யரே 866

என்னை மறந்துவிட்டாள் என்றுமுள்ள மாப்பிள்ளை
தன்னை மறந்துவிட்டாள் சண்டாளி—பொன்னையிவன் 867

தந்ததுண்டோ ஓர்காசு தந்ததுண்டா மற்றொருவர்
வந்ததுண்டா இநத வருடத்தில்—அந்தியூர் 868

ராமிசெட்டி யாரையங்கே நாடவொட்டான் பவானிநகர்
சாமய்யங்கார் வந்தால் தழுவவொட்டான்—பாமரன்காண் 869

அன்னவஸ் திரங்கொடுக்கும் அப்பய்யங்கார் வந்தக்கால்
மென்னை பிடிக்கிசமாய் வீற்றிருப்பான்—பின்னையுமான் 870

காகம் பறக்கவொட்டான் கர்மவெகு சண்டாளன்
மோகங் கொடுக்கு முழுத்திருடன்—நாகரீகச் 871

சேலையுண்டாம் ஓர்நாளில் தின்னுதற்குப் பாக்குண்டாம்
மாலையுண்டாம் பெண்குளிக்க மஞ்சளுண்டாம்—மேலுடைமை 872

போட்டானும் நல்லநகை போட்டானும் நாடோறும்
போட்டானும ராவுபகல் பூசைநன்றாய்—போட்டதெல்லாம் 873

தன் முதலி லீரெட்டுச் சல்லிக்கா சென்றளவில்
என்மகளுக் கீந்தானு மென்னமையா—சின்னமச்சுக் 874

குள்ளே இருபொழுதும் ஓயாம லேயிடித்து
வெள்ளை கொடுத்துவிட்டான் வீணனெந்தன்—பிள்ளைதனை 875

கட்டிக் கிடப்பான்முக் காலும் பிரியவொட்டான்
பட்டுக் கிடப்பான் பழிகாரன்—துட்டதெய்வம் 876

மாரியம்மன் கோவிலுக்கு மாவிடிச்சாப் போலிடிப்பான்
வீரியத்தை சற்றே விடானய்யா—காரியத்தில் 877

பாத்தால் பசுப்போலே பாய்ந்தால் புலியதுபோல்
ஆத்தையென்பாள் பேய்மகள்தான் அப்பஎட்டிப்—பார்த்திடுவேன் 878

ஆவென்பாள் போகுதடை ஆவென்பாள் நில்லடாவப்
பாவென்பாள் அய்யரே பாவிவிட்டா—ஓவென்பாள் 879

என்னடா சற்றே இரங்கடா வென்றுசொல்லி
கன்னி பறக்கிறதைக் கண்டுசொல்லி—அந்நேரம் 880

மச்சுக் கதவிடித்து வண்டப் பயலேயென்று
எச்சுத்தொக் காகநான் ஏசினுல்—சீ சீ சீ 881

வருவான் உளுந்தாட்ட வந்த கழுதைபோல்
திரிவான்காண் அப்புறமும் செல்லான்—அறுவைக்குத் 882

தோலோ மரத்துளோ யோகருங்கல் பாறையதோ
சாலமன திரங்கான் சண்டாளன்—மேலேபுளி 883

யந்தளிக்கிவ் வேலைவைப்பான் அய்யய்யோ என்மகள்தான்
எந்தவிதம் பிழைப்பாள் என்செய்வேன்—சந்ததமும் 884

கொக்கோ கொழுக்கவுண்டு கொண்டுடப்பு பூரிதமாய்
செக்கச் சிவந்தபுதுச் செக்குராலும்—கைகொடுத்து 885

குந்தாணி போலிருந்த கோதையிவ னைச்சேர்ந்து
முந்தாணிக் குள்ளே முடங்கினுள்—இந்தவிசை 886

தேகம் பிழைத்தாக்கால் தேவடியா ளாவளென்றே
வோகமென்ன வோயிந்த ஊரில்—பாகமுள்ள 887

பாலைவார்த் துண்டவர்கள் பாளைதனைத் தின்றவர்கள்
சால இருவருக்குந் தன்மமாய்—மேலேநடுச் 888

சொல்லியினி நாலுரெண்டு தோணினமட் டுங்கொடுக்கச்
சொல்லியவ னைப்போகச் சொல்லுங்கள்—அல்லாமல் 889

அப்பயங்கார் வீட்டில் அமுதுபடி உண்டதற்கு
முப்பதுபொன் னுக்கவனை மோதலித்து—இப்பவே 890

தாட்டிவைத்தா லுங்களுக்கு தர்மமய்யா நான்சொன்னுல்
மாட்டனென்று மேலேற வாரான்காண்—கேட்டையளோ 891

என்றுகிழட் டோரிசும்மா இல்லாதெல் லாஞ்சொல்லி
மன்றி லெணையேற்றி வைத்திடவே—அன்றைக்கே 892

அக்கிராா மாதவர்கள் யாவர்களுங் கூடியொரு
மிக்கிவனை யழைத்து வேதியரே—புக்கலிலே 893

வாருமென்று பொல்லாத வைசாரி சொல்லுறதைப்
பாருமென்ரு ரீதுமென்ன பாவமென்ருர்—நீருமகா 894

நல்லவரே மிக்கான நாவலரே சாத்திரத்தில்
வல்லவரே யல்லாமல் மற்றுளதோ—தொல்லையிது 895

செய்யலா மாசெய்தால் சீறலாம் சினந்து
வையலா மாஙமக்கு மானமாம்—மைய்யல்மிஞ்சி 896

எண்ணலா மாவல்லால் இப்படிக்கு யோசனைகள்
பண்ணலா மாஉனது பாக்கியமாம்—உன்னரிய 897

கைப்பொருளைக் கொண்டுவந்து கண்டவர்க்கும் நின்றவர்க்கும்
மைப்படிந்த கண்ணுள் மயக்கத்தால்—இப்படிக்கு 898

தோற்கலா மாவுமக்கு சொல்லலா மாமானம்
போக்கலா மாயென்ன போமாமா—யோக்கியதை 899

என்னமா நாஞ்சொல்வி ராமராம யிந்தச்
சின்னமா மாபார்த்தால் சீராம்—என்னவவர் 900

சொல்லப் பதிலுரைக்கத் தோணும லங்ஙனேயே
மெல்ல நழுவிவந்தேன் வீதியிலே—தொல்லுலகில் 901

வேல்பிடித்த கண்ணூர் வித்தைடழ கப்பழக
பால்புளிக்க மென்ற பழங்கதைபோல்— சாலவந்த 902

ஊர்புளித்து மின்ஞர் உறவு புளித்துமவ்வூர்
நீர்புளித்தா லவளிடம் நில்லாமல்—ஓர்கதையில் 903

கண்ணுடி புக்குங் களிறுஞ் சுறைபணத்தி
உண்ணுடு கின்ற உயர்தனமும்—மண்ணில் 904

ஈனங் கெட்டுநிற்குங் கசடர்பால் சென்ருல்
மானங் கெட்டுநோய் தாக்குவாறென்—றினங்கதையில் 905

வெற்றிலை தின்ஞதான் வாயும் வெறி வலியும்
உற்றோர்பால் செலல உறுவலியும்—பற்றில்லா 906

மங்கைதோள் சேரும் மறுவலியும் இம்மூன்றும்
தெங்கம் பழங்கவர்ந்த சூரனென்றே—முன்கதையில் 907

சொன்ன மொழிசற்றே தோணமல் நாகரீகக்
கன்னியர்கள் மோகக் கடூரத்தால்—எந்நேரம் 908

ஆசைக் கடலில் அழிந்து பொருளிழப்போன்
மோகக் கடலில் முழுகியதால்—யோசித்தேன் 909

[1]ஆனை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்
சேனைத் தலைவராய்ச் சென்றோரு— மேனை 910

வினையுலப்ப வேறுகி வீழ்வார்தான் கொண்ட
மனையாளை மற்றுன் கொளவே—இனிதாக 911

நாலடி யார்சொல் நமக்கே பலித்துதினி
மேலுலக மில்லையென் று மெய்ப்பிதமாய்—ஆலயங்கள் 912

மன்னுகரு வூர்வெஞ்ச மாகூட லுக்கரசை
பொன்னூர் திருமுருகன் பூண்டிநகர்—தென்னூரும் 913

புக்கொளியூர் பேரூர் புனிதநிறை நண்ணூவூர்
சிக்கெனக் கொங்கேழுஞ் சிவாலயமும்—மிக்கபுகழ் 914

மங்கைக் கதித்த மலையானை முத்தண்ணூர்
அங்காளி தன்னையும் அன்பாக—இங்கிதமாய் 915

போற்றித் துதிபுரிந்து பொற்பாய்ப்பத் தும்பதியச்
சாற்றிப் புகழ்ந்து தயவாக—ஏற்றமொடு 916

காரணஞ்சேர் நண்ணூவூர் காவிரிய வானிதனில்
பூரணமாய்த் தீர்த்தம் புனலாடித்—தாரணியில் 917

ஏகவஸ்து வானசங்க மேஸ்பரத் தயாபரனூர்
நாகரீக மாம்வேத நாயகிமேல்—வாகாகப் 918

பைந்தமிழி னல்விறலி பாடியரங் கேற்றிவைத்துச்
சிந்தை மகிழ்வு செழித்திடவே—கொந்தடர்ந்த 919

வில்வங் களைச்சொறிந்து வேண்டித் துதிபுரிந்தேன்
செல்வங் களைச்சொறிந்தால் தியாகமது—கல்விநிறை 920

சந்தான பாக்கியம் சௌபாக்கிய யோக்கியமிக்க
தந்தார் வரிசைபெற்றுத் தாடொழுதேன்—சிந்தையினில் 921

ஆனை குதிரை அழகாஞ் சிவிகைவெகு
மானனை யோக வரிசைபெற்று—மானனையீர் 922

---

1. நாலடியார் 3-ம் பாடல் ' யானை எருத்தம்போல் '

சந்தோஷ மாகத் தலங்களைப்பூ சித்துமெம்மூர்
வந்தேன் தலைக்கடைவா சல்புகுந்தேன்—எந்தனுடை 923

தாளிடுமுன் என்மனைவி தானேவா சல்கதவு
தாளிடுவா யென்றுசொல லத் தாதியரும்—மீளக் 924

கபாட மதுசாத்திக் கனதாளைப் பூட்டிக்
குபாடது செய்யவந்த கோலம்—சபாசெனவே 925

கண்டே னிதுவோர் கதைதா னெனமகிழ்ந்து
கொண்டேன் விறலியெனுங் கோதையே—மண்டலத்தில் 926

முன்னரசர் கண்ட திக மோகமுற வந்துதித்த
மின்னரசி யான விறலியே—பொன்னனைய 927

குன்றிருக்குங் கொங்கை குமரிமத் தப்பயலை
வென்றிருக்கு மோக விறலியே—ஒன்றதுகேள் 928

சொக்கலிங்கர் சுந்தரர்க்கு தூதுசென்றா டல்தவிர்த்த
அக்கதைபோ லென்மனைவி யாளுடல்—பக்குவங்கள் 929

சொல்லிமக ராசிதனை சொல்படிக்கு ராசிசெய்து
மெல்ல வருவாய் விறலியே—வல்லவளும் 930

மிக்க பெருமைசெய்து மீறு குணமாது
பக்கலிலே சென்று பரிவாகிப்—பொற்கொடியே 931

ஆடவர்மேல் கோபமவைப்ப தாருக் கடுக்குமிந்த
நாடு நகரம் நகைக்கும்—தேடறிய 932

கண்ணே அருமைக் கனங்குழலே சிங்காரப்
பெண்ணே அதிரூபப் பெண்மணியே—மண்ணுலகில் 933

மாதர் நடத்தை மரியாதை இல்வாழ்க்கை
சாதுரியப் பாங்கவ்வை தானுரைத்தாள்—கோதை 934

[1]ஏறியென் றெதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதா ளறும்பிணி—அட்டதனை 935

உண்டி யுதவாதாள் இல்வாழ்பேய் இம்மூன்றும்
கொண்டானைக் கொல்லும் படையென்று—பண்டுமுன்னோர் 936

---

1. ' எட்டி ' என்ற ஒரு சொல் மிகுதியாயுளது. இது நாலடியார் 363-ம் பாட்டு

வாக்கியத்தைக் கண்டறிந்தால் வாழ்க்கை நடத்தையில்நன்
மாற்கமதாய் வாழ்வுசெய்தாய் மாதரசே—யோக்கியதை 937

ஆடவரே சொல்லமத யானையென லாமவர்பால்
மோடிசெய்ய லாகாது மொய்குழலே—நீடுமின்னூர் 938

ஆத்து நடத்தை அடக்கம் ஒடுக்கமதாய்
சேர்த்து வெளியதனில் செப்பாமல்—பூர்த்தியுள்ள 939

நாயகமா ரைப்பணிந்து நன்றாய் பூசித்துத்
தாயகமாய் வாழ்வதுவே சத்காரம்—ஞாயமென்றும் 940

நன்னய மாய்விறலி நவிலு மொழிகேட்டு
நின்றாள் அகமகிழ்ந்து நேரிழையாள்—ஒண்டொடியே 941

வாய்த்தப் பிராமணர்தன் அன்பு குண நடத்தை
வாய்த்த புறநிலைமை வாஞ்சன்யம்—யேற்றதொரு 942

இல்வாழ்க்கை கோலம் இணக்கம் ஒழுக்கமின்ப
மில்வாழ்க்கை சொன்னால் சிரிப்பார்கள்—சொல்வேத 943

சாத்திரபு ராணம் சகல கலைக்கியானம்
பாத்தறிந்தால் நல்ல பலனுரைப்பார்—நேத்திபெற 944

ஓதி உணர்ந்தும் பிறர்குறை தாமறியார்
பேதையில் பேதையவ ரெனறும்—ஓதுகுறள் 945

வள்ளுவனார் சொன்னதுபோல் மானேயென் னகமுடையார்
தெள்ளியவிர்த் தாந்தமெலலாஞ் செப்பக்கேள்—வள்ளிமகள் 946

ஆயிமுத்து தன்னை அனுசரித்த சேதியவள்
சேயிமுத்தாள் சொல்லி சிரிக்கிறாள்—நாயமோ 947

நாட்டிலுள்ள பெண்கள் நகைக்கின்றார்—மேலண்டை
வீட்டிலுள்ள பட்டிவசை† (பேசுகின்றாள்—கேட்டுநான்) 948

காதுரெண்டும் பொத்திக் கருத்துள் கசந்துகொண்டு
ஓதுநம் ஆத்தையற் கென்னசொலவோம்—போதுமென்று 949

மான மரியாதை இருந்தமட்டும் அகமுடையார்க்
கானவிடம் பாருமென்று யானுரைத்தேன்—ஆனதினால் 950

† சுவடியில் இல்லை.

என்னாத்துக் கிங்கையவர் ஏற்கா தெனவிபரஞ்
சொன்னா ளெனநீயே சொல்லிவிடு—பொன்விறலி 951

என்றுரைக்க மின்னார் எசமான்றன் பக்கலிலே
சென்றுகுண மாதுசொன்ன சேதியெல்லாம்—ஒன்றொன்றாய். 952

சின்னி விறலிசொல்லப் பாவலரும் யேதுசொல்வார்
மின்னார் மருங்கின் விறலியே—உன்றாலே 953

ஊட லதைவிலக்க உபாயமில்லை யோவுனக்கோர்
சாடைசொல்லிச் சேர்க்கச் சமத்தில்லையோ 954

இதன்பின் ஏடுகள் இல்லை

முற்றும்.